Devi's KANMANI -Tamil Fortnightly october 15, 2008. Re...
TN PMG/CCR/760/06-08 Registered With Registrar of News papers For India
Under No. 49851/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி



எனது முதல் நாவலில் இருநது தொடக்சியாக ஆதரவு அளித்து வரும் கணமணிக்கும். அன்பு வாசகர்களுக்கும வணக்கம்.

காற்றிலும் மெல்லியது காதல் இதைப்பாட கண்களே போதும். உன் வார்த்தைகள் வாயிலைத் தாண்டும் முன் பார்வைகள் இதயத்தை தொட்டு விடு கிறதே! இக்கதையின் நாயகனும் நாயகியும் யதார்த்தத்தை உணர்ந்த வர்கள். வாழ்வை அதன் போக்கிலேயே வாழத் தெரிந்வர்கள.

நீ பூக்களைத் தந்தால், உனக்கு புன்னகை பரிசாகும் ஆம்! அன் பிற்கு எதையும் அடையும் சக்தியுண்டு. அதிக சந்தோஷம். அதிக துக்கம் அதன் பிரதிபலிப்பு கண்ணீர் மட்டுமே! அது சந்தோஷக் கண்ணீராய் இருக்க பிரார்த்திப்போம்.


படித்துவிட்டு விமர்சியுங்கள்!

ஆவலாய்,
லதாசரவணன்
உங்களுடன்

# கண்மணி

எஸ்.லதாசரவணன்

ரூ.7



# சந்தோஷக்கண்ணீரே...!

# சந்தோஷக்கண்ணீரே...!

''நான் உங்களைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். உங்களுக்குச் சம்மதமா? எனக் கேட்ட கதிரவனை வியப்பாய் நோக்கினாள் ஜோதி. அந்த ஒரு நொடியில், அவளைப் பற்றிய சிறு அறிமுகம்.

ஜோதி, நிச்சயதார்த்தத்தை முடித்து விட்டு திருமணத்திற்காய் காத்திருக்கும் பட்டதாரி; முதியோர் இல்லம் ஒன்றில் பணிபுரிபவள், வீட்டிற்கு ஒரே பெண். எத்தனை தைரியமான பெண்ணாய் இருப்பினும் முதல் நாளிலேயே அறிமுகமான ஒருவன் கல்யாணம் செய்து கொள்ளலாமா எனக் கேட்டால் வியந்து போவது இயல்புதானே.

தன் முன் காபியை அலட்சியமாய் உறிஞ்சிய அவனை ஆழமாய் பார்த்தாள். ''மிஸ்டர் கதிரவன்! இந்த பேரைத் தவிர உங்களைப் பற்றி எதுவுமே எனக்குத் தெரியாது. எந்த தைரியத்தில் இப்படி பேசறீங்க?

''இதுதான் உங்க பிரச்சனையா? என் பெயர் கதிரவன் சூர்யா பஸ் அண்ட் மோட்டார்ஸின் போர்ட் ஆப் டைரக்டர்சில் ஒருவன். அக்கா, அண்ணன் மட்டும் எனக்கு! இருவருக்கும் கல்யாணம் ஆயிடுச்சி நான் கடைக்குட்டி. என்ஜினீரியரிங் படிச்சிருக்கேன் இப்ப ஓ.கே.வா.''

''என்ன ஸார் விளையாடறீங்களா?''

''நிச்சயமா இல்லை ஜோதி! ஐயாம் சீரியஸ் எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு!''

''கண்டதும் காதலா?''

''காணாமலே காதலிக்கிற காலம் இது. படிக்கும் காலத்திலும் சரி மற்ற நேரத்திலும் சரி வெறும் புறத் தோற்றத்தில் மயங்குபவன் நானில்லை. ஆனா, உங்களைப் பார்த்ததும் காதல் காத்து மாதிரி நுழைஞ்சிடுச்சு. எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. நான் நினைச்சதை கட்டாயம் அடைந்தே தீருவேன்'' அவன் முகத்தில் தெரிந்த உறுதி ஜோதியை கவலையடைய செய்தது.

''நீங்க இத்தனை சீரியஸா இருக்கிறதாலே நானும் ஒரு உண்மையைச் சொல்லிடறேன். என்னா நாளைக்கு தாடி வைச்சுகிட்டு அலையக் கூடாது பாருங்க.''

அவன் முகத்தில் புன்னகை, ''நான் ரொம்பவும் லக்கி! இப்படி பூச்சி காட்டாம ஓ.கே. சொன்னா சந்தோஷப்படுவேன்.''

''எனக்குத் திருமணம் நிச்சயமாயிடுச்சு ஆதி பில்டர்சில் மானேஜரா இருக்கிற மகேஷ்ங்கிறவரைத்தான் மாப்பிள்ளையா என் பெற்றோர் நிர்மானிச்சு இருக்காங்க,'' சொல்லிவிட்டு தான் ஆர்டர் செய்த காபிக்கானப் பணத்தை டேபிளில் வைத்துவிட்டு எழுந்தாள்.

''ஒரு நிமிடம் ஜோதி! திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது உண்மையானால் நாம் வாழ்க்கையில் இணையலாம்னு நம்பிக்கை எனக்கு இருக்கு!''

''நீங்க உங்க மனசிலே என்ன நினைச்சிகிட்டு இருக்கீங்க? ஒரு மரியாதைக்காக இத்தனை நேரம் உங்க கூட பேசினேன். இதுக்கு மேலே ஏதாவது பேசினா நல்லாயிருக்காது. மைண்ட் இட்!'' ஜோதி வேகமாய் சென்று விட கதிரவன் அவளின் முதுகை வெறித்தான்.

அல்லி மலரும் அருமையான நேரம் முழுங்காலில் கையைக் கட்டியபடி மொட்டை மாடி சுவற்றில் அமர்ந்திருந்தாள் ஜோதி. மனது அன்றைய தினம் நடந்த நிகழ்வுகளை அசை போட்டுக் கொண்டு இருந்தது.

கதிரவனின் குறும்புப் பேச்சும் கறுத்த காந்த விழிகளும் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தன.

எத்தனை ஈர்ப்பு அந்தக் கண்களில் ஆனால், பிடிவாதம் அதிகம் தான். நினைத்ததை சாதிக்கும் உறுதியும் அந்தக் கண்களில் மின்னியதே! அத்து மீறிய பேச்சாய் இருந்தாலும் அதிலும் ஒரு கண்ணியம் இருந்ததை உணர முடிந்தது. மிஞ்சி மிஞ்சிப் போனால் இரண்டு முறைதான் சந்தித்து இருப்பாள். அதற்குள்... இத்தனை வேகமா...!

அந்த முதற் சந்திப்பு ஜோதியின் முன் காட்சியாய் விரிந்தது.

சாரதா முதியோர் இல்லம் வழக்கம் போல் அமைதி தவழும் இடமாய் இருந்தது. இயற்கையான அந்த சூழலில் வாழ்பவர்களின் மனம் நிச்சயம் இலேசானதாகவே இருக்கும் என்பது சந்தேகமற்ற உண்மை.

வயதான ஒரே காரணத்தினால் பிள்ளைகளால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் அளிக்கும் இடம்தான் சாரதா முதியோர் இல்லம்.

அந்த இல்லத்தை நடத்தி வரும் சாரதா அம்மாள் மிகவும் அன்பான பெண்மணி குடும்பம் குழந்தைகள் என்ற உறவுகள் இல்லாமல் எதிர்காலமே கேள்விக் குறியென தவிக்கும் பெண்களுக்கு உதவுவதற்கென்றே தன் சொந்த வாழ்வைத் துறந்து சேவை புரிந்து கொண்டிருக்கும் பெண்மணி.

அவரின் ஆஸ்தான ஊழியைதான் ஜோதி. அவளையும் சேர்த்து அங்கு 13 பேர் பணிபுரிகிறார்கள். இதில் 5 ஆண்களும் அடக்கம். புதிதாக சேருபவர்களின் எண்ணிக்கை, உடைகள், உணவு வழங்குதல், பராமரிப்பு இவையெல்லாம் திறம்பட நடக்கிறதா என்பதை கவனிப்பது தான் அவளின் வேலை.

எப்போதும் போல் அன்றைய தினம் ஜோதி வழக்கமான அலுவலில் இருந்தாள். நேரம் காலை பத்துமணியை நெருங்கிக் கொண்டு இருந்தது. ஆசிரமத்தில் எப்போதும் எல்லோரும் அதிகாலையில் எழுந்து விடும் பழக்கம் உண்டு. காலைக் கடன்களை முடித்ததும் யோகா, குளியல், தியானம், சிற்றுண்டி, பின் பத்திரிகைகள், புத்தகம் படிப்பது, தன்னால் முடிந்த சிறு சிறு உதவிகளை பிறருக்கு செய்து தருதல் என நேரம் போவது தெரியாது.

எஸ். லதா சரவணன்

மதிய உணவிற்குப் பின் சிறிது தூக்கம், காலார நடை, டி.வி., இரவு உணவு உறக்கம் என அங்குள்ளவர்களின் வாழ்க்கை நன்றாகவே போய்க் கொண்டு இருந்தது.

''ஜோதிம்மா, ஸ்டோர் ரூம் சாவியைத் தாங்க. மதிய உணவிற்கு பொருட்களை எடுக்கணும்'' சமையல்கார அன்னம்மாவின் குரலில் லெட்ஜரை மூடி வைத்துவிட்டு சாவியை கொடுத்த ஜோதி, அருகில் கம்ப்யூட்டரைத் தட்டிக் கொண்டு இருந்த ரமாவிடம், ''ஸ்டோர் ரூம் போய் ஒரு ஸ்டாக் லிஸ்ட் எடுத்திட்டு வந்திடு.... தேவையான மளிகையெல்லாம் வாங்கிட்டு வந்திடலாம்... சரியா?''

''ஓ.கே....! ரமா எனப்படும் அந்த பெண் அன்னம்மாளுடன் நடந்தாள். ஜோதி அடுத்த வாரம் நடைபெறப் போகும் ஆண்டு விழா நிகழ்ச்சிக்காக தேவையான ஏற்பாடுகளை கவனிக்கத் தயாராய் இருந்தாள்.

''எக்ஸ்கியூஸ்மீ மேடம், நியூ அட்மிஷன் ஒன்று வந்திருக்காங்க.'' பியூன் வந்து சொல்லிவிட்டுப் போக ஜோதி வரச் சொல்லி சைகை செய்தாள்.

அவன் உள்ளே நுழைந்தான். கருநீல ஜீன்ஸ், வெள்ளை முழு நீலச் சட்டை பார்க்க பளீரென்று பார்த்தவுடன் மனதில் பதியும் முகம், அடர்த்தியான கேசம், கூர்மையான கண்கள், ''மே ஐ கமின்'' வெண்கலக் குரலில் அவன் கேட்க.

''யெஸ்!'' என்று தனக்கே குரல் கேட்காமல் தலையசைத்தாள் ஜோதி.

''குட் மார்னிங் மேம்....''

''மேடம் இந்த இல்லத்தோட நிர்வாகியிடம் பேசணும்''

''மேடம் இப்போ வெளியே போயிருக்காங்க, என்ன விஷயமின்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''இந்தம்மாவை இல்லத்தில் சேர்த்துக்கணும் அதற்கு ஏதாவது பார்மாலிட்டீஸ் இருக்கா?''

அப்போதுதான் அந்தப் பெண்மணியின் மேல் ஜோதியின் பார்வை படிந்தது. கசங்கிய உடையும் கலைந்த கேசமுமாய் அந்த வயதான மூதாட்டி கண்ணுக்குத் தெரிந்தார்.

''இந்த விண்ணப்பத்தை நிரப்பிடுங்க!'' என்றாள். பழுப்புநிற காகிதத்தை நீட்டி அவன் எழுதிக் கொடுத்த பின், ''எவ்வளவு பே பண்ணனும்?''

''மூவாயிரம் ரூபாய், கூடவே அவங்க உபயோகப்படுத்தற அன்றாடப் பொருட்களையெல்லாம் வாங்கித் தந்திடணும்.''

''செக் அக்ஸப்ட் பண்ணிப்பீங்க இல்லையா?''

''ம்...''

அவன் குனிந்து செக்கில் சைன் பண்ணினான். ''இதில் டென்தவுஸண்ட் எழுதியிருக்கேன். எனக்கு கொஞ்சம் அவசர வேலையிருப்பதால் அவங்களுக்குத் தேவையான பொருட்களை நீங்களே வாங்கித் தர முடியுமா?'' என்று அவன் பேசி முடித்த மறு நிமிடம் கோபமாய் நிமிர்ந்தாள் ஜோதி.

''ஏன் மிஸ்டர்? கஷ்டப்பட்டு பெத்து வளர்த்த தாய்க்காக ஒரு ஐந்து



நிமிடம் கூட ஒதுக்க மனசு வரலையா?''

''மேடம்... நான்...!''

''ஒண்ணும் சொல்ல வேண்டாம் ஸார், கொஞ்சம் கூட மனித நேயமே இல்லாத உங்களை மாதிரி ஆளுங்களை பார்க்கவே எனக்கு மனசு வெறுத்துப் போகுது. ஒரு பெண் தாயாகும் போது, எத்தனை பூரிப்பு அடைந்து இருப்பாள். ஒரு உயிரை சுமந்தால்தானே அந்த வலி உங்களுக்குத் தெரியும்.

''எத்தனை கஷ்டப்பட்டு உங்களை வளர்த்து ஆளாக்கி இருப்பாங்க, அந்த நன்றி கொஞ்சமாவது இருக்க வேண்டாமா? உங்களின் இந்த செய்கையால அவங்க மனசு என்ன பாடுபடும் தெரியுமா?''

''மேடம் நான் சொல்றதை கேட்டுட்டு அப்புறமா திட்டுங்களேன், இவங்க என் அம்மா இல்லை''

''பின்னே? விண்ணப்பத்தில் அவங்க மகன்னு கையெழுத்து போட்டு இருக்கீங்களே?''

''நான் ஒரு கான்பிரசுக்காக அடையார் போயிருந்தேன் போற வழியிலே இவங்க குளிரில் நடுங்கியபடி நடைபாதையில் இருந்தாங்க! டாக்டரிடம் அழைத்துக் காண்பிச்சு விசாரிச்சப்போ எனக்கென்று யாரும் இல்லைன்னு சொன்னாங்க, அதான் இங்கே கூட்டி வந்தேன். ரோட்டில் விட்டுப்போக மனசு இல்லை.''

''ஸாரி ஸார்... நான் உங்களைத் தப்பா நினைச்சிட்டேன்.''

''பரவாயில்லை. ஆனா நீங்க பேசின விஷயம் ரொம்ப டச்சிங்கா இருந்தது. என்ன? என்னையும் உட்காரச் சொல்லி இருக்கலாம்.''

அப்போதுதான் வந்த நேரத்தில் இருந்தே அவனை நிற்க வைத்து பேசியதும் தான் அமர்த்தமாய் இருப்பதும் தெரிந்தது.

''ஸாரி சார்! டேக் யுவர் ஸீட் பிளீஸ்! இவங்களுக்கு இங்கே எந்தக் குறையும் இருக்காது. நன்றாக பார்த்துக் கொள்வோம்'' என்று ஆசிரமத்தின் நிகழ்வுகளை கூறினாள்.

நன்றி மேடம்! செக்கை நீட்டியவுடன் மெல்ல அவள் இருக்கையின் முன் குனிந்தவன் ''எளிமை! அன்பு, கருணை மட்டுமில்ல விவரித்துச் சொல்ல முடியாத அழகும் உங்ககிட்ட இருக்கு!'' என குறும்பு சிரிப்பொன்றை உதிர்த்தான்.

வெகு அருகில் கம்பீரமான முகத்துடன் சிவந்த இதழ்களில் மலர்ந்த புன்னகையுடன் உதிர்ந்த அந்தச் சொற்கள் ஜோதியினுள் என்னமோ செய்தது! அவள் பதில் பேசுவதை தவிர்த்தாள். அதன் பின்னர் ஐந்து நாட்களுக்குப் பிறகு இன்று தான் அவனைச் சந்தித்தாள்.

**2**

**வ**ழக்கம் போல் அன்று காலையில் ஜோதி எல்லாருடைய நலன்களையும் பழக்க வழக்கங்களையும் விசாரித்துக் கொண்டு ரெகுலர் செக்கப்பிற்காக வரும் டாக்டர் குணசீலனை தொடர்பு கொள்ள தொலைபேசியை நெருங்கும் போது, அது உயிர்பெற்று ஒலிக்க ஆரம்பித்தது.

''ஹலோ... சாரதா இல்லம்''

''நான் மகேஷ்....''

''சொல்லுங்க...''

''என்னோட போனை இந்த வேளையில் நீ எதிர்பார்க்க வில்லை இல்லையா ஜோதி?''

''என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லுங்க! காலையில் வேலைகள் குவிந்திருக்கும் நேரம்!''

''சரி என்னுடைய பிறந்த நாளுக்கு நான் உனக்கு டிரீட் தரலாம்னு இருக்கேன். நீ கட்டாயம் வரணும்!'' அவன் குரல் உரிமையுடன் ஆணையிடும் தொனியில் ஒலித்தது.

''நான் இன்னும் முடிவு பண்ணலை மகேஷ்''

''என்ன ஜோதி அவனவன் கல்யாணத்துக்கு முன்னாடி எங்கெல்லாமோ போறான். எப்படியெல்லாமோ சுத்துறாங்க அட்லீஸ்ட் என் பர்த்டேக்கு, வர்றதில் என்ன பிரச்சனை?''

''ஸாரி மகேஷ்! நான் எப்பவுமே கண்டபடி வெளியில் போய்வருவது இல்லை. அதில் எனக்கு விருப்பமும் இல்லை.''

''இதுவரையில் சரி! இப்போதான் நமக்கு கல்யாணம் ஆகப் போகுதே''

''இன்னும் ஆகலையே... பிளீஸ்! மகேஷ், நான் என்னோட இயல்புலே இருந்து எப்பவுமே மாறமாட்டேன். நான் வீட்லே கேட்டு சொல்றேன். இப்போ எனக்கு முக்கியமான வேலையிருக்கு.''

''சரி. ஆனா இந்த பிறந்த நாளிற்கு நீ தரும் கிப்ட் தான் ஸ்பெஷல்'' அவன் போனை வைக்கவும்.

பெருமூச்சு விட்டாள் ஜோதி. ''என்ன ஜோதி வுட்பியோட போனா? நீ லக்கிப்பா.''

''ரமா! வேலையைப் பார்ப்போமா டாக்டருக்கு போன் பண்ணு முதல்ல நான் போய் கொஞ்சம் பர்சேஸ் பண்ண வேண்டியிருக்கு''

அந்த ஷாப்பிங் சென்டருக்குள் நுழைந்து, நாளை மறுநாள் நடைபெறப் போகும் கெட் டு கெதருக்காக, தேவையானப் பொருட்கள் அனைத்தும் வாங்கிய பின், அதே காம்ப்ளக்சில்லில் உள்ள கிப்ட் கார்னரில் நுழைந்தாள்.



காத்துவசதி நிறைந்த வீடு..ன்னு வாடகைக்கு எடுத்தது தப்பாப்போச்சு!

ஏன்...?

மேற்கூரையே இல்லை...!

-தேனி.எஸ்.மாரியப்பன்



விதவிதமான கலைப் பொருட்களுக்கு நடுவில் மரத்தாலான கிளை போன்ற அமைப்பில் இரண்டு குருவிகள் தங்களை மறந்த நிலையில் சிரித்துக் கொண்டு இருந்தன. ஏனோ அந்தக் கி செயின் அவளைக் கவர்ந்தது. ஒரு வாழ்த்து அட்டையுடன் அதை இணைத்து, பேக் செய்ய சொல்லிவிட்டு கௌண்டருக்கு விரைந்தாள்.

பார்சலை பெற்றுக் கொண்டு பணத்தை நீட்ட, ''உங்க பில் அல்ரெடி பெய்டு ஆயாச்சு மேடம்'' என்றாள் அந்த யூனிபார்ம் அணிந்த பெண்.

''பே பண்ணிட்டாங்களா... யாரு?''

''ஸார்தான்! அவள் விரல் நீட்டிய திசையில் கதிரவன் புன்கையுடன் நின்றிருந்தான்.

''ஓ...! ஜோதிக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது. ஸார் நீங்களா வாட் எ சார்ப்ரைஸ்!''

அவளின் ஆச்சரியத்திற்கு வெறும் புன்கையை மட்டுமே பதிலளித்த அவன், என்ன மிஸ் சண்டி ராணி. நலம் தானே!''

''நலம்தான். ஆனா என்னோட பில்லுக்கு நீங்க ஏன் பணம் தரணும்?''

''ஒரு சின்ன கிப்ட்டுன்னு வச்சிக்கோயேன்.''

''பரிசு என்றால் பரிசுதான் பெரியது சிறியது வேறா'' அவன் அந்த குறும்புப் பேச்சை ரசித்து சிரித்தான்.

''ஸாரி சார் அன்னைக்கு நீங்க யாருன்னு தெரியாம நான் ஏதேதோ பேசிட்டேன்.''

''ஜோதி அன்னைக்கு, நீங்க பேசின விஷயம் எனக்கு ரொம்ப பிடிச்சு இருந்தது. அதுக்காகத் தான் இந்த கிப்ட்டுன்னு வச்சிக் கோங்களேன்.''

''தேங்ஸ்''

''எங்கே இந்தப் பக்கம்?''

''ஷாப்பிங்தான்... நீங்க..''

''என் மனசுக்கு பிடிச்ச ஒருத்தருக்கு பரிசு வாங்க வந்தேன். காபி சாப்பிடலாமா, வித் யுவர் பர்மிஷன்?'' ஏனோ அவன் அழைப்பினை மறுக்க முடியாமல்தான் சென்றாள்.

ஆனால் காபி வேளையில் கதிரவன் தன்னை திருமணம் செய்து கொள்ள கேட்பான் என்று ஜோதி சற்றும் எதிர்பார்க்க வில்லை. வெளியே கோபப்பட்டாலும் தன்னையும் அறியாமல் உள்ளூர மனதில் மகிழ்ச்சி பூத்தது என்னவோ உண்மைதான். அது அவளுக்கு அச்சமாக இருந்தது. திருமணத்தை எதிர் நோக்கி இருக்கும் பெண், இப்படி மனதை அலைபாய விடக் கூடாதே! அவள் தன் நினைவுகளுக்கு அணைபோட முயலும் நேரம்...

ஜோதி உனக்குப் போன் வந்திருக்கு என அம்மாவின் குரல் கேட்டதும்,

''யாரும்மா?'' என்றபடியே இறங்கி வந்தவளிடம், ''மாப்பிள்ளை'' என வெகு பவ்யமாய் ரிசீவரை அவளிடம் தந்த அம்மா நாகரீகம் கருதி உள்ளே சென்றுவிட,

''ஹலோ... யாரு?''

''நான் மகேஷ்...!''

"என்ன ஜோதி நாளைக்கு நீ கட்டாயம் வருவேயில்லை? எனக்கு பரிசு ரெடியா?"

"இருக்கு மகேஷ்"

"நன்றி, வருவே இல்லையா?"

"நான் இன்னும் வீட்டில் சொல்லலை."

"சரி அவங்க கட்டாயம் ஒத்துப்பாங்க. நீ பீச் ரெஸ்டாரண்டில் மாலை 6 மணிக்கு ஏமாத்திடாம வந்திடு."

ரிசீவரை அதனிடத்தில் பொருத்தி விட்டு, சமையலறைக்குள் சென்றாள். அம்மா இரவு சமையலை முடித்துவிட்டு, பாத்திரங்களை ஒதுக்கிக் கொண்டு இருக்க அருகில் நின்ற மகளைக் கண்டு, "மாப்பிள்ளை என்னம்மா சொன்னாரு?" என்றார்.

"கல்யாணமே இன்னும் நடக்கலை அதுக்குள்ள ஏன் மாப்பிள்ளைன்னு பேசுறீங்க? மகேஷ்ன்னு சொல்ல வேண்டியது தானே?"

கமலா புன்னகையுடன் மகளைப் பார்த்தார். "ஜோதி எதிலேயுமே தொடக்கத்திலேயே ஒரு பிடிப்பு ஏற்பட்டுடணும். அப்பத்தான் எந்த ஒரு மாற்றத்தையும் மனசு எளிதா தாங்கிடும்."

"கமலா! அம்மாவும் பொண்ணும் எவ்வளவு நேரம் தான் பேசிக்கிட்டு இருப்பீங்க பசிக்குதே!"

"இதோ வந்திட்டோம்பா!" உணவுப் பொருட்களை எல்லாம் நடுவில் வைத்து வட்டமாக அமர்ந்தனர். மூன்று பேரும் மெல்ல பேச்சை ஆரம்பித்தபடி உண்டார்கள்.

உருளைக் கிழங்கு வறுவலும், சாம்பாரும் மணத்தது.

"அப்பா?"

"என்னம்மா?"

"மகேஷுக்கு நாளைக்குப் பிறந்த நாள்! விருந்துக்கு என்னை ரெஸ்டாரண்டுக்கு வரச் சொல்லி இருக்கார் போகலேன்னா வருத்தப்படுவார் போல தோணுது!"

ராகவன் மகளின் முகத்தைப் பார்த்தார். "எனக்கு ரொம்ப பெருமையாயிருக்கு, ஜோதிம்மா. பெற்றோர்களிடம் குழந்தைகள் எந்த விஷயத்தையும் மறைக்காமல் சொன்னால் அவர்களுக்குள் நெருக்கமான பாசமிருக்கும் என்பார்கள். அந்த வகையில் நாங்க ரொம்ப அதிர்ஷ்டசாலிகள்."

"ம்... அந்த காலத்துலே நானெல்லாம் உங்கப்பா முகத்தை கல்யாணத்துக்கு பிறகுதான் பார்த்தேன். வீட்டுலே எங்க அத்தை, மாமா முன்னாடி உட்கார்ந்து பேசினது கூட கிடையாது. ஆனா இப்போ நிச்சயம் ஆன உடனேயே பார்க், பீச்சுன்னு ஊர்சுத்த ஆரம்பிச்சிடறாங்க. அந்த வகையில் நீ எவ்வளவோ பரவாயில்லை."

"போங்கம்மா..."

"விடு! கமலா நீ வேற அவளை கிண்டல் செய்துகிட்டு, நீ போயிட்டு வா ஜோதி! இப்போ காலம் மாறிப்போச்சு. இதில் ஒண்ணும் தவறு இல்லை. ஆனா நேரம் தாழ்த்தாமல் சீக்கிரம் வந்திடும்மா."



சாப்பிட்டு விட்டு தாயுடன் சென்று, பாத்திரங்களை ஒதுக்கிவிட்டு உறங்க சென்றாள். உறக்கம் கண்களைத் தழுவ மறுக்க, மகேஷும் கதிரவனும் மாறி மாறி கண்முன் வந்து நின்றார்கள்.

## 3

சாந்தினி காலை நேர சமையலை கவனித்துக் கொண்டு இருந்தாள். பால் பொங்கி அடுப்பில் வழிய அவசரமாய் வெறுங்கையினால் தொட்டு விட்டு கையை உதறிக் கொண்டு பின் துணி கொண்டு தூக்கினாள்.

சூடுபட்ட இடம் எரிந்தது. ஆனால் அதை பொருட்டாய் எண்ணாமல், பிற வேலைகளை கவனித்த போதும் நான் இன்னும் இருக்கிறேன் என்று நினைவூட்டுவது போல் அவ்வப்போது விரல் வலித்தது.

'வலி' இந்த ஒரு வார்த்தையைத்தான் கடந்த ஐந்து வருடங்களாக சாந்தினி அந்தக் குடும்பத்தில் அனுபவித்துக் கொண்டு இருக்கிறாள். திருமணமான புதிதில் அனுசரணையாய் நடந்து கொண்டு இருந்த கணவன் கேசவன் கூட இப்போது எதும் கண்டு கொள்வதில்லை.

சம்பளமில்லாத வேலைக்காரிதான் மருமகள் என்ற வாசகம் சாந்தினிக்காகத்தான் ஏற்பட்டது என்பது போல் எத்தனை அடிகள் அவமானங்கள் கண்களில் நீர் பொங்கி திரையிட்டது.

"என்ன மகாராணி நின்னுகிட்டே தூங்குறியா? டிபன் கொண்டு வர்றியா? இல்லை நான் தட்டைத் தூக்கிட்டு வந்து நிக்கணுமா?" மாமியார் சகுந்தலா தாடகையாய் மாறி கத்திட, பதட்டமாய் வெளியே வந்தாள்.

"ஒரு நிமிஷம் அத்தை! இதோ கொண்டு வந்திடறேன்."

"ஆயிரத் தெட்டு குறைகளோடு சாப்பிட்டு விட்டு எழுந்தாள் சகுந்தலா. நான் பார்வதி வீடு வரைக்கும் போகிறேன். உங்க மாமா கேட்டா சொல்லிடு" வெளியே காரெடுக்கும் சப்தம்.

டைனிங் டேபிளின் மீதே சற்று நேரம் தலை கவிழ்ந்து படுத்துவிட்டாள்.

கேசவன் சாந்தினி திருமணம் நடந்த நேரம் சகுந்தலாவின் குடும்பம் நடுத்தர வர்க்கத்தைத்தான் சேர்ந்திருந்தது. கதிரவன் தொழில் துவங்கிய நேரம் அவனின் கடின உழைப்பினால் நல்ல நிலைமைக்கு வந்து கொண்டிருந்தார்கள். சாந்தினி படித்த பட்டதாரி பெண். அவள் பெற்றோர் நடுத்தர வர்க்கத்தினர் தான்.

வந்த புதிதில் மருமகளிடம் நல்ல முறையில்தான் நடந்து கொண்டாள் சகுந்தலா. ஆனால் செல்வம் பெருகப் பெருக தனக்கும் மேல்தட்டு வர்க்கத்திலிருந்து ஒரு மருமகள் வரவில்லையே என்ற ஆதங்கம் தென்பட்டது. அது சாந்தினியின் மேல் மேலும் காழ்ப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது.

மகன்கள் இருவரும் தாயின் பேச்சுக்கு மறு பேச்சு பேசாதவர்கள். மகள் அகிலாவோ திருமணமாகி கணவனோடு கொல்கத்தாவில் வசிக்கிறாள். சுந்தரம் மனைவி சகுந்தலாவிடம் கோபதாபம் எதையும்

வெளிக்காட்டாத அப்பாவி ஜென்மம். அதனால் அந்த வீட்டில் சகுந்தலாவின் ஆட்சிதான் நடந்தது. சர்வம் அவள் அதிகாரம் தட்டிக் கேட்க என்றில்லை, சுட்டிக்காட்டவும் கூட யாரும் துணியாததால் முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல சாந்தினியின் நல்ல மனதை இன்றுவரை புரிந்து கொள்ளாமல் அதை ரணமாக்கிக் கொண்டு இருப்பதையே வாடிக்கையாக கொண்டு விட்டாள் சகுந்தலா.

சாந்தினிக்கு குழந்தை இல்லாதது வேறு அவள் வாய்க்கு அவல் போல ஆகிவிட தினம் தினம் அவள் வாயாடுவது தொடர்ந்தது. கேசவன் எதைப் பற்றியும் கண்டு கொள்வதில்லை. மாமனார் சுந்தரத்திற்கோ மருமகளுக்காய் கவலைப்பட மட்டுமே முடிந்தது. கதிரவனுக்குத்தான் அண்ணியின் மேல் இனம் புரியா பாசம்.

சாந்தினிக்கும், கொழுந்தனின் மேல் அன்பு அதிகம் தான். அந்த வீட்டில் அவளுக்காய் பரிந்து பேசும் ஒரே ஜீவன் கதிரவன் தான். அவனின் சொல்லுக்கு மட்டுமே சகுந்தலா சற்று அடங்குவாள். வீட்டுக்கு பெருமளவு சம்பாதித்துப் போடுபவன் அல்லவா?

நேரம் பத்தைக் காட்ட கடிகாரம் ஒரு முறை அடித்து ஒலித்தது. கதிரவன் இன்று தான் ஊரிலிருந்து திரும்புகிறான். சாந்தினி மதிய உணவு தயாரிக்க விரைந்தாள். கதிருக்கு கத்திரிக்காய் குழம்புன்னா உயிர். வாணலியில் எண்ணெய் ஊற்றி மசாலாவுடன் கத்திரிக்காயை வதக்கி எடுத்தாள். அது கொதிப்பது போல அவள் இதயமும் கொதித்தது.

ஏஸி ஹால், அதை மீறியும் வியர்த்தது. மகேஷுக்கு ஜோதி வருவாளா மாட்டாளா எனும் டென்ஷன் தலைக்குள் குடைந்து கொண்டிருக்க அவனுள் பரவசம் தன் வருங்கால மனைவியை நினைத்து. நேற்று நண்பர்களுக்கு எல்லாம் பத்திரிக்கை தரும் போது.

''என்னடா கல்யாண மாப்பிள்ளை, நீ மட்டும் உன் ஏஞ்சலைப் பார்த்தா போதுமா? எங்களுக்கு எல்லாம் காமிக்க கூடாதா?''

''நீ வேறடா, நாளைக்கு என் பிறந்த நாள் வெளியே போகலாமின்னு கூப்பிட்டா அப்பாகிட்டே பர்மிஷன் கேட்கணுமின்னு சொல்றா''

''ஓ... உன் வுட்-பி ரொம்ப மூடிடைப்பா?''

''தெரியலைடா. அவ கூட பிரியா பேசற சந்தர்ப்பமே வாய்க்கலை.''

''மகேஷ் கல்யாணத்துக்கு முன்னாடி நீங்க இரண்டு பேரும் மனசு விட்டு பேசிக்கிட்டா ரொம்ப நல்லதுடா. அவங்க லேடி, மனசுலே ஆசைகள் ஆயிரம் இருந்தாலும் வெளிப்படையா சொல்ல மாட்டாங்க. கட்டாயப்படுத்தியேனும் நாளைக்கு வெளியே கூப்பிட்டு பேசு.''

நண்பனின் பேச்சை ஆமோதித்தபடி உடனேயே ஜோதிக்கு தகவலும் சொன்னான். அவன் பதட்டத்தை தவிர்ப்பது போல, தொலைவில் பிங்க் கலர் புடவையில் வந்து கொண்டிருந்தாள்.

''வா ஜோதி நன்றி!''

''எதுக்கு நன்றி?'' அமர்ந்தபடியே கேட்டாள்.

''நான் கூப்பிட்டதும் மறுக்காமல் வந்ததற்கு,'' டேபிளின் மேலிருந்த ஜோதியின் கையை மெல்லப் பற்றினான்.

''ப்ளீஸ் மகேஷ் இதெல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு,'' ''சாரி



ஜோதி'' அவன் சட்டென சுருங்கினான்.

ஜோதிக்கு மனசு வலித்தது. எதையுமே யதார்த்தமாய் புரிந்து கொள்பவள் ஜோதி. ஆனால் மகேஷ் சிறு சிறு விஷயங்களைக் கூட உணர்வு பூர்வமாய் அணுகுகிறான். தனக்கு வர வேண்டிய கணவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நினைப்பெல்லாம் அவளுக்கு இல்லை.

ஆனால் தன் எண்ணத்தில் பாதியாவது மகேஷ் ஈடு கொடுப்பான் என்று அவள் நினைத்தாள்.

தண்டவாளங்கள் ஒத்த நிலையில் இணைந்திருந்தால் தானே இரயில் பயணம் சுகமாகும். ஆனால் ஒரு நூலிழை அளவு கூட அவனுக்கும் தனக்கும் ஒத்துப் போகாதது கண்டு கவலை அடைந்தாள் ஜோதி.

''ஜோதி என்ன சாப்பிடறே?'' ஜோதி கலைந்தாள்.

''உங்க இஷ்டம்'' என்றாள். அருகில் வந்து நின்ற வெயிட்டரிடம் இனிப்பும், ரோல் கேக்கோடு காபியும் ஆர்டர் செய்தான்.

ஹேண்ட் பேகிலிருந்து அந்தப் பார்சலை எடுத்து அவன் முன் நீட்டினாள். ''மெனி மோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆப் தி டே'' என்றாள்.

''தேங் யூ'' என்ற படி ஆசையோடு வாங்கிக் கொண்டவன் இதை நான் வீட்டுக்குப் போய் பிரிச்சிப் பாக்கிறேன்.''

முதலில் பாலேடு ஆர்டர் செய்ய, அந்த மஞ்சள் நிற இனிப்பு இரண்டு கோப்பைகளில் வந்து அவர்களைப் பார்த்து சிரித்தது.

''ப்ளீஸ்.....'' ''ஜோதி இப்படி தனிமையில் சந்தித்தால் நம்மைப் பற்றி புரிந்து கொள்ள ஏதுவாக இருக்குமென்ற நினைத்தேன். ஆனால் நீ மனதை திறந்து பேச மாட்டேங்கிறியே?''

ஜோதி மென்மையான சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு, கரண்டியில் பாலேட்டினை உண்டாள், தொண்டை வரை இனித்தது.

அன்று ஷாப்பிங் சிட்டியில் ஜோதி வாங்கிய பரிசுப் பொருள் கதிரவனிடமும், கதிரவன் தன் காதலை உணர்த்த எழுதிய கடிதமும் பரிசுப் பொருளும் இவளிடமும் மாறி வந்து விட்டதை இவள் உணர்ந்திருக்க நியாயமில்லைதான்.

மகேஷுக்கு அன்றையபொழுது மிகவும் இனிமையானதாய் இருந்தது. ஜோதியுடன் கழித்த அந்த மாலை நேரம் அவன் மனதை பூரித்துப் போக வைத்திருந்தது.



இருபத்திநாலு மணி நேரமும் டி.வியில் காமெடி பார்த்தது என் கணவரை பாதிச்சிருக்கு!

எப்படி...?

தானா சிரிச்சுக்கிட்டே இருக்கார்!

-தேனி.எஸ்.மாரியப்பன்.

ஜோதி! எத்தனை அன்பான அழகான பெண்! அவள் எனக்கு மனைவியாக நினைக்கும் போதே மனம் சிலிர்த்தது. அவன் சராசரி ஆண்மகனைப் போல தனக்கு மனைவியாகப் போகும் அவளையெண்ணி கனவுகளில் மிதந்தான்.

நாலெழுத்து படித்து விட்டாலே நாகரீகம் என்ற பெயரில் எத்தனையோ சீரழிவுகளில் பெண்கள் திரிகிறார்கள். ஆனால் என் ஜோதியோ எத்தனை பவித்ரமானவள். சிகப்பு நிற ரிப்பன் கட்டப்பட்டு இருந்த அந்தப் பரிசுப் பொருளை ஆசையோடு வருடிவிட்டு பிரித்தான்.

பெட்டியின் உள்ளே அழகான தாஜ்மஹால், கண்ணாடியில் காதல் சின்னம்! அதைப் பார்த்தவுடனேயே மகேஷிற்குச் சிலிர்த்தது. வெளியே காட்டிக் கொள்ளவில்லையென்றாலும், என் மேல் எவ்வளவு ஆசை இருந்தால் இதைப் பரிசளித்து இருப்பாள்.

அவன் கண்களுக்கு ஒரு வெள்ளைக் காகிதம் தெரிந்தது. இதென்ன நான்காய் மடிக்கப்பட்ட கடிதம்? படித்து முடித்தவுடன் மகேஷுக்கு கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது. கையிலிருந்து நழுவ இருந்ததை வெகு சிரமப்பட்டு அதை திரும்பப் படித்தான்.

''அன்புள்ள ஜோதிக்கு,

கதிரவன் எழுதிக் கொள்வது. என் மனம் முழுக்க நீதான் வியாபித்து இருக்கிறாய். நம் முதல் சந்திப்பிலேயே நான் என்னை முழுவதும் உன் வசம் ஒப்படைத்து விட்டேன். உனக்கும் என் நிலைதானோ? உன் விழிப் பார்வையிலேயே அதைக் கண்டு கொண்டாலும், வாய் மொழியினால் அதைக் கேட்க விரும்புகிறேன்.

என்றும் என்றென்றும் உன் நினைவில் ஏங்கித் தவிக்கும்

கதிரவன்''.

கடிதம் அத்துடன் முற்றுப் பெற்றிருந்தது. மகேஷ் குழப்பத்தின் உச்சியில் இருந்தான். இது உண்மையா பொய்யா?

ஒரு மொட்டை கடிதமாய் இருந்தால் அதை அப்போதே கிழித்து எறிந்திருப்பான் மகேஷ். ஆனால் தன் பிறந்த நாள் பரிசு என்று ஜோதி தனக்களித்த பார்சலில் இது உள்ளது எனில்.

ஒருவேளை இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தது போல் ஜோதிக்கும், அவனுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ, இது ஜோதிக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பே இல்லை. இதை அவளே எனக்குத் தந்து இருக்கிறாள் என்றால் ஒருவேளை தன் காதலை எனக்கு மறைமுகமாய் தெரிவிக்கிறாளோ!

இதில் எந்த முடிவிற்கும் அவனால் வரமுடியவில்லை. சந்திரனோடு மின்மினியும், ஜோடி போட்டுக் கொண்டு தயாராக இரவு நாடகத்திற்கு மேடை ஏறிக்கொண்டிருந்தாள். அந்தப் பொழுதில் குழப்பத்தோடு தூக்கத்தை தொலைத்திருந்தான் மகேஷ்.

## 4

சாரதா முதியோர் இல்லம், காலை நேரம் 11 மணி. டாக்டர் குணசீலன் ஒவ்வொருத்தராய் பரிசோதித்துக்



கொண்டே வர ஜோதி அவற்றைக் குறித்துக் கொண்டே வந்தாள்.

''என்ன புஷ்பாம்மா இப்போ உங்க மூட்டுவலி தேவலையா?''

''நல்லாயிருக்கு தம்பி! ஆனா எப்பவாவது ஒரு சமயம் உட்கார்ந்து எழுந்திருக்கும்போது சுருக் சுருக்குன்னு வலி தாங்கலைய்யா''

''நான் உங்களுக்குத் தந்த தைலத்தை நாள்தோறும் தடவிக்கிட்டே வாங்க. மாத்திரைகளையும் மறக்காம சாப்பிடுங்க.''

''அதெல்லாம் வேளாவேளைக்கு நம்ம ஜோதி எடுத்து தந்திடும். பெத்த பிள்ளைங்களே விட்டுட்டு போறப்போ, ஜோதி எங்க தாயா மாறி கவனிக்குது! அது இருக்கும் வரையும் எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை.''

''வெரி குட்'' ஒவ்வொரு பெட்டாய் பார்த்துக் கொண்டே வந்தவர் ஆபீஸ் ரூம் வந்ததும், ''ஜோதி இங்கிருக்கிற ஒவ்வொருத்தரும் உன் மேல ரொம்ப அன்பா இருக்கிறாங்க இல்லையா...?''.

''உண்மைதான் டாக்டர், அது என்னுடைய பாக்கியம்.''

''இங்கிருக்கும் எல்லாரும் மனசளவிலேதான் ரொம்பவும் நொந்து போயிருக்காங்க. அந்தக் கவலைகள் உன்னால தீருதுன்னு நெனைக்கும் போது சந்தோஷத்தோடு பெருமையும் வருது. நான் கூட என் வயசான காலத்திலே உன் கண்காணிப்பில் இருந்திடலான்னு நினைக்கிறேன்.''

''போங்க டாக்டர்! நான் என்ன மதர் தெரஸாவா? என்னால முடிந்ததை செய்யுறேன்! நீங்க என்னை ரொம்ப புகழ்றீங்க.''

''நான் வர்றேம்மா'' டாக்டர் கிளம்பவும் ஜோதி தோட்டத்தின் பக்கம் சென்றாள். கதிரவன் கூட்டி வந்து சேர்த்த அந்த பெண்மணி தனியே அமர்ந்து இருந்தார். ஜோதி அவரை நோக்கி சென்று, ''என்னம்மா நீங்க மட்டும் இங்கே தனியா வந்து இருக்கீங்க?'' என்று பரிவோடு கேட்டாள்.

''நான்தான் எப்பவோ தனிமை ஆகிவிட்டேனே. மனசு ரொம்ப பாரமா இருக்கும்மா.''

''இங்கே இருக்கிற ஒவ்வொருத்தருக்கும் ஏதாவது ஒரு பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. இப்படி தனியா இருக்கிறதை விட எல்லோரோடும் சேர்ந்து பழகினா மனபாரமும் குறையுமே'' எனக்கு மட்டும் கடவுள் இத்தனை துன்பங்களை தாராருன்னு. நினைக்கும் போதுதான் மனதில் சுமையும் அதிகமாகிவிடும் இல்லையா?''

''மற்றவங்களின் கவலையை பார்க்கும்போது நம்மோட நிலையே தேவலைன்னு நினைச்சிக்க வேண்டியதுதானேம்மா. அதோ போறாங்களே மிஸஸ். மேரி! இவங்க வேற இனத்தை சேர்ந்தவங்களைக் கல்யாணம் செய்ய ஊரும் உறவும் ஒதுக்கிடுச்சு!''

''கல்யாணம் ஆகி குழந்தையில்லாம முப்பது வருஷத்திற்கும் மேலே அன்னியோன்யமா வாழ்ந்தாங்க. அவர் இறந்ததும், இவங்க எந்த உறவுகள் கிட்டேயும் போகாம இங்கே வந்துட்டாங்க!''

இவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதே அங்கே மற்ற இரண்டு பேரும் வந்தனர்.

''ஜோதி சொல்றது உண்மைதான்மா என்னையே எடுத்துக்கோ கஷ்டப்பட்டு என் பிள்ளைகளை வளர்த்தேன். வயசு இருக்கிறவரை என் உழைப்பை எடுத்துகிட்டு முடியலைன்னு ஆனப்போ இங்கே கொண்டு

வந்து சேர்த்துட்டாங்க.''

''நீ எவ்வளவோ பரவாயில்லை ஜெயா! பிள்ளைங்கன்னு சொல்லிக்காவது ஆறு மாதத்திற்கு ஒருமுறை யாராவது பார்க்க வர்றாங்க. ஆனா எனக்கு- நானும், அவரும் ஒத்தபிள்ளைன்னு அன்பை கொட்டி வளர்த்தோம் அவன் என்னடான்னா யாரோ ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிகிட்டு எங்களை நட்டாத்திலே விட்டுட்டுப் போயிட்டான். இப்போ எங்கே இருக்கிறான்னு கூடத் தெரியலை.'' அந்த மூதாட்டியின் கண்களில் கண்ணீர்.

புதிதாக வந்த அந்தப் பெண்மணியும் வாய் திறந்தார். ''கிட்டத்தட்ட இதே மாதிரி பிரச்சனைதான் என் வாழ்விலும்! என் கணவர் இறந்தபிறகு, பிள்ளையை கஷ்டப்பட்டு வளர்த்தேன். அவன் ஒரு பணக்காரப் பெண்ணை கல்யாணம் பண்ணிகிட்டு வீட்டோடு மாப்பிள்ளையா போயிட்டான்!''

பெத்த மனசு கேக்கலை அவன் பிறந்தநாளுக்காக எம்பிள்ளைக்கு பிடிக்குமேன்னு அவல், இனிப்பு, புட்டு செய்து கொண்டு போனேன். அங்கு கூடியிருந்த பெரிய மனுஷங்களுக்கு முன்னாடி இந்த ஏழையை அம்மான்னு சொல்ல வெட்கப்பட்டு வாட்ச்மேனை விட்டு வேலைக்காரங்களோட அவுட்அவுசில் உட்கார வச்சான்!

மனசு வெறுத்துப் போச்சு தாயி! அவன் முகத்தில் இனி முழிக்கவே கூடாதுன்னு வெளியேறி வந்துட்டேன்! பசி, களைப்பால ரோட்டோரம் மயங்கி சோர்ந்து கிடந்தேன். யாரோ பெத்த பிள்ளை அந்த தம்பி வந்து எம்மேல இரக்கப்பட்டு என்னைக் கொண்டு வந்து சேர்த்திட்டு போச்சு. பெத்த பிள்ளை கூட என்னை அம்மான்னு சொல்லலை! ஆனா அந்தப் பிள்ளை...! எங்கிருந்தாலும் அது நல்லா இருக்கணும்...''

அந்தப் பெண்மணியின் பேச்சு ஜோதியை சற்றே அசைத்தது. பாவம் கதிரவன்! இத்தனை நல்லவர், வேறு ஒருவருக்கு நிச்சயம் ஆன என்னை தன் மனதில் ஏன் வைத்துக்கொண்டு தவிக்கணும்?

பெருமூச்சோடு ''பழையதையெல்லாம் மறந்திடுங்க. இங்கே நீங்க சுதந்திரமா இருக்கலாம். மதிய உணவு தயார் ஆயிடுத்து போய் சாப்பிடுங்க.'' என்று ஜோதி சொல்லவும்.



வீட்டைப்பற்றி நீங்கள் கவலைப் படுறதே இல்லை. எல்லா வேலையும் நானே செய்யவேண்டியதிருக்கு

இனி அந்த கவலையே உனக்கு வேண்டாம். வீட்டை வித்தாச்சு.

– எம்.எஸ்.



ஜோதி ''உனக்கு போன் யாரோ ரமேஷாம்!'' ஆபீஸ் ரூம் வாசலில் இருந்து ராதா குரல் கொடுக்க விரைந்தாள். மனதிற்குள் ஒரு எரிச்சல் மண்டியது.

''ஹலோ...!''

''நான் மகேஷ்..''

''சொல்லுங்க மகேஷ்! என்ன விஷயம்?''

ஜோதி நான் உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்! ஹோட்டல் சன்விலாஸில் சவுனிங் ஆறு மணிக்கு நான் வெயிட் பண்ணிகிட்டு இருப்பேன்.''

''மகேஷ் நீங்க இப்படி செய்யறது நல்லாயில்லை. அன்னைக்கு வர்றதுக்கே நான் அப்பாகிட்டே பர்மிஷன் கேக்கிறதுக்குள்ளே ரொம்ப தெர்வர்ஸா இருந்தது.''

''அம்மா அப்பாவை கேட்காம நீ எதுவுமே செய்றது இல்லையா?''

''என்ன பேசறீங்க மகேஷ்!''

''வீண் பேச்சு எதற்கு? இது ரொம்பவும் முக்கியம். நம்ம எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கிற விஷயம். ஜஸ்ட் ஆப் அன் அவர்தான்! ''லைனை கட் பண்ணிவிட்டான்.''

ஜோதிக்கு எரிச்சலோடு கோபமாய் வந்தது.

இவர் இஷ்டத்திற்கு என்னை அலைக்கழிக்கிறாரே? உனக்கு விருப்பமா இல்லையாவென்று ஒரு கர்ட்டஸிக்கு கூட கேட்காமல் ஆணை பிறப்பிப்பது போல் பேசிவிட்டு போனை வைத்துவிட்டால் என்ன அர்த்தம்?

அவளுக்கு கவலையாய் இருந்தது. சின்ன நாகரீக எண்ணம் கூட இல்லாத மகேஷுடன் காலம் முழுக்க திருமண வாழ்வு சாத்தியமா என்ற பய பந்து ஒன்று தொண்டைக்குழிக்குள் உருண்டது.

நான் விரும்பவில்லை என்று சொன்னபோது கூட கதிரவனின் செய்கை எத்தனை இதமாய் இருந்தது. அவனுடன் தன் வாழ்வு இணையாதது விதியின் வேடிக்கைதான் போலும். இன்று போவோமா வேண்டாமா என்று யோசித்தவள்.

அப்படி என்னதான் முக்கியமான விஷயம் என்று கேட்டு விட்டுத்தான் வருவோமே என்ற கணிப்பில் போகத் தீர்மானித்தாள். விதி

அங்கும் கதிரவன் வடிவில் குறுக்கே வந்தது.

## 5

ஓட்டல் சன் விலாஸ் பெயருக்கேற்ப பிரகாசமாய் இருந்தது. ஆங்காங்கே தனித்தனியாய் நாற்காலிகள் அங்கே குழுக்களாய் மக்கள், ஜீன்ஸும், டாப்ஸுமாய் பெண்கள், அவர்களைத் தூக்கும் ஆண்கள், நுனிநாக்கில் ஆங்கிலமும் அசட்டையான உடையும் இப்படியும் ஒரு உலகம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது போலும் என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள் ஜோதி.

கல்லூரியில் படிக்கும்போது கூட சக மாணவர்கள் பேட்டிங் அது இது

என்று சுற்றும்போதும் இவள் மட்டும் படிப்பு விட்டால் வீடு என்ற வகையில்தான் இருந்திருக்கிறாள். இந்த அழகில் இப்படியொரு இடத்திற்கும் வர நேர்ந்து விட்டதே. எல்லோரும் அவளையே பார்ப்பது போல் ஒரு குறுகுறுப்பு நெஞ்சினுள் ஓடியது.

சற்றே ஒதுங்கிய இடம் தேடி அமர்ந்தாள். அருகில் பிரம்மாண்டமான மீன்தொட்டி சுவற்றில் பதிக்கப்பட்டு இருந்தது. வண்ண மயமான மீன்கள், சிறிசும் பெரிசுமாய் ஒன்றையொன்று முந்திக் கொண்டு ஓடித் திரிவதும் நீரின் அடியில் சிறுசிறு கூழாங்கற்கள் பாசிகள் என்று லைட் செட்டிங்கேடு பார்க்கவே ரம்மியமாய் இருந்தது.

''ஹலோ ஜோதி! இங்கேயென்ன மீனை முறைச்சி பார்த்திட்டு இருக்கீங்க. உங்களை விட அழகாக இருக்கேன்னு கோபமா.''

அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் ஜோதி!

அங்கு கருநீல புல் சூட்டில் கதிரவன் நின்றிருந்தான். அவள் புரியாமல் பார்த்தாள். சர்வ நிச்சயமாய் அச்சூழலில் கதிரவனை அங்கு பார்ப்போம் என்று எதிர்பார்க்கவில்லை.

அவளுடைய அனுமதியில்லாமலே டேபிளின் எதிரே அமர்ந்தவன். ''மும்பையில் இருந்து இன்று காலையில்தான் இங்கு வந்தேன். வந்ததும் ஒரு வர்த்தக அழைப்பு. ஆனால் உங்களை இங்கே சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. ஏன் ஜோதி, எதுவுமே பேசமாட்டேன்றீங்க?''

''என்னை எங்கே ஸார் பேசவிட்டீங்க? வந்த நேரத்திலேயிருந்து நீங்கதானே பேசிக்கிட்டு இருக்கீங்க.''

''ஓ... ஸாரி ஜோதி! திடீர்னு உங்களைப் பார்த்ததும் என்ன பேசறதுன்னே தெரியலை. சரி என்ன சாப்பிடறீங்க?''

''நீங்க இந்த ஹோட்டலுக்கு அடிக்கடி வருவீங்களா?''

''யெஸ் வியாபார ரீதியில்! என்னுடைய மீட்டிங்ஸ் எல்லாமே இங்குதான் நடக்கும். நான் இங்கு ரெகுலர் கஸ்டமர். அப்புறம் நான் கூட்டி வந்தேனே ஒரு அம்மா எப்படி இருக்காங்க?''

''நலம்தான். ஆரம்பத்தில் ரொம்பவே கில்ட்டியா பீல் பண்ணுணாங்க. நௌ ஷி இஸ் ஆல்ரைட். இப்ப சகஜமா பழக ஆரம்பிச்சுட்டாங்க!

''தேங்யூ! உங்க சேவைக்கு நன்றி மிஸ் ஜோதி''.

''சரி நான் கிளம்பறேன் ஸார்.''

''ஏன்?''

''இல்லை. என் வுட் பீ மகேஷ் என்னை வரச் சொல்லி இருந்தார். பேச்சை இழுத்தபடியே அவன் முகம் நோக்கினாள். அதுவரை மலர்ந்து இருந்த அவன் முகத்தில் மெல்லிய சோர்வு. இவளுள் ஏதோ உடைந்தது.

''உங்க திருமணத்திற்கு இன்னும் எத்தனை நாட்கள் உள்ளது ஜோதி.''

''சரியாய் 10 நாட்கள், ஏன் சார்?''

''எனக்கு அழைப்பு இல்லையா? - பதில் சொல்ல முடியாத கேள்வி இரண்டு பேரின் கண்களும் ஒரு விநாடி நேருக்கு நேர் சந்தித்து கொண்டன.

''அப்போ நான் வரேன் சார்.''



''என் உங்க வுட் பீ இன்னும் என் வரலை''

''தெரியலே! நேரமாச்சு! கொஞ்சம் ரிஷப்ஷனில் வெயிட் பண்ணிப் பார்க்கலாம்னு நெனைக்கிறேன்.''

''ஓகே ஆல் த பெஸ்ட் மிஸ் ஜோதி!'' - கதிரவன் கையசைத்து விட்டு எழுந்து நடந்தான். ஏனோ அந்தக் குரலின் ஆதங்கம் அவள் மனதை என்னவோ செய்தது.

இவர்கள் சற்று தொலைவில் இருந்து இவர்கள் பேசிவிட்டு எழுந்து போன காட்சியை 2 ஜோடி கண்கள் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவை மகேஷின் கண்கள்தான். அவனுள் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இப்போது எல்லாம் அவனுக்கு தெளிவாய் புரிவதைப் போலிருந்தது. அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த அனைத்தும் உண்மைதான். இவர்களின் காதலை மறைமுகமாக தெரிவிக்கத்தான் அந்த பரிசை எனக்கு அனுப்பியிருக்கிறாள். இல்லையென்றால் நான் இங்கே வருவேன் என்று தெரிந்தும் அவனுடன் வந்து இருப்பாளா? அன்று என் ஒற்றை விரல் பட்டதற்கு கோபித்தவள் - இன்னொரு அன்னியனுடன் சேர்ந்து காபி சாப்பிட வந்திருப்பாளா? அதுவும் என் அழைப்புக்கு வந்தவள் அவனையும் ஏன் வரவழைத்தாள்?

இனி பேசியென்ன பயன்? கண் முன்னே எல்லாம் பார்த்தாயிற்று! இப்படி மூடி கழுத்தறுத்து விட்டாளே! தன்னைக் கடந்து சென்ற வெள்ளைச் சீருடையணிந்த அந்த ஊழியனை அழைத்து அவர்கள் யாரென்று விசாரிக்க,

அவரு பெரிய பிஸினஸ் மேக்னட் சார் நம்ம ரெகுலர் கஸ்டமர் ஸார் பேரு கதிரவன்!

''அந்த பொண்ணு யாரு?''

''அதுவா, என்னா ஸார். அவங்க ஜோடி போட்டு வந்திருக்கறதை பார்த்தா தெரியலை. எல்லாம் லவ்ஸ்தான்.'' அவன் இன்னும் கொச்சையாக ஏதேனும் பேசத் தொடங்குவதற்கு முன் மகேஷ் ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை அவன் கையில் திணித்தான்.

இன்னும் ஒரு அரை மணி நேரம் கைக்கடிகாரத்தையே பார்த்தவாறு காத்திருந்து விட்டு ரிஷப்ஷனில் இருந்து ஜோதியும் எழுந்து போவதை பார்த்த பின்னரே மகேஷ் அங்கிருந்து அகன்றான்.

''என்னம்மா ஜோதி இத்தனை நேரம்? கல்யாணம் நெருங்கிடுச்சு. இன்னும் எத்தனையோ சடங்கெல்லாம் இருக்கு. நாளையில் இருந்து நீ எங்கேயும் வெளியே போக வேண்டாம். புடவைக்காரர் வந்திருக்காரு! வா வந்து உனக்கு வேணுங்கிறதை தேர்ந்தெடு.''

''நீங்களே பார்த்து எடுங்கம்மா எனக்கு தலைவலிக்கிற மாதிரி இருக்கு.'' பேசிவிட்டு அவள் மாடிக்கு சென்று விட்டாள். உடைகளைக் களைந்து, ஷவரைத் திறந் நின்றாள். குளிர்ந்த தண்ணீர் உடலை தழுவ மனம் கொஞ்சம் அடங்கியது.

மகேஷ் வரச் சொன்னாரே - இது ரொம்ப முக்கியம். எதிர்காலத்தை தீர்மானிக்கப் போறதுன்னு சொன்னாரே? என்னவாக இருக்கும்? ஏன் வரலை! ஒருவேளை கதிரவன் என்னுடன் வந்து அமர்ந்து பேசியதைப்

பார்த்து தவறாக புரிந்து கொண்டு விட்டிருப்பாரோ?

அவள் மனதில் சுரீர் என ஒரு உண்மை உரைத்தது. வாசலில் பந்தக்கால் நடும் சப்தம் கேட்க மனசு வலித்தது. தாய் தந்தை தேர்ந்தெடுத்த வரன். தொடக்கத்திலேயே அவனிடம் ஒரு தவறான இமேஜ் என்னைப் பற்றி ஏற்படும் சூழ்நிலை ஏன்தான் வந்ததோ?

அவள் அடிவயிற்றில் இனம் புரியாத கவலைகள்-பயம் பந்தாக சுருண்டது.

திருமணம் நிச்சயமானதும் கட்டிலில் புரண்டு கலர்கலராய் கனவு காணும் ரகம் ஜோதி இல்லை. ஆனால் தன் எதிர்கால வாழ்வு, கணவனைப் பற்றி சில எதிர்பார்ப்புகளைத் தனக்குள் வைத்து இருப்பவள். மகேஷ் அதற்கு முழுமையாகப் பொருந்துவானா என்று சொல்ல முடியாது.

கற்பனைகள் என்றும் நிஜமாவதில்லை என்ற உண்மையையுணர்ந்த ஜோதி சம்மதித்தாள்.

ஆனால் மகேஷ் வருங்கால கணவன் என்ற முறையில் அளவுக்கதிகமாய் இப்போதே உரிமை முறையில் எடுத்துக் கொள்ள நினைப்பது எரிச்சலைக் கூடத் தந்தது.

ஆனால் கதிரவன் முதற்பார்வையில் அவள் மனக்கதவை தட்டிவிட்டன. அவன் துணிச்சலோடு தன்னம்பிக்கையுடன் பேசியது, அவன் கண்களில் தெரிந்த ஏக்கம் எல்லாமும் சேர்ந்து ஜோதியின் மனதை பாதித்து இருந்தது.

திருமணம் நிச்சயமான ஒரு பெண் இன்னொரு ஆடவனின் கோரிக்கை பற்றி யோசிப்பது கூட நியாயம் இல்லைதான். ஆனால் அவள் மனம் மகேஷ்- கதிரவன் இருவரையும் தராசு தட்டுகளில் வைத்து எடைபோடத்தான் செய்தது?

மனம் இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தது. நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன. பஸ் நிலையத்தில் காத்துநின்ற ஜோதியின் முன் அமர்த்தலாய் நின்றான் மகேஷ்.

''ஹேய் ஜோதி! என்ன என் ஆபீஸ் பக்கம் என்னைப் பார்க்கவா? ஒரு போன் பண்ணியிருந்தா நானே வந்திருப்பேனே. எனக்காகத்தானே வெயிட் பண்றே? சொல்லு எங்கே போகலாம்?

படபடவென பேசிய அவனை கைதூக்கி நிறுத்தினாள் ஜோதி. ''ஸாரி மகேஷ்! நான் உங்களைப் பார்க்க வரலை. கவர்மெண்ட் காலேஜில் இன்னைக்கு பிளைண்ட் ஸ்டூடன்ஸிக்கு எக்ஸாம்ஸ் நடக்குது. நானும் ஒரு ஸ்டூடண்ட்டுக்கு ஹெல்ப் பண்ணப் போறேன். என் ப்ரண்ட் வர்றதா சொன்னா அதான் வெயிட் பண்றேன்''.

''வாட் இஸ் திஸ் ஜோதி? இந்த மாதிரி வேலைகளையெல்லாம் எப்படித்தான் தேடிப்பிடிக்கிறீயோ? இந்தகாலப் பொண்ணுங்க எப்படியோ இருக்காங்க. ஆனா நீ போன்ல பேசக்கூட யோசிக்கிறே? நான் ஒரு மடையன் உண்மை புரியாம உன்னைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டுட்டேன்''.

ஜோதியின் மனதில் உருவான கசப்பு உணர்வு அவள் முகத்தில்



தெரிந்தது.

''இன்னொரு விஷயம் ஜோதி! என் ப்ரண்ட் கம்பெனியில் நல்ல சம்பளத்தோட ஒரு வேகன்ஸி இருக்கு நீ எப்போ ஜாயின் பண்றேன்னு சொன்னா எனக்கு வசதியா இருக்கும்''.

''நான்தான் இப்போ வேலை பாக்குறேனே?'' ''டிகிரி படிச்சிட்டு இப்படி அனாதை ஆஸ்ரமத்தில் ஆயா வேலையா பாக்குறது? மூதல்ல இந்த வேலையை விடு. இது நல்ல கம்பெனி. நம்ம ப்யூச்சருக்கு யூஸ்புல்லா இருக்கும்.

ஜோதி முகத்தை திருப்பிக் கொண்டாள் சேவை மனப்பான்மையோடு அவள் செய்வதை இவன் விமர்சித்த விதம் எரிச்சலூட்டியது. அதற்குள் தோழி கவிதாவும் வந்துவிட நிம்மதியாய் உணர்ந்தாள்.

ஆனால் மனதின் ஓரம் வலித்தது. இனி வாழ்வுமுழுமைக்கும் இந்த இம்சை தொடருமே என்று.

''இவங்கதான் உன் ப்ரண்ட்டா, ஐ'ம் மகேஷ் ஜோதியோட வுட்பி நைஸ் டு மீட் யூ''

''வெரி நைஸ் டு மீட் யூ ஸார் நீங்க எங்கே இந்தப்பக்கம்?''

''என் ஆபீஸ் இந்தப்பக்கம்தான் இருக்கு''

''ஓஹோ...! நான் ஜோதி உங்களையும் எக்ஸாம் எழுத வரச் சொன்னாளோன்னு நினைச்சேன்''.

''நோ நோ இதெல்லாம் வேலையில்லாதவங்க செய்யும் வேலை, நீங்களாவது உங்க ப்ரண்டுகிட்டே சொல்லக் கூடாதா, கண்ணு தெரியாதவங்க இப்போ எக்ஸாம் எழுதி என்ன பண்ணிடப் போறாங்க. இப்படி நேரத்தை வேஸ்ட் பன்றதுக்கு ஏதாவது பார்ட்டைம் வேலை செய்யலாம்''.

அவனின் இந்த பேச்சில் இரு பெண்களுமே அதிர்ந்தார்கள். கவிதா வாய்விட்டே சொல்லிவிட்டாள். ''ஐ'ம் ஸாரி டு ஸே திஸ் ஜோதி!

இந்தாளு சரியான ஷெல்பிஷ்ஷா இருப்பாருபோல, எத்தனை பேருக்கு மனசு வரும் இந்தமாதிரி சேவைகள் செய்ய? பாராட்டவேண்டாம், அட்லீஸ்ட் இன்சல்ட் பண்ணாம இருந்திருக்கலாம்''.

''எனக்கென்னவோ உன் கல்யாண விஷயத்திலே நீ ரொம்ப அவசரப் பட்டுட்டியோன்னு தோணுது''. கவிதா சொன்னது காதில் அறைந்

என்னது பவர்கட் பண்றதுல உன்னோட மனைவி செம கில்லாடியா..எப்படி?

மட்டம் தட்டிப்பேசிப் பேசியே நான் பூராவும் எனது செல்வாக்கை இருட்டடிப்பு செய்றானே!

-சாமி புரீராமனா சிரமம், திருமலை.



உண்மைதான்! ஆனால் விதி? இப்படி முரண்பாடான வாழ்வைத் தானே இயற்கை அமைத்து தருகிறது. முழுமையான மனிதன் என்று யாருமே இல்லை. குறைகள், தவறுகள் மனித இயல்பு. அதை கண்ணாடி கொண்டு பார்க்கும் போதுதான் பெரிதாய் வலிக்கிறது. எனவே தேவையற்ற சிந்தனைகள் வேண்டாமென புறந்தள்ளினாள் அன்று. ஆனால்...

முன்பின் அறியா தயாரோ ஒரு பெண்மணியின் துயரம் துடைத்த கதிரவனின் பொறுப்புணர்ச்சி எங்கே?

மற்றவரின் மனதை உணராமல் வேதனைப்படுத்தும் இவனெங்கே?. எத்தனை யோசித்தாலும் எல்லாவற்றிலும் உயர்வாய் கதிரவனே தோன்றினான். அலைபாயும் மனதை அடக்க வழிதெரியாமல் தூக்கத்தை தொலைத்துவிட்டு இருந்தாள் ஜோதி.

## 6

ஆளுயர கேட்டைத் தாண்டி தோட்டத்தைக் கடந்து ஹாலுக்குள் பிரவேசித்தாள் சகுந்தலா. வெல்வெட் குஷன் சோபாவில் வறுத்த முந்திரியோடும், ஆப்பிள் ஜூஸ் உடனும் வரவேற்றாள் பார்கவி.

''வா அண்ணி! ஆப்பிள் ஜூஸ் குடிக்கிறியா?''

''வேண்டாம் இப்பத்தான் காபி குடிச்சேன்'' என்றவாறே இரண்டு முந்திரியை எடுத்து வாயில் போட்டு சுவைத்தாள்.

''இன்னைக்கு கிளப்புக்குப் போகலையா?''

''இல்லை எனக்கு வீட்லே வேலை இருக்கு அதனாலதான் போகலை. கலோ ஊரில் இருந்து நாளைக்கு வர்றா! அதான் அவ ரூமை க்ளீன் பண்ணச் சொல்லி இருக்கேன். எங்கே நம்ம கண்பார்வை இல்லைன்னாதான் உடனே மிளகாய் அரைச்சிடறாங்களே!

''உண்மைதான் பார்கவி. வேலைக்காரிகளாவது பரவாயில்லை எனக்கு மருமகங்கிற பேர்ல ஒண்ணு வாய்ச்சிருக்கே. கல்யாணமாகி 5 வருசமாவது இன்னும் வயத்திலே ஒரு புழு பூச்சி முளைக்கலை. போதாக்குறைக்கு அதுக்கு தண்டச் சோறு வேற போட்டுக்கிட்டு இருக்கேன்.''

''ஏன்? சகிச்சிகிட்டு இருக்கே. பிடிக்கலைன்னா வீட்டை விட்டு அனுப்பிச்சிற வேண்டியதுதானே கேசவன் எதுவும் சொல்லுவான்னு பயப்படறீயா?''

''கேசவன் எம்பிள்ளை, என் பேச்சை மீறமாட்டான். இப்போதைக்கு அவளையும் விரட்டி விட்டுட்டா வேலைக்கு வேற ஆள் வேணுமே. விடு அவளைப் பத்தியென்னப் பேச்சு. கலோவோட படிப்பெல்லாம் முடிஞ்சிட்டதா?''

''ம்.. பர்ஸ்ட் கிளாஸில் பாஸ் பண்ணி இருக்கா. நேத்துதான் அவ கூட பேசினேன்.''

''எப்படியிருக்காளாம்?''

''அவளுக்கென்ன தங்க விக்கிரகம் மாதிரி. இந்த காலத்து நடிகைக்க கூட அவகிட்டே நிக்கமுடியுமா? கண்டிஷனா ரத்தம் வர்ற அளவுக்கு அழகு. நீதான் நாளைக்குப் பார்க்கப் போறியே அப்புறம் என்ன?''

''எங்கே என் அண்ணன், அதான் உன் புருஷன் சம்மதிக்கலையே கேசவனுக்கே கலோவைத் தந்து இருக்கணும். ஆனா வேற இடத்திலே முடிச்சிட்டீங்க.'' பார்கவி அங்கலாய்த்தாள்.

''கேசவன் இல்லைன்னா என்ன? அதான் கதிர் இருக்கானே.''

''நாளைக்கு இந்த விஷயத்திலேயும் என்னை ஏமாத்திடாதே?''

''என்ன பார்கவி எனக்கு மட்டும் நம்ம சொந்தம் விட்டுப் போகணுமின்னு ஆசையாயென்ன? கதிர்கிட்டே சீக்கிரமே இதைப் பத்தி பேசிடறேன்.''

''சொல்லாதே அண்ணி செய்'' என்று தன் பருத்த உடலை குலுக்கினாள் பார்கவி.

அதே நேரம் வீட்டில் சாந்தினியும், கதிரவனும் பேசிக் கொண்டு இருந்தனர். எதும் பேசாமல் அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த கதிரிடம். ''என்ன கதிர் வரவர உன்னோட குறும்புத் தனமான பேச்சு எதையுமே காணோம். நீ பாட்டுக்கு வர்றே போறே! இந்த வீட்லே நீ மட்டும்தான் என்கூட பேசிக்கிட்டு இருந்தே. எதும் பிரச்சனையா?''

''மனசே சரியில்லை அண்ணி.''

''யாரந்த பொண்ணு கதிர்?''

''அண்ணி உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இந்த வயசுலே எல்லோருக்குமே தோணறதுதானே. காதல் மட்டும்தான் எல்லாத்தையும் மறக்க வைக்கும். ஆயிரம் பேருக்கு நடுவிலே இருந்தாலும், தன் மனசுக்கு பிடிச்சவங்களை ஈஸியா காமிக்கும் சக்தி காதலுக்குண்டு. எனக்கும் புரியும். நானும் உன் வயசைத் தாண்டி வந்தவதானே.''

''அய்யோ! காதலைப் பத்தி நிறைய தெரிஞ்சு வைச்சிருப்பீங்க போல இருக்கே! ஏன் அண்ணி! நீங்களும் அண்ணனும் லவ் பண்ணீங்களாயென்ன?''

''இல்லை.' ஆனா நிச்சயமாகி கல்யாணத்துக்கு இருந்த மூணுமாசத்திலே நான் அவரைக் காதலிக்க ஆரம்பிச்சிட்டேன். இப்போ நீயும் என் நிலைமையிலேதான் இருக்கே!''

''உண்மைதான் அண்ணி!'' என்று ஜோதியை சந்தித்தது முதல் அவளின் கல்யாணம் வரை அனைத்தையும் கூறினான். ''நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கேன். ஆனா, இவ என்னை ரொம்பவே இம்ப்ரஸ் பண்ணிட்டா. நான் ரொம்பவே டிஸ்டர்ப் ஆயிட்டேன்.''

''ரொம்பவும் அழகோ?''

''மனசும் அழகு தான். ரொம்ப நல்ல பொண்ணு. அவளோட பார்வை, செய்கை எல்லாமே என்னை விரும்புறாளோன்னுதான் தோணுது.''

''தம்பி! பொண்ணுங்க மனசிலே ஆயிரம் இருந்தாலும் அதையெல்லாம் வெளியே சொல்ல மாட்டாங்க. இது உங்களுக்குப்

புரியாது. ஆனா அவனுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்குங்கறது தெரிஞ்ச பிறகு நீங்க அவனை மறக்குறது தான் நல்லது கதிர்.''

''முயற்சி பண்றேன் அண்ணி! ஆமா, அப்பவே கேக்கணும்னு நினைச்சேன் வீடு ரொம்ப அமைதியா இருக்கு யாரும் இல்லையா?''

''அத்தை பார்கவி சித்தி வீட்டுக்குப் போயிருக்காங்க. மாமா லைப்ரரி போயிருக்கார்.''

கேசவன் இன்னும் ஆபீஸில் இருந்து வரலையா?''

''இல்லை,'' பாத்திரங்களை ஒதுக்கியபடியே பேசினாள்.

''என் அண்ணி நான் உங்ககிட்டே ஒண்ணு கேக்கட்டுமா?''

''என்ன?'' என்பது போல் பார்த்தாள் சாந்தினி.

''அண்ணி உங்களுக்கு எத்தனை தங்கமான குணம். ஆனா அம்மாவோ, அண்ணனோ அதை சரியாப் புரிஞ்சிக்கலை. இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்த அடிமை வாழ்க்கை..?''

''பொறுமைக்கு எப்பவுமே மதிப்புண்டு, கதிர்! அதுமாதிரி என்னையும் ஒரு நாள் புரிஞ்சிப்பாங்க.''

''இத்தனை வேலையும் ஒரு ஆளா செய்ய உங்களுக்கு சிரமமா இல்லையா?''

''இதை வேலைன்னு நினைச்சாத்தானே கஷ்டம் நான் யாருக்காக செய்யுறேன்...? என் குடும்பத்திற்காகத்தானே அப்படியிருக்க எப்படி கஷ்டமாத் தெரியும்?''

''பேசாம நீங்க கேசவனைக் கூட்டிட்டு தனியா போயிருங்களேன்.''

''ஏன்? கதிர் நான் இங்க இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா?''

''நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை அண்ணி.''

''தனிக்குடித்தனம் போக உங்க அண்ணாவே ஒப்புக்கிட்டாலும் நான் போகமாட்டேன். இது என் வீடு இங்கே வாழ்வது தான் எனக்கு சந்தோஷம்.''

''உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு அண்ணி.''

''இது பெண்களின் இயல்பு கதிர். அதை விடு. நீ மற்ற எதையும் மனசுலே போட்டு குழப்பிக்காம உன் வேலையைக் கவனி. நீ போக வேண்டிய உயரம் இன்னும் நிறைய இருக்கு.''

அவன் சரியென்று ஆமோதிப்பாய் தலையசைத்தான்.

## 7

சாரதா முதியோர் இல்லம். கையில் பத்திரிகையோடு சாரதாம்மாள் முன்பு நின்றிருந்தாள் ஜோதி. ''அம்மா என் திருமணத்திற்கு நீங்கள் அவசியம் வர வேண்டும்.'' பத்திரிக்கையை நீட்ட,

''என்ன ஜோதியிது! பத்திரிகையெல்லாம் கொடுத்து என்னை அன்னிய மாக்கிடலாமுன்னு பாக்குறீயா? நீ என் பொண்ணு மாதிரி நீயே கூப்பிடலன்னாலும் நான் வருவேன்.''

''நன்றிம்மா! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க.'' அவர் காலில் விழுந்தாள்.

''உன் மனம் போல நிறைவான வாழ்வு உனக்கு அமையட்டும்.''



ஜோதிக்கு சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை. என் மனம் தான் கடந்த சில நாட்களாக ஒரு நிலையில் இல்லவே இல்லையே!

''என்னம்மா ஏதோ தீவிரமான யோசனை?''

''ஒண்ணுமில்லேம்மா கல்யாணத்துக்குப் பிறகு இல்லத்திற்கு வரமுடியாதேன்னு கவலையா இருக்கு.''

''திருமண பந்தம், குடும்பம், குழந்தைகள்னு வந்திட்டா, சேவைகளுக்கெல்லாம் நேரமிருக்காது. ஆனா, நேரம் கிடைக்கும் போது எங்களையெல்லாம் வந்து பார்த்திட்டுப் போம்மா.''

''நிச்சயமா. நான் போய் மத்த எல்லாருக்கும் பத்திரிக்கை வைச்சிட்டு வரேன்.'' அவள் அங்கிருந்து நகர்ந்து பிரார்த்தனை ஹாலில் குவிந்திருந்த முதிய உள்ளங்களை சந்தித்தாள்.

''என் திருமணத்துக்கு உங்க எல்லோருடைய ஆசியும் எனக்கு வேணும் நீங்க அவசியம்.''

''உனக்கென்னையம்மா, நீ எங்கே போனாலும், நல்லாயிருப்பே!'' எல்லாருடைய வாழ்த்துக்களும் மனதிற்கு டானிக் போல இனித்தது. சிலர் சந்தோஷப்பட்டார்கள். சிலர் ''நீ எங்களை விட்டு போனப்புறம் ரொம்ப கஷ்டப்படுவோம்மா. சொந்த பிள்ளைகளை பிரிந்த வேதனை இங்கே உன்னைப் பார்த்ததும் உன் அன்பிலே கரைந்து மறைந்தது. இப்போ நீயும் போகப் போறீயாம்மா?''

ஜோதி அவர்கள் அன்பில் உருகினாள். இந்த அன்பிற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்?. அழுதே விட்டாள்.

இல்லத்தை விட்டு வெளியே வந்த பிறகும் மனம் அமைதியடைந்த பாடில்லை. திருமணம் என்ற பந்தம் உண்மையில் பெண்களுக்கு சங்கிலிதான். தன் சொந்த விருப்பு, வெறுப்புகளைக் கடந்து, அன்பும், பாசமும் கலந்து பழகிய உறவுகளை மறந்து, தாலி ஏறிய காரணத்தினால் புதிய உறவுகளுக்கு மதிப்பு தந்து அவர்கள் விரும்பினபடி, நூலில் ஆடும் பொம்மையாய் பெண் சுயமில்லாமல் உலாவுகிறாள்.

வீடு கல்யாணக்களை கட்டியிருந்தது. வீடு மொத்தமும் ஆட்கள் நடந்து திரிந்தனர். ஜோதி நடக்கும் எல்வித சடங்கிலும் கொஞ்சமும் ஒட்டாமல் தனித்து நின்றாள். ஏனோ நினைவுகள் மறந்துப் போய் சிரிக்க மறந்து இருந்தாள்.





-'இளம்' ச.ஆ.கேசவன்.

"ஜோதிம்மா... மாப்பிள்ளை வந்திருக்கார் பாரு" அம்மாவின் குரல் கேட்கவும் தான் மகேஷ் பற்றிய நினைவு வந்தது. அன்றைய தினம் ஹோட்டலுக்கு வரச் சொல்லிவிட்டு காத்திருக்க வைத்தானே, என்ற நினைவில் படியிறங்கி வந்தாள்.

சோபாவில் அமர்ந்திருந்தவன் இவளை கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டான். இவளுக்குள் சுருக்கென்றது. என்னை வரச்சொல்லி அலைக்கழித்து விட்டு மாறாக இவர் கோபம் கொண்டுள்ளாரே? அவனிடம் பேசவும் மனம் வரவில்லை, இருப்பினும் இந்தப் பிரிவு நிரந்தரம் இல்லையே என்ற நினைப்பில், மரியாதை கருதி ஓரிரு வார்த்தைகள் பேசினாள்.

அவன் பதிலேதும் பேசவில்லை. அவன் தந்தையுடன் பேசிக் கொண்டு இருந்தான். காபியைக் கூட குடிக்காமல் அப்பாவிடம் பேசிவிட்டு கிளம்பி விட்டான். நார்மலாக தன்னைப் பார்த்தால் வளவளன்னு பேசும் மகேஷ் இன்று பேசாதது நெருடலாய் இருந்தது.

"என்ன ஜோதி மாப்பிள்ளையோட முகம் சரியில்லையே? என்னவாம்?"

"எனக்கென்னம்மா தெரியும்? அவர் ஒண்ணுமே பேசலையே?"

"பைத்தியமே! கல்யாணம் நிச்சயமான பிறகு ஆண்கள் ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லி வர்றதே பொண்ணைப் பார்க்கத்தானே. இப்போ இங்கே நிலைமை சரியில்லை வீடு முழுக்க ஆட்களா இருக்காங்க, நீ வேணுமின்னா போன் பண்ணி என்ன விஷயமின்னு கேளேன்."

"வேண்டாம்மா..."

"வெட்கப்படாதேடா பேசு!". தாய் தன் மனநிலை புரியாமல் பேசுகிறாரே என்ற நினைப்பில் தொலைபேசியின் அருகில் சென்றாள்.

இரண்டு பெல்லுக்குப் பிறகு எடுக்கப்பட்டது எதிர்முனை.

"ஹலோ..."

"நான் ஜோதி...."

அவள் கூறியதுதான் தாமதம் உடனே போன் வைக்கப்பட்டு விட்டது.


திரும்பவும் டயல் செய்தாள். சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு உள்ளது என்று இனிய குரல் ஒன்று கூறிட, அவளின் நெற்றியில் குழப்ப முடிச்சுகள் உதயமாயின.

மனிதர்கள் தான் காலத்திற்காகவும், நேரத்திற்காகவும் காத்திருப்பார்கள். ஆனா இவையிரண்டும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை கீதையில் கூறியிருப்பது போலவே நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று முடிவு செய்து விட்டால் துன்பம் இல்லை.

யோகிகளும், ஆசையில்லாதவர்களும் தான் அவற்றையெல்லாம் பின்பற்ற முடியும், ஆறறிவு படைத்து உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் மனமுடைய மனிதர்களுக்கு இவ்வாசகம் பொருந்துமா என்பது சற்றே யோசிக்க வேண்டிய விஷயம்தான்.

அப்படிப்பட்ட கண்ணுக்குத் தெரியாத ஒரு சூழலில்தான் ஜோதியும் இப்போது சிக்கிக் கொண்டிருக்கிறாள்.





இனியென்ன ஆகப் போகிறது? விடிந்தால் திருமணம். அனைவரும் சத்திரத்தில் தங்கியிருந்தனர்.

இரவு நேரம் கையில் புத்தகமொன்றை விரித்து வைத்துக் கொண்டு பிரக்ஞையே இல்லாமல் அமர்ந்திருந்தாள் ஜோதி.

''என்னங்க இது? நீங்களாவது அவளைக் கேட்கக் கூடாதா? கல்யாணப் பொண்ணு ஒரு மலர்ச்சியே இல்லாம எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்காளே.''

''நான் எப்படீம்மா கேட்க?''

''என்னை விடவும் நீங்கதான் அவகூட ரொம்ப நெருக்கமா இருக்கீங்க.''

''ஆயிரம்தான் இருந்தாலும் நான் ஒரு ஆம்பிளை இல்லையா. அவ மனசிலே இருக்கிறதை வெளிப்படையா பேசமாட்டா தயக்கமா கூட இருக்கலாமில்லையா?.''

''அவயாரு நம்ம பொண்ணுதானே வாங்க இரண்டு பேருமே போய் கேட்போம்.'' தந்தையின் ஆதரவான வருடலில் தலைநிமிர்ந்து நோக்கினாள்.

''என்னப்பா?''

''ஒண்ணுமில்லைம்மா? நீ ஏன் ரொம்ப டல்லாத் தெரியுறே?''

''நத்திங்! மனசிலே இனம் புரியாம ஏதோ ஒரு படபடப்பு அவ்வளவுதான் நீங்க தூங்கலையாப்பா?''

''நீ தூங்கலையாம்மா?''

''தூக்கம் வரலை...''

''ஜோதி நீ எங்களுக்கு ஒரே பொண்ணு. உனக்கு நான் எந்தக் குறையும் வைக்கலை. என்னால முடிந்த எல்லாத்தையும் நான் உனக்கு செய்து இருக்கேன்.''

''இதையெல்லாம் நீங்க சொல்லணுமாப்பா.''

''இல்லேம்மா. இந்தக் கல்யாணம் உன் விருப்பப்படிதானேம்மா நடக்குது. நான் ... உன் மனசுக்கு ...எதுவும் வருத்தம் இல்லையே!''

''அப்பா...''

''ஆமாண்டா.... இப்போ கொஞ்ச நாளாவே உன் முகமே சரியில்லை. எதையோ இழந்தா மாதிரி நீ ஆர்வம் காட்டாம இருக்கிறதால்தான். எனக்கு கவலையா இருக்கு.

உன் மனசிலே ஏதும் கவலை இருந்தா சொல்விடும்மா.''

''இல்லேப்பா. நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். கல்யாணத்துக்குப் பிறகு! உங்களைப் பிரியறேன்னுதான் மனசு வலிக்குது.''

''இது உலக நடப்புதானேடா. நீ கவலைப்படாதே, உனக்கு கல்யாணம் ஆகி நீ அடுத்த வீட்டுக்குப் போனாலும் எனக்கு பொண்ணுதானே. எதையும் போட்டு குழப்பிக்காதே. எப்பவும் மகிழ்ச்சியா இரு.''

''சரிப்பா...''



''விடுங்க, அவ தூங்கட்டும் நாளைக்கு மணவறையிலே தூங்கி விழப்போறா.'' சிரித்தார்கள், வேறு வழியின்றி அவனும் சிரித்தான்.

''என்னங்க நம்ம ஜோதிக்கு நம்ம மேலே எத்தனை பாசம் பாருங்க?''

''நான் ஒரு தப்பு பண்ணிட்டேன்மா நம்ம ஜோதிக்கு வீட்டோட மாப்பிள்ளையா பார்த்து இருக்கணும்.

நம்ம பொண்ணு நம்ம கூடவே இருப்பா இல்லையா?.

''ஆமாம். வீட்டுக்குள்ளேயே சுதந்திரம் எதிர்பார்க்கிறவ உங்க பொண்ணு. வீட்டு மாப்பிள்ளையா இருக்கிறவனை சம்மதிப்பாளா? என்னவோ அவ மனசிலே எந்தக் கவலையும் இல்லே அது நமக்குப் போதாதா கவலைப்படாம தூங்குங்க.''

# 8

சர்ச்சையான அந்த இரவு வழக்கம் போலவே விடிந்து விட பரபரப்பு தொற்றிக் கொண்டது. மங்கள மேளம் ஒலித்தது. சாலியாய் அணிவகுத்து இருந்த சேர்களில் எல்லாம் மனிதத்தலைகள் முளைத்திருந்தன. ஓமக்குண்டத்தில் எழுந்த தீ மகேஷின் மனதிலும் கொழுந்து விட்டு எரிந்தது.

என்ன முடிவு எடுக்கப் போகிறேன், நான் வெட்கமில்லாமல் மணவறை வரை வந்து விட்டேன்? இந்த நிமிடம் வரையில் ஜோதியோ அவள் காதலனோ என்னதான் முடிவு எடுத்து இருக்கிறாளோ யோசித்துக் கொண்டே அய்யரின் குரலுக்கு ஏற்ப, இயந்திரத்தனமாய் கையை அசைத்துக் கொண்டிருந்தான்.

எதிர்வரிசையில் அவனுக்கு நேரெதிராய் அது யாரது? அன்று ஜோதியுடன் ஓட்டலில் பார்த்தவன் அல்லவா இங்கே எதற்கு வந்திருக்கிறான், என்னைத் தலைகுனிய வைக்கவோ, இருக்கட்டும் இனி நான் யாருக்கும் பாவம் பார்க்கப்போவதில்லை, எல்லார் முன்னிலையிலும் உங்கள் காதல் லீலைகளைச் சொல்லாமல் விடப் போவதில்லை, மனதிற்குள்ளேயே கருவிக் கொண்டிருந்தான்.

அதே நேரம்... ஆப்பிள் வண்ணப் புடவையணிந்து அங்குமிங்கும் தங்க நகைகள் மின்ன அழகு மிளிரும் தேவதையாய் மேடைக்கு வந்தாள் ஜோதி. அவளின் கண்கள் வரிசையை சந்திக்க அங்கே சதிரவன் ஏக்கம் வழியும் பார்வையோடு!



''நம்ம வீட்டுக்கு இரண்டு வேலைக்காரி தேவைதானா''?

''ஆமாடி ஒருத்தி என்னை பார்த்துக்கணும் இன்னொருத்தி என் மகனைப் பார்த்துக்கணும்''.

-முள்ளிப்பட்டு கனா.சிவகுமார்

ஜோதியால் நடக்கவே முடியவில்லை, கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. கண்களில் லேசாக நீர் திரையிட்டது. தலையைக் குனிந்தவாறே நடந்தாள்.

கதிரவனுக்கு அதற்கு மேலும் அங்கிருக்க முடியும் என்று தோன்றவில்லை, மனதாரதன் இணையாய் வரித்தவள் இதோ இன்னும் சில நிமிடங்களில் மற்றொருவரின் மனைவியாகப் போகிறாள். அதைக் கண்டு கொள்ள மனம் தாங்குமா?.

மங்கள மேளம் ஒலிக்க தாலியை கையில் எடுத்தான் மகேஷ். அனைவரும் அட்சதை போட கையைத் தூக்க தாலிக் கயிறை ஜோதியின் கழுத்து வரை கொண்டு சென்று விட்டு கீழே எறிந்தான் மகேஷ்.

அந்த செய்கையை கண்டு ஜோதி மட்டுமல்ல வந்திருந்தவர்கள் அனைவரும் பதறினார்கள்.

''என்ன மாப்பிள்ளை என்னாச்சு?'' பதட்டமாய் ஓடி வந்த ஜோதியின் தந்தையை சட்டை செய்யாமல் ''மிஸ்டர் கதிரவன் ஒரு நிமிஷம்'' நில்லுங்கள் என்றான் கதிரவனை நோக்கி!

''என்ன மாப்பிள்ளை என்ன விஷயமா இருந்தாலும், கல்யாணம் முடிந்த பிறகு பேசலாமே? நேரம் தவறிடப்போகுது.''

''கவலைப்படாதீங்க ஸார் நடக்குற கல்யாணத்திற்குதான் நேரம் காலமெல்லாம் பார்க்கணும்.''

''என்ன சொல்றீங்க?''

''உண்மையைச் சொல்லப் போறேன், உங்க யாருக்கும் தெரியாததை...''

''டேய் என்னடாயிது! தாலிகட்டப் போற நேரத்திலே போய் விதாண்டா வாதம் செய்துகிட்டு, மகேஷின் தந்தை சப்தம் போட,

''அப்பா பிளீஸ் தயவு செய்து யாரும் பேச வேண்டாம்.'' தயங்கியபடி நின்றிருந்த கதிரவனை இழுத்து வந்து மேடையில் நிறுத்தினான்.

''ராகவன் ஸார் இதோ நிக்கிறாரே கதிரவன் இவரும் உங்க மகள் ஜோதியும் காதலர்கள், உங்க உத்தமபொண்ணு இன்னொருத்தனை காதலிச்சுட்டு எங்கிட்ட கழுத்தை நீட்ட தயாராயிட்டா!'' அவன் பேசி முடித்த அதே சமயம் ராகவன் தன் கையை இடியென அவன் கன்னத்தில் இறக்கினார்.

அவ்விடம் சற்று நேரம் நிசப்தக்கடலில் மூழ்கியது. யாருமே எதிர்பாராமல் நடந்து விட்ட அந்த செயலிற்குப் பின் ''யூ... ராஸ்கல் யாரைப் பத்தி தப்பா பேசறே என் பொண்ணு தங்கம்டா. அப்படியே அவ காதலிச்சாலும் என்கிட்டே வந்து தைரியமா சொல்லியிருப்பாளே தவிர உன்னை மாதிரி மூடி மறைச்சி கடைசியில் கழுத்தறுக்கமாட்டா.''

ஏற்கனவே கோபமாயிருந்த மகேஷ் அந்த அடியில் இன்னும் கொதிநிலையை அடைந்தான்.

''உண்மை கசக்கத்தான் செய்யும் ஸார். நான் ஒண்ணும் ஆதாரம் இல்லாம உங்க பெண் மேல பழிபோடலை, இதோ இவர் உங்க ஜோதிக்கு எழுதின லெட்டரு, காதல் சின்னமான தாஜ்மஹாலும்... இது எப்படி என்னிடம் வந்ததுன்னு பாக்குறீங்களா? என் பிறந்த நாளில் ஜோதி பரிசாகத் தந்தது இவைகளைத்தான்.''



''உன்னை அன்று சந்திக்கக் கூட என்னிடம் அனுமதி கேட்டாளே''

''இந்த பரிசும், கடிதமும் வந்த பிறகும் நான் நம்பலை, நாமே ஜோதியிடம் நேரிடையா விசாரிக்கலாமின்னு வரச் சொன்னேன். அங்கே எனக்கு கண் முன்னாடியே இவனுடன் உட்கார்ந்து காபி சாப்பிட்டாள். அந்த ஓட்டலில் வேலை பார்க்கிற பேரர் கூட இவர்கள் இருவரும் காதலர்களாகத்தான் இருக்கணும்னு சொன்னாரே. இன்னொருத்தனை மனசிலே நினைச்சிகிட்டு இருக்கிறவளை நான் எப்படி கல்யாணம் செய்துக்க முடியும்? நாளைக்கு கல்யாணம் ஆன பிறகு என்னைக் கொல்லவும் இவர்கள் திட்டம் போடலாமே, இப்பவெல்லாம் அதுதானே அதிகமா நடக்குது?''

''இதனைக் கூட இந்த நிறைஞ்ச சபையில் ஏன் சொல்றேன்னு தெரியுமா? நாளைக்கு என்னைப் போல இன்னொருத்தனும் ஏமாறக் கூடாதுன்னு தான்'' அவன் முகத்தில் வெறுப்புடன் ஒரு வித இகழ்ச்சி குரலில் தொனிக்க சொல்லவும்... ராகவன் ஏறக்குறைய உடைந்தே போனார்.

''இல்லேப்பா இவன் பொய் சொல்றான், தேவையில்லாம என் மேல களங்கம் கற்பிக்கிறான். கதிரவனுக்கும் எனக்கும் எந்த தவறான உறவும் இல்லை என்னை நம்புங்கப்பா''

''ஆகா ரொம்ப அற்புதமான நடிப்பு ஜோதி!''

''ஆ... ஸ்டுப்பிட்! வாயை மூடு! அப்பா பிளீஸ்! நான் உங்க பொண்ணுப்பா நான் எந்த தவறும் செய்யலைப்பா என்னை நம்புங்க பிளீஸ்.''

''எதை வைச்சம்மா நம்பச் சொல்றே? அவன் எத்தனை ஆணித்தனமா சொல்றான் பார்த்தேயில்லை.''

''அய்யோ அப்பா நான் உங்களுக்கு எப்படி சொல்லிப் புரிய வைப்பேன்?'' நீங்க என்னை நம்ப வேண்டாம்? இதோ இவரைக் கேளுங்கள். மகேஷ் கூறியது அத்தனையும் உண்மைன்னு இவர் சொல்லட்டும் அதற்கு பிறகு என்னைத தண்டியுங்கள்.''

''சொல்லுங்க கதிரவன்! நீங்களே உங்க விருப்பத்தை சொன்னபோது நான் மறுத்துதானே பேசினேன் இப்போ எல்லார் முன்னிலையில் உங்ககிட்டே உதவியா கேட்கிறேன் பிளீஸ் உண்மையைச் சொல்லுங்க?'' கதிரவன் என்ன பேசப் போகிறானோ என்று படபடக்கும் இதயத்தோடு அனைவரும் பார்க்க,

அனைவரின் பார்வைகளும் கதிரவனை மொய்த்தது. அவனோ வெகு சாதாரணமாக ராகவனின் அருகில் சென்றான். ''இத்தனை நடந்ததற்குப் பிறகு நான் பேசாமல் இருப்பது தவறுதான். ஸார்! மகேஷ் கூறியது போல் நானும் ஜோதியும் காதலர்கள் தான்'' என்றான் வெகு உறுதியாய். ''இந்த உண்மையை இத்தனை நேரம் உங்களிடம் இருந்து மறைத்ததற்கு மன்னியுங்கள்.''

''இதற்குத்தான் நான் காத்திருந்தேன். இப்போ உங்க எல்லாருக்கும் உண்மை என்னவென்று புரிந்திருக்கும் இல்லையா?'' மகேஷ் கொக்கரித்தான்.

''ஏய்! உன் சந்தேகம் தீர்ந்து விட்டது இப்படியொரு வெட்கம் கெட்ட

இடத்திலே போய் நாம சம்பந்தம் வைச்சிக்கப் பார்த்தோமே!'' மகேஷின் தாய் அலுத்துக் கொண்டாள்.

ஜோதிக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே புரியவில்லை கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

கதிரவன் மறுபடியும் ராகவனின் முன் நின்றான். ''அய்யா இந்த தவறுக்கு நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.'' என்றான்.

ராகவன் ஒரு நொடி கதிரவனைக் கூர்ந்து கவனித்தார். ''இப்பவே ஜோதி கழுத்திலே நீ தாலி கட்டணும் சம்மதமா?''

''சம்மதம்....'' என்றான் ஒற்றை வரியில்,

''அப்பா...'' ஜோதி அதுவரை பேசாமல் இருந்தவள் கதறினாள். ''அப்பா நீங்க இந்த முடிவை எடுத்தால் இவங்க சொல்ற பொய் உண்மையாய் ஆயிடும்.''

''நீ வாயை மூடு!'' மகளின் கையை உதறினார் ராகவன் ''உன் மேல உன்ன நம்பிக்கையெல்லாமே செத்துப் போச்சு ஜோதி. இதுவரையில் நீ சொல்லி நான் கேட்டது போதும். இனிமே நான் சொல்றதை நீ கேளு. இல்லைன்னா இந்த நிமிடமே நம்ம பந்தத்தை அறுக்க வேண்டிவரும்.''

''என்னங்க?'' - கமலா.

''கமலா, உன் மகளை நீயே கேட்டு சொல்லு மணவறையில் உட்காருகிறாளா? இல்லையாவென்று. ''வேறு வழியின்றி ஜோதி அமர்ந்தாள். கதிரவன் கீழே விழுந்த தாலியை எடுத்து அவள் கழுத்தில் கட்டினான். அந்நேரம் அவள் பார்த்த பார்வையில் நிச்சயமாய் சிநேகம் இல்லை.

''இப்போ எனக்கென்ன வழி? திருமணம் என்ற பெயரில் மன உளைச்சல் ஏற்படுத்தி விட்டீர்கள் என்று நான் கேஸ் போடப் போகிறேன் ''குதித்தான் மகேஷ்.

கதிரவன் மகேஷின் அருகில் வந்தான் ''உனக்கு என்ன வேண்டும்? என்னை நேசித்தவளை நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டே, அதோடு ஓவர். இப்போ அவ என் மனைவி இன்னொரு வார்த்தை அவளைப் பத்தி பேசினா நல்லாயிருக்காது. நானா சொல்றதைவிட நீயா வெளியே போறது நல்லது எப்படி வசதி?''

மகேஷ் விருட்டென்று கிளம்பி விட்டான். திருமணம் முடிந்து விட்டது. எல்லாரும் விருந்திற்கு தயாராக கமலம் வந்திருந்த விருந்தாளிகளை எல்லாம் வெற்றிலை தாம்பூலம் கொடுத்து வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஒரு குதூகலம் இல்லை, புன்னகை இல்லை, ஏதோ இயந்திரத்தனமாய் எல்லாம் நடந்து கொண்டிருந்தது.

''என்ன இருந்தாலும் உன் பொண்ணுக்கு இத்தனை நெஞ்சழுத்தம் இருக்கக்கூடாதுமா கமலம். கடைசி வரைக்கும் ஊமையா இருந்தே கழுத்தறுத்திட்டாளே.''

''இதுக்குத்தான் பொட்டைபுள்ளைக்கு ஓரளவுதான் இடம் தரணும். கொஞ்சம் அதிகப்படியானா இப்படித்தான்.''



சொந்த பந்தங்களின் நாக்குகள் சாட்டையாய் சுழன்றன. ஆனால் எதையும் வெளியே சொல்லத் திராணியின்றி சிலையாய் அமர்ந்திருந்தார் ராகவன்.

நடந்து போன அந்த கசப்பான அனுபவத்தை ராகவனால் ஜீரணிக்க முடியவில்லை, மாமா மாமா என்று அன்பொழுக கூப்பிட்டுக் கொண்டு இருந்த மகேஷா இப்படி செய்தான்...?

தனியே சந்தித்து என்னிடம் ஒரு வார்த்தை கூறியிருக்கலாமே, சொந்த மகளே என் முகத்தில் கரியைப் பூசிய போது இவன் யாரோதானே! எத்தனை நாள் கனவு என் மகளின் திருமணம் சிறுகச்சிறுக சேமித்து ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்து கடைசியில் எல்லாமே பாழாகி விட்டதே!

அந்த வீட்டின் தேவதையாய் வலம் வந்தவள் இன்று யாரோ அந்நியர் போல ஒரு மூலையில் கருண்டிருந்தாள். ஜோதி. யார் முதலில் பேசுவது என்ற குழப்பம். எல்லோர் முகத்திலும் இறுக்கம்.

ராகவனே அமைதியை கலைத்தார். ''கமலா இந்த சீர் செனத்தியெல்லாம் எடுத்துகிட்டு. அவ புருஷன் வீட்டுக்கு கொண்டு போக சொல்லிடு. நம்பிக்கை துரோகம் செய்தவ இனி என் பெண்ணில்லை. இந்தக் கல்யாணம் மூலமா காற்றிலே பறந்த என் மானத்தை ஓரளவு கட்டி வைச்சிட்டேன். இனி எந்த உறவும் கொண்டாடிட்டு என்னைப் பார்க்க வரவேண்டாம்.''

''ஒரு நிமிடம்...'' ஜோதி கண்ணில் துளிர்த்த நீரை விரலில் சுண்டி விட்டு, ''என்னை நம்பாமல் நீங்கள் தரும் சீர் எதுவும் எனக்குத் தேவையில்லை. நான் எந்தத் தவறும் செய்யாதவள் அதை புரிந்து கொள்ளும் சமயம் ஒன்று வரும் அன்று நான் இதைப் பெற்றுக் கொள்கிறேன்.'' என்றபடி வேகமாய் நடந்தாள். அவளைப்பின் தொடர்ந்து வந்த கதிரவன் காரை உயிர்ப்பித்தான்.

## 9

திருமணம் முடிந்த கையோடு நேராக மனைவியை தன் வீட்டிற்கு அழைத்து வந்தான் கதிரவன். மணக்கோலத்தில் அவர்களைக் கண்டதும், அக்கம் பக்கத்து வீடுகளில் தலைகள் முளைத்தன.



''ஏய்! மங்களா அது யாரு? சகுந்தலாவோட சின்ன பையன் தானே? கூட ஏதோவொரு பொண்ணு அதுவும் மாலையுங் கழுத்துமா''.

''சகுந்தலா நீட்டி முழக்குவாளே எம் பொண்ணும், புள்ளையும் என் பேச்சை மீற மாட்டாங்கன்னு சொல்லுவாளே? இப்போ ஒரு பொண்ணை இழுத்துட்டு வந்து இருக்கானே பையன்?''

''என்ன நடக்கப் போகுதுன்னு தெரியலையே?''

''டி.வி.யிலே கரன்ட் இல்லை எப்படிடா சீரியல் எல்லாம் பாக்கிறதுன்னு நினைச்சேன். இன்னைக்கு சகுந்தலாவோட ருத்திரதாண்டவம் பார்க்கலாம்.''

கதிரவன் பெல்லை அழுத்தினான். கதவை திறந்த சாந்தினிக்கு கதிரவன் யாரோ ஒரு பெண்ணுடன் மாலையும் கழுத்துமாய் வந்து நின்ற காட்சி மயக்கத்தையே வரவழைத்தது.

''ஏய்! இங்கே வந்து என் அறையை சுத்தம் பண்ணச் சொன்னா வாசலில் என்ன பராக்கு பாத்துட்டு நிக்கிறே?'' பின்னால் வந்து நின்ற சகுந்தலா அந்தக் காட்சியை கண்ட அதிர்ச்சியில் சிலையானாள். அவள் கண் விழிகள் தனியே தெரித்து விழுவது போல் இரு கைகளை மூடவும் திறந்து வெறித்தாள்.

''சாந்தினி தான் முதலில் சுதாரித்தாள்''.

''வாங்க உள்ளே வாங்க?''

''யேய் நில்லுடி! நீ யாரு அவங்களை உள்ளே கூப்பிட? கதிரவா என்னடா இதெல்லாம்?''

''அம்மா நான் இந்த பெண்ணை விரும்பினேன், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தாலிகட்ட வேண்டியதாகி விட்டது''

''ஏன்? இவங்க அப்பன் கழுத்திலே கத்தி வைச்சானா இல்லை இவ வயித்தை சாச்சிகிட்டு வந்தாளா''.

''அம்மா..''

''என்னடா அம்மா? பெத்த தாய்க்குத் தெரியாம கல்யாணம் பண்ணிகிட்டு ஊர் பேர் தெரியாத எவளோ ஒருத்தியை..''

''நிறுத்தும்மா இவ ஒண்ணும் பேர் தெரியாதவ இல்லை என் மனைவி...''

''மனைவியா...? அந்த அளவிற்கு இப்பவே உன்னை தயார் பண்ணிட்டாளா? என்னை பகைச்சிகிட்டு இவ இந்த வீட்லே வாழ்ந்திட முடியுமா?'' பார்வையில் அனல் கக்கிய படி வார்த்தைகள் வெளிவந்தன.

சுந்தரம் அருகில் வந்தார். ''சகுந்தலா நடந்தது நடந்து போச்சு. இனிமே அதைப் பத்தி பேசி என்ன பயன்? வெளியே அக்கம் பக்கமெல்லாம் வேடிக்கைப் பாக்குறாங்க பாரு முதல்ல உள்ளே கூப்பிடு''.

''நீங்க சும்மாயிருங்க. எம்பிள்ளைங்க நான் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டாங்கன்னு எத்தனைப் பெருமையா சொல்லிகிட்டு இருந்தேன். இப்போ எந்தலையிலே மண்ணை வாரிப் போட்டுட்டானே.''

கதிரவனுக்கு அம்மாவைப் பற்றி நன்றாகத் தெரியும். எதிரில் இருப்பவர்களின் குரல் உயரும் வரை அவன் அமைதியாக மாட்டான்



என்று ''அண்ணி, அம்மாவிற்கு வேணுமின்னா எங்களை வரவேற்க மனமில்லாமல் போகலாம் நீங்களாவது ஆரத்தி எடுக்கக்கூடாதா?''

''அது வந்து'' சாந்தினி தயங்கிட,

''அவ இல்லாம நீ மட்டும் வந்தா உள்ளே வா...''

''அம்மா.. எப்போ இவளை கைபிடிச்சேனோ அப்பவே இவ என் மனைவி என்னில் பாதி. அவளை அப்படியெல்லாம் விட்டுட்டு வர முடியாது. உனக்கு பிடிக்கலைன்னா சொல்லு தனியா ஒரு வீடு எடுத்திட்டு நானும் அவளும் அங்கேயே போயிடறோம்''

கதிரவன் தூக்கி எறிந்து பேசுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. வீட்டிற்கு அதிகம் சம்பாதித்துப் போடுபவன். இவன் பாட்டுக்கு தனிக்குடித்தனம் சென்று விட்டால், பிறகு குடும்பத்தை யார் சுமப்பது? தவிரவும், இவனின் நடத்தையைப் பார்த்து பெரியவனும், தனிக்குடித்தனம் அது இதுன்னு கிளம்பிட்டா அப்புறம் நான் என்ன செய்யறது? இந்த சாந்தினியை விட்டா வீட்டு வேலையெல்லாம் யார் செய்யறது? யோசனையின் நடுவில் பார்கவியின் நினைப்பு தோன்றியது.

பேசாமல் அவளிடம் போய் ஏதாவது ஐடியா கேட்க வேண்டியது தான். இப்போதைக்கு மௌனம் தான் சரியான வழி என் எதிர்ப்பை அதில் தான் காட்ட வேண்டும். சகுந்தலா மௌனமாய் வெளியேறிவிட்டாள்.

தற்போது சாந்தினியின் நிலை மோசமாகி விட்டது எதுவுமே பேசாமல் வெளியே போகும் மாமியாரை அழைப்பதா? அல்லது புதுமணத் தம்பதிகளை வரவேற்பதா என்று யோசித்தாள்.

''என்னம்மா பாக்குறே? போய் ஆரத்தி எடும்மா.'' சுந்தரம் மருமகளிடம் கூறிட,

''இல்லே மாமா அத்தை...'' இழுத்தாள் சாந்தினி.

''விடும்மா மிஞ்சி மிஞ்சிப் போனா அவ எங்கே போகப் போறா பார்கவி வீட்டுக்குத் தானே போயிட்டு தானா வருவா. நீ போம்மா, பாவம் எத்தனை நேரம் வாசலிலேயே நிறுத்தி வைப்பது?''

சுந்தரம் கூறியது போலவே சாந்தினி ஆரத்தி எடுத்து திருஷ்டி கழித்து பால்பழம் கொடுத்தாள். சுந்தரம் காலில் விழுந்து வணங்கினார்கள்.

''என்றென்றும் சீரும் சிறப்புமா வாழணும். கதிரவா, உன்னை நம்பி ஒரு பொண்ணு வந்திட்டா இனி அவளைக் கண் கலங்காம பார்த்துக்க வேண்டியது உன் கடமை.''

''சரிப்பா..''

''நீ வாம்மா, ஜோதியை அழைத்துப் போய் மாற்றுடை அளித்தாள் சாந்தினி. நீ கொஞ்சம் ரெஸ்ட் எடும்மா.

சாந்தினி வெளியே வந்து கதிரவனை ஏறிட்டாள்.

''கதிர் நீ சொன்னியே அந்தப் பொண்ணு இவதானே!''

''ஆமா அண்ணி!''

''கொஞ்சம் கூட பயமேயில்லாம இப்படி கல்யாணம் பண்ணிகிட்ட வந்து நிக்கிறியே அப்படியென்ன அவசரம்?''

அவன் நடந்த அத்தனையையும் தெளிவாக கூறினான்.

''இப்போ என்ன பண்றதுன்னே தெரியலை அண்ணி, ஏதோவொரு வேகத்திலே நான் அவளைக் கல்யாணம் பண்ணிகிட்டேன். ஆனா அவ எம்மேல ரொம்பவும் கோபமா இருக்கிறா!''

''கவலைப்படாதே கதிர்! வாழ்க்கையிலேயே அன்பு ரொம்ப முக்கியம். ஒரு பொண்ணு புருஷன் கோடி கோடியாய் கொண்டு வர்றப்ப அடையும் சந்தோஷத்தை விட, அன்பா அனுசரணையா பேசி தன் தலையை வருடிவிடும் போது படும் சந்தோஷம் தான் உண்மையானது. நீ அதை மட்டும் அவளிடம் வெளிப்படுத்து''

''தாம்பத்தியம் வியாபாரம் இல்லை. இப்போ அவ உன்மேல கோபமா இருக்கலாம். அதை பேசி சரி பண்ணு. உன் தூய்மையான அன்பை அவளுக்குப் புரியலை. இன்னும் இரண்டு நாள் ஆபீசுக்குப் போகாம லீவு போடு பக்கத்திலேயே இரு.''

''அப்ப கூட அவ கோபம் தீருமாங்கிறது சந்தேகம் தான்.''

''பேச்சினால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை கதிர். அன்பு ஒரு வலுவான ஆயுதம். அதை சரியா பிரயோகிக்கணும். நீ உன் மனசிலே மறைச்சி வைச்சிருக்கிற அன்பை வெளிப்படுத்து அவ கோபம் தானா மறைஞ்சிடும்.''

''நடக்குமா அண்ணி, ஜோதி என்னை புரிஞ்சுப்பாளா?''

''கண்டிப்பா.. பெண்களோட மனசு கண்ணாடி மாதிரி. நீ எதை காண்பிக்கிறியோ அதையே அதுவும் பிரதிபலிக்கும் கதிர். மனைவிங்கிற பந்தம் சாதாரணமானது இல்லை. அதனால அவ விருப்பு வெறுப்பு தெரிஞ்சு நடந்துக்கோ''

''சரி அண்ணி''.

''கதிர் தப்போ சரியோ உனக்குன்னு ஒருத்தி வந்திட்டா, அவளுக்கு எந்தக்குறையும் இல்லாம, மனதிற்கு இதமா நடந்துக்க வேண்டியது உன் கடமை என்னா! இந்த வீட்லே உடைஞ்ச மனசோட நான் ஒருத்தி மட்டும் நடைபிணமா உலாவிட்டு இருக்கிறது போதும். இதை என்னோட வேண்டுகோளா எடுத்துக்கோ'' சாந்தினி அந்தக் கடைசி வார்த்தையை உபயோகிக்கும் போது அந்தப் பக்கமாய் வந்த கேசவனின் காதிலும் விழ அவனும் துணுக்குற்றான்.

## 10

இரவு நேரம்.

''என்ன மாமா அத்தை எப்போ வந்தாங்க?'' சாந்தினி கேட்க

''அரைமணி நேரமாச்சு. வந்தவுடனே ரூமிற்குள்ளே போனவதான் வெளியிலேயே வரலை'' என்றார் சுந்தரம்.

''இல்லே மாமா! நைட்டு நடக்க வேண்டிய சடங்கிற்கு அத்தையைக் கேட்க வேண்டுமே அதனாலதான்...'' சாந்தினி இழுத்தாள்.

''சரி வா உங்க அத்தையைக் கூப்பிட்டுப் பார்ப்போம்'' சுந்தரமும், சாந்தினியும் சகுந்தலாவின் அறைக்குள் நுழையவும், இருவருக்கும் புதுதகாட்டிப் படுத்திருந்திருந்தாள். இருட்டினுள்.



''என்ன சகுந்தலா இது? விளக்கை கூட போடாம இருக்கே? வீட்டிலே ஒரு நல்லக் காரியம் நடந்திருக்கு. பெரிய மனுஷித்தனமா எழுந்திரிச்சு எந்த வேலையையும் பார்க்க வேண்டாமா?''

''என்னை ஏன் கூப்பிடறீங்க? எனக்குத் தான் இந்த வீட்லே மதிப்பே இல்லைன்னு ஆகிப்போச்சே? அப்புறம் ஏன் என்னைக் கூப்பிடறீங்க? எந்தப் பிள்ளை என் பேச்சை மீறமாட்டான்னு மலை போல நம்பிகிட்டு இருந்தேனோ அவனே என் தலையிலே கல்லைப் போட்டுட்டான். இனிமே நான் யாரையுமே நம்புறமாதிரி இல்லே. எனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம் அதான் உங்க அருமை மருமக இருக்காளே அவளையே எல்லாம் செய்யச்சொல்லுங்க?''

சகுந்தலா வெடிக்கவும், ''அப்புறம் உன் விருப்பம்'' அவர்கள் வெளியேறிட சகுந்தலாவின் மனம் புகைத்தது.

பார்கவி தான் எத்தனை எடுத்தெறிந்து பேசிவிட்டாள்.

கதிரவன் பேசிவிட்ட பிறகு, நேராய் பார்கவியின் வீட்டிற்குத் தான் சென்றாள் சகுந்தலா. அவள் வந்த அந்தக் கோலத்தைப் பார்த்து விட்டு ''என்ன அண்ணி இப்படி பேயறைஞ்சமாதிரி வந்து இருக்கீங்க?''

''பேய் தான் பார்கவி புதுசா வந்திருக்கு கதிரவன் எவளோ ஒருத்தியை கல்யாணம் பண்ணிகிட்டு வந்து நிற்கிறான்.''

''என்ன அண்ணி சொல்றீங்க? நாம இரண்டு பேரும் கலாவுக்கும், கதிருக்கும் கல்யாணம் பண்ணணுமின்னு முடிவு பண்ணி இருந்தோம். இப்போ இப்படி வந்து சொல்றீங்களே?''

சகுந்தலா ஒன்னும் பேசாமல் கையைப் பிசைந்தாள். ''என் அண்ணி! என் பையன் என் பேச்சைத் தட்டமாட்டான் அப்படியிப்படின்னு அளந்து விட்டீங்க. இப்போ உங்க மூஞ்சிலே கரியைப் பூசி அனுப்பிட்டானா?''

''என்ன பார்கவி நானே மனசு நொந்து போய் வந்திருக்கேன். நீ வேற வெந்த புண்ணுலே வேலைப் பாய்ச்சுறா மாதிரி பேசுறியே?''

''இல்லே அண்ணி நான் என்ன சொல்ல வர்றேன்னா இத்தனை நாளா நீதான் உன் குடும்பத்திலே எல்லாமுமா இருந்தே. இப்போ உன்னை ஒரு கருவேப்பிலை ரேஞ்சுக்கு கூட யாரும் மதிக்கலை. இப்பவே இந்த நிலைமைன்னா நாளைக்கு உன் இரண்டு மருமகளும் சேர்ந்த உன்னை வீட்டை விட்டு விரட்டினாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லே.''

''ஏன் அப்படியெல்லாம் நடக்குமா?'' அப்பாவித்தனமாய் கேட்டாள்



''நம்ம தலைவருக்கு வரவர ஞாபக மறதி அதிகமாயிட்டே போகுது''

''எப்படி சொல்றே''?

''நம்ம கட்சிக்கரை வேட்டி கட்டறதுக்கு பதிலா எதிர்க்கட்சிக் கரை வேட்டி கட்டிட்டு வர்றாரு''.

-முன்னிப்பட்டு கண.சிவகுமார்

சகுந்தலா.

"ஏன் நடக்காது? இப்போ என் பொண்ணு சுலோ அந்த வீட்டுக்கு மருமகளா வந்திருந்தா ஓரளவுக்கு உனக்கு சப்போர்ட்டா இருந்திருக்கும். இப்போ வந்தது உன் மூத்த மருமகளோட கூட்டணி வைச்சிகிட்டு உன்னை ஒன்னுமில்லாம ஆக்கிட்டா என்ன செய்வே சொல்லு!"

பார்கவியின் இந்தப் பேச்சினால் மேலும் குழப்பத்திற்குள்ளானாள் சகுந்தலா. மேற்கொண்டு அங்கிருக்கப் பிடிக்காமல் கிளம்பினாலும், மனதளவில் இதற்கு ஒரு முடிவு கட்டியே தீர வேண்டுமென்ற வைராக்யத்துடன் வீடு திரும்பினாள்.

"எம்மா! சகுந்தலா அத்தையே பாவம் கவலையோட வந்தாங்க. நீ வேற அவங்களைக் குழப்பி விட்டுட்டியோ?" சுலோ தன் துப்பட்டாவை சரி செய்த படியே வந்தாள்.

"நீ வேற சும்மாயிருடி. உன் அண்ணன் நம்மை விட்டுட்டு போனப்போ அவ எத்தனை தூரம் பேசினா தெரியுமா? எம் மனசு அப்போ எவ்வளவு வருத்தப்பட்டு இருக்கும். நீ மட்டும் அந்த வீட்டிற்கு மருமகளா போயிருந்தின்னா சகுந்தலாவை ஒரு வழி பண்ணியிருக்கலாம் இப்போ அதுக்கும் வழியில்லாம போச்சு."

"அதனாலதான் வந்தவமேல முதல்லயே ஒரு வெறுப்பை கொண்டு வந்திட்டா அவளை அவங்களே தனிமைப் படுத்திடுவாங்க."

"இது தேவையா மம்மி நமக்கு?"

"நான் பரம்பரை பணக்காரி. முன்னாடியெல்லாம் என் முன்னாடி நின்னு பேசவே பயந்தவ இப்போ புதுசா பணம் வந்தவுடனே ஆடின ஆட்டத்தைப் பார்க்கணுமே அதுக்கு பதிலடி தர நேரம் வந்திருச்சு"

"என்னவோ செய் மம்மி! நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்." சுலோ கிளம்பவும் பார்கவி டி.வி. பார்க்கத் தயாரானாள்.

முதலிரவு அறை! மெலிதான அலங்காரம் சாந்தினியின் கைவண்ணத்தில் நிலவென ஜொலித்தாள் ஜோதி. எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் இருந்தது அந்த அறை. வெறும் மெத்தை விரிப்பிற்கு நடுவில் இரண்டு வகை மலர்கள், தூவப்பட்டு இருந்தது.

குவளையில் சூடான பால், இனிப்பு வகையறாக்கள், மணம் கமழும் ஊதுபத்தி என இருக்க, தானும் ஒரு அலங்காரப் பொருளோ என நினைத்தாள் ஜோதி.

அவள் மனது இன்னும் ஆறவில்லை. கதிரவன் ஏன் அப்படி சொன்னான்? தன் மனது எண்ணியிருந்ததை நிறைவேற்றிக் கொள்ள சரியான தருணமாய் இதை எண்ணிக் கொண்டானோ? கதிரவனின் பொய்யை நம்பி தந்தையும் அவளும் பிரிந்து விட்டார்களே இருவருக்கும் நடுவில் பெரிய திரை விழுந்து விட்டதே! நான் என்ன செய்வேன்? எப்படி என் மேல் தவறு இல்லையென்பதை நிரூபிப்பேன்? கதிரவனின் செய்கை அவள் மனதில் ஆறாத ரணமாய் இருந்தது.

இதில் ஒரே ஆறுதல் என்னவென்றால் மகேஷின் கொடூரமான மனதை தெரிந்து கொண்டதில் ஒருபுறம் ஆறுதலாக இருந்தது. தாலியும் கட்டி விட்டு அதன் பிறகு அவன் சித்திரவதை செய்ய நினைத்திருந்தால் என்ன ஆகி இருக்கும். தன் வாழ்வில் இப்படியொரு சூறாவளி தாக்கும்



என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. இருப்பினும், இத்தனையும் மீறி திருமணம் மகேஷுடன் நடக்காதது அவளுக்கு ஒரு வகையில் நிம்மதியை தந்தது.

இத்தனை நினைவுகளுக்கும் நடுவில் கதிரவன் உள்ளே நுழைந்ததைக் கண்டாள். எழுந்து நின்று முகத்தை திருப்பிக் கொண்டாள். கதவைத் தாளிட்டவன், தான் வந்ததும் வெறுப்புடன் திரும்பிய மனைவியைக் கண்டான். அவளின் அந்த மௌனம் அவனை அசைத்துப் பார்த்தது.

ஜோதியின் நினைப்போ வேறு ரீதியில் ஓடிக் கொண்டிருந்தது. சொல்லியபடியே திருமணம் செய்து கொண்டான்.

இப்போதென்ன கணவனுக்கு உண்டான உரிமையைத் நிலை நாட்ட வந்து விட்டானோ? அப்படி ஏதும் தன்னை மீறினால் என்ன செய்வது? ஒரு கணம் மலைத்தாலும் பிறகு அதெல்லாம் என்னை மீறி ஒன்றும் நடந்துவிடாதுயென்று மனதிற்குள் சமாதானம் செய்து கொண்டாள்.

ஆனால் அவள் எண்ணியதற்கு மாறாக கதிரவன் மன்னிப்பு கேட்கவும், இவளோ அமர்த்தலாய் ஏற்றுக் கொள்ளாமல் "எதற்கு"? என கேள்வி எழுப்பினாள்.

"அம்மா உன்னைப் பெரிதும் தவறாய் பேசிவிட்டார்களே அதற்கு" என்றான்.

"பெற்றவர்களுக்கு வயிற்றெரிச்சல் இருக்கத்தானே செய்யும்? நம்பிக்கைத் துரோகத்தை மட்டும் யாராலும் தாங்கிக் கொள்ள முடியாது. தாங்கிக் கொண்டு மரமாய் இருக்க அவர் ஒன்றும் ஜோதி இல்லையே?"

கதிரவன் துணுக்குற்றான்.

"ஜோதி என்மேல் கோபமாய் இருக்கிறாயா?" என்ற அவனின் கேள்விக்கு எரிக்கும் விழிகளை அவன் மேல் பாய்ச்சினாள் ஜோதி.

"நீங்க செய்த காரியத்திற்கு கோபப்படாமல் என்ன செய்வது?"

"நான் என்ன செய்தேன்?"

"செய்ததே நினைவில்லையோ?" வெகு சமார்த்தியமாக காய் நகர்த்தி விட்டீர்களே? அத்தனை பேர் நிறைந்த சபையில் எத்தனை இலகுவாய் சொல்லி விட்டீர்கள்.

அந்த மகேஷ் சொன்னதை உண்மையென்று! நான் உங்களை விரும்பினேனா?" கேட்கும் போதே கண்களில் நீர் திரையிட்டுக் கொண்டது.

"சொன்னால்தான் காதலா ஜோதி? உன் விழிகளே எனக்குள் எத்தனை முறை காதலை உணர்த்தின தெரியுமா"

"பைத்தியக்காரத்தனமாய் நீங்கள் எண்ணிக் கொண்டதற்கு நான் காரணமாக முடியாது. என் மனதில் நீங்கள் நிச்சயமாய் இல்லை."

"இதை நான் நம்ப வேண்டுமா?"

"அதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. நீங்க சொன்ன பொய்யினால் நான் அத்தனை பேரின் முன் அவமானப் பட நேர்ந்ததே? என்மேல் எத்தனை பாசமாயிருந்தார் என் தந்தை. அவருடைய நம்பிக்கையை சிதைத்து விட்டீர்களே?"

''நீ ஒரு விஷயத்தை மறந்து விட்டு பேசுகிறாய் ஜோதி. மகேஷ் சேற்றை வாரி இறைத்தது நம் இருவர் மேலும் தான். ஏதோ இந்த விஷயத்திற்கும் எனக்கும் சம்பந்தமேயில்லாதது போலல்லவா நீ பேசுகிறாய்? இப்பவும் சொல்கிறேன் உன் தந்தையிடம் நான் பொய்யுரைக்க வில்லை. நம் இருவர் மனமும் கலந்திருப்பது நிஜம். இதை உணர்ந்தும் நீ மறைப்பது ஏன் என்று தான் எனக்குப் புரியவில்லை.''

''நான் உங்களை விரும்பியதற்கு ஏதாவது ஒரு உதாரணம் உங்களால் கூற முடியுமா?''

''எத்தனையோ? ஆனால் தூங்குபவர்களை எழுப்பி விடலாம். தூங்குவது போல் நடிப்பவர்களை எப்படி எழுப்புவது சிரமம் தான். இருந்தாலும் நான் எதிலும் தோற்றதில்லை.''

''இது ஆணவம்! உங்கள் ஆசையை அரங்கேற்ற என் குடும்பத்தினரிடம் இருந்து திட்டமிட்டு பிரித்து விட்டீர்கள்?'' குற்றம் சாட்டும் தொனியில் அவள் பேசுகையில், அவளின் கோபத்தினால் சிவந்த கன்னங்களையும், பேசும் வேகத்தில் ஆடிய உடலையும் பார்த்தான் கதிரவன்.

தன் மீது அவன் பார்வை பதிந்த இடங்களை உணர்ந்தவள் ''சீ...'' என்றாள். ''இதற்குத் தானே இந்த உடலுக்காகத்தானே என் குடும்பத்தை பிரித்தீர்கள்? அலைந்தீர்கள். என்று கோபமாய் கேட்கவும்.

''முட்டாள் மாதிரி பேசாதே, ஜோதி.

நான் ஒன்னும் யோகி இல்லை மனிதன் தான். சராசரி ஆணுக்குள்ள எல்லா ஆசைகளும் எனக்குள் உண்டு.

ஆனால், உரிமையிருப்பதால் தவறான முறையில் நடப்பவன் நானல்ல. உன் அனுமதியின்றி என் நிழல் கூட உன்மேல் படாது''

''நன்றி...!''

''ஜோதி! உண்மைக்கு உருவம் இல்லாமல் போகலாம் ஆனால் உயிர் உண்டு. நீ என் அன்பை புரிந்து கொள்ளும் நாள் கட்டாயம் வரும். அதுவரையில் நான் காத்திருப்பேன்'' என்றான்.

ஜோதி அங்கிருந்த சோபாவில் படுத்துக் கொண்டாள். கதிரவனை உறக்கம் தீண்ட மறுத்தது.

அங்கிருந்த சேரில் அமர்ந்து அறையில் பார்வையை ஓட்டினான்.



உங்க பாட்டிதான் உனக்கு கண்கண்ட தெய்வம்னு எதை வச்சு சொல்றே?

இடுப்புல சுருக்குப்பை உண்டியல் வச்சிருக்காங்களே!

ஜி.சுந்தர ராஜன், விருதுநகர்.



படுக்கையில் தூவப்பட்டு இருந்த மலர்களும், அடுக்கி வைக்கப்பட்டு இருந்த இனிப்புகளும் அவனைக் கண்டு கசப்பாய் சிரித்தன.

## 11

இரவு முழுக்க அழுகையிலே கரைந்து போயிருந்ததால் ஜோதி கண் விழித்த போது கண்கள் பற்றியெரிவது போல் இருந்தது. குளித்தால் மாற்றுடைக்கு என்ன செய்வது என்று கேள்வி மனதைக் குடைய, குளியல் அறையில் இருந்து திறந்த மார்புடன் வெளி வந்தான் கதிரவன்.

''குட் மார்னிங் ஜோதி'' சிநேகமாய் புன்னகைத்தான்.

''இவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.''

''நான் குளிக்கணும்.''

''இதற்கெல்லாம் என்னிடம் நீ அனுமதி கேட்கத் தேவையில்லை டியர் தாராளமாய் குளிக்கலாம்.''

''கிண்டலா? இதையெல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ள வேண்டாம்.''

''நல்லாயிருக்கே நியாயம். என் பொண்டாட்டியை விடுத்து மற்ற பெண்களை கிண்டலடித்தால், என் உடம்பு என்னாவது?''

''தயவு செய்து வழியை விட்டு நகருங்கள் என்றாள் கோபமாய்.

''உத்தரவு! மகாராணி தலை குனிந்து வழியை விட்டவன். ஜோதி பீரோவில் ஒரு புடவை இருக்கிறது எடுத்து உடுத்திக் கொள்.

பிறகு, நீயும் அண்ணியும் சென்று உனக்கு வேண்டியவைகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றான்.

அவள் பதில் பேசாமல் குளியல் அறைக்குள் நுழைந்து கொண்டாள். குளியலை முடித்து வெளியே வரவும் கதிரவன். அங்கு இல்லை, பீரோவைத் திறந்தாள்.

கண்களை உறுத்தாத பிங்க் நிறத்தில் தங்க நிற வேலைப்பாடுகள் கொண்ட புடவை கண்ணைப் பறித்தது. விலை நிச்சயம் பல ஆயிரங்கள் இருக்கும் என்று தோன்ற அதை ஒதுக்கி வேறு ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள்.

கருநீல நிறத்தில் டைரி ஒன்று கையில் சிக்கியது. முதற்பக்கத்தை திரும்பினாள் கதிரவன் என்று வண்ண ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு இருந்தன. கதவு திறக்கும் சப்தம் கேட்கவும். அவசரமாய் கப்போர்டை மூடினாள். அரைகுறை ஆடையுடன் கணவனின் கண்ணில் பட வேண்டுமே என்ற சங்கடம் உறுத்தினாலும், வந்தது சாந்தினிதான்.

''என்னம்மா குளித்து விட்டாயா? ஏன் புடவை உடுத்திக் கொள்ளவில்லையா?'' இலகுவாய் பேசிய அவளைக் கண்டதும் ஜோதிக்கு வெகுவாய் பிடித்திருந்தது. பிறந்தது முதலே தனிமையாய் வளர்க்கப்பட்டவள் ஜோதி.

உடன் பிறப்புகள் யாரும் அற்ற நிலை, ஏனோ சாந்தினியிடம் இனம்புரியா அன்பு பிறந்தது. அதனால் அவள் தன் மனதில்

தோன்றியதை கூறினாள்.

''அக்கா! ஏதேனும் சிம்ப்ளான புடவையிருந்தால் தாங்களேன் இது ரொம்பவும் பாந்தமாய் இருக்கு'' என்றாள்.

''புதுப் பொண்ணு கட்டிகிட்டு தேவதை மாதிரி ஜொலிக்க வேண்டாமா? இது உனக்கு பிடிக்கலையா ஜோதி?''

''இல்லேக்கா? என் விருப்பத்திற்கு மதிப்பு ஏது? இந்தத் திருமணமே அப்படி நடந்தது தானே''

''கதிரவன் என்கிட்டே எல்லா விஷயத்தையும் சொன்னான் ஜோதி. அவன் உன்னை அடைந்த விதம் வேணுமின்னா தப்பா இருக்கலாம். ஆனால் உன் மேல் கதிர் கொண்ட அன்பும், காதலும் உண்மை ஜோதி. இது நான் நேரில் கண்டறிந்தது.''

''உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது என்று தெரிந்ததும் அவன் எத்தனை உடைந்து போனான் தெரியுமா? என்னால் அவனைத் தேற்றக் கூட இயலவில்லை ஜோதி''.

''அதற்காக என் அன்பை பெறுவதற்காக அவர் கையாண்ட வழிமுறை சரியா? என் தந்தையின் நம்பிக்கையை சிதைத்து விட்டாரே அக்கா. அப்பா என்னை முழுமையாய் வெறுத்து விட்டாரே!'' அழுதாள் ஜோதி.

''ஜோதிம்மா அழக்கூடாது.

பெற்றவர்களால் எப்போதும், ஏன் ஒரு விநாடி கூட தன் குழந்தைகள் மீது வெறுப்பைக் காட்ட இயலாது. அப்பாவிற்கு உன் மேல் கோபம் இருக்கலாம். கோபத்திற்கு ஆயுள் குறைவு தான்''.

''அன்பும் பாசமும் நீர்க்கமானவை.

நானே உன் மேல் எந்த தவறும் இல்லையென்று அப்பாவிடம் போய் பேசுகிறேன்.

நீ கவலைப் படாமல் இரு. கதிர் ரொம்ப நல்லவன் ஜோதி. தயவு செய்து அவனை வெறுத்துவிடாதே'' சொல்லிவிட்டு சாந்தினி இறங்கி சென்று விட்டாள்.

''ஜோதிக்கு சாந்தினியைப் பிடித்து இருந்தாலும், கதிரவனைப் பற்றி அவள் பேசிய அத்தனையும் உண்மையென்று உணர்ந்திருந்த போதும், கதிரவனுடன் சேர்ந்த வாழ்வு என்பதை நினைக்கவே குழப்பமாய் இருந்தது.


மனம் குழப்பத்தில் இருக்கும் போது எந்த முடிவையும் எடுக்கக்கூடாது. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முடியாது. சரியோ தவறோ எதுவாகிலும் கொஞ்ச நாள் ஒத்திப்போடுவோம் என்ற நினைப்பில் அடுத்த வேலையைக் கவனிக்கலானாள்.

ஒருவாரகாலம் வெகுவாய் ஓடி விட்டது. இதில் ஓரளவு அந்த வீட்டில் இலகுவாய் இருக்கப் பழகி விட்டாள் ஜோதி.

சாந்தினி அவளுக்கு ஒரு நல்ல தோழியாகி விட்டிருந்தாள்.

மாமனார் சுந்தரமோ தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்தார். அவர் சேகரித்து வைத்திருந்த புத்தகங்கள் ஜோதியின் மனதை மயிலிறகால் வருடிக் கொடுத்தது போலிருந்தன. சகுந்தலா இவளை ஏறெடுத்தும் பார்ப்பது இல்லை. ஆனால், பாவம் இவளிற்கும் சேர்ந்து





சாந்தினிதான் மாட்டிக் கொண்டு விழித்தாள்.

சாந்தனியும், ஜோதியும் அன்று காலை வேளையில் அடுக்களையில் இருந்தார்கள் சகுந்தலா டைனிங் டேபிளில் வந்த அமர்ந்தபடியே ''என்ன இன்னும் காபி ரெடியாகலையா? ஒருத்திக்கு இரண்டு பேர் இருந்துகிட்டு ஒரு கப் காபி வெச்சுக் கொடுக்க ஆளைக்காணோம்.''

அத்தையின் குரலைக் கேட்டவுடன் பிளாஸ்கில் இருந்து, காபியை கப்பில் வார்த்தாள் சாந்தினி.

''இருங்க அக்கா நான் கொண்டு போய் கொடுக்கிறேன்.''

''வேண்டாம் ஜோதி. அத்தை இப்போ உன்மேல ரொம்ப கோபமாக இருக்காங்க நீ போனா ஏதாவது திட்டிட்டா உன் மனசு சங்கடப்படும். எனக்கு இதெல்லாம் பழகிப்போச்சு.'' பேசியபடியே காபி கோப்பையை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

''ஏண்டி! காபி கேட்டு எத்தனை நேரமாகுது. அங்கேயென்ன இரண்டு பேரும் அரட்டையடிச்சிட்டு இருக்கீங்க?''

''இல்லை அத்தை சட்னி தாளிச்சிட்டு இருந்தேன் காபி இந்தாங்க.''

ஒரு வாய் வாங்கிப் பருகியவள் அந்த கோப்பையை விசிறியடித்தாள். கிச்சனில் தோசை வார்த்துக் கொண்டிருந்த ஜோதியின் காலை பதம் பார்த்தது.

''கல்யாணமாகி ஐந்து வருசமாச்சு புள்ளைப்பெத்துக்கத்தான் துப்பில்லை. ஒரு காபி போடக்கூட வா தெரியாது. உன்னைச் சொல்லித் தப்பில்லைடி மரம் வளர்த்தது மாதிரி வளர்த்து வச்சிருங்காங்களே அவங்களைச் சொல்லணும்.'' சுடுசொற்களால் வறுத்தெடுத்துக் கொண்டிருந்தாள் சகுந்தலா.

கேசவன் அருகில் தான் இருந்தான். ஆனால் வாயே திறக்கவில்லை. உடைந்து போன சாசரை எடுத்துக் கொண்டு சமையற்கட்டினுள் நுழைந்தாள். கண்ணில் நீர் கோர்த்தது. கால் விரலைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த ஜோதியை கண்டதும் அவளின் வலி மறந்து போனது சாந்தினிக்கு!

''என்னம்மா ஆச்சு!?''

''ஒண்ணுமில்லை சாசர் பீஸ் ஒண்ணு காலில் குத்திடுச்சு''

''நீ தள்ளு நான் பாண்ட்டெய்ட் போட்டு விடறேன்.''



கபாலி... கோர்ட்டுல நீ அபராத தொகை கட்டினதை 'காணிக்கைன்னு சொல்றீயே...?

செய்யும் 'தொழிலே' தெய்வம் 'அந்த' தெய்வத்துக்கு கொடுக்கற காணிக்கை தான் அபராதம்.

-கு.அருணாசலம், தென்காசி.



''எனக்கு ஒண்ணுமில்லேக்கா, ஏன் அத்தை இப்படி பேசறாங்க? எனக்குத் தெரிஞ்சு உங்க சமையலில் எந்தக் குறையும் இருப்பதாக தெரியலையே?.''

''அவங்களுக்கு என் மேல தீராத கோபம்! விடு இது தினமும் நடக்கிற ஒன்று தானே!''

''அதெப்படி விட முடியும் அத்தான் பக்கத்திலே தானே இருக்கார். எதும் கேட்கமாட்டாரா?''

''ம்...!'' அதுவரை அடக்கி வைத்திருந்த சாந்தினியின் கண்ணீர் மளுக்கென்று உடைந்தது. ''அத்தைக்கு என் மேல் விரோதம் இல்லை ஜோதி. ஆனா வருத்தம் உண்டு. அதுக்கு எனக்கு குழந்தை பிறக்காமல் போனது கூட காரணமாய் இருக்கலாம். என் கதையெதற்கு நீ காலைக் காமி.''

ஜோதியின் கால்வலிக்கு பாண்டெய்டு ஒட்டியவாறே, ''கணவரின் ஆதரவு எல்லா பெண்களுக்கு கிடைத்து விடுவதில்லை. அந்த வகையில் கதிர் உனக்கு கிடைத்தது அதிர்ஷ்டம்தான். இந்த வீட்டிலே எனக்கும் ஆதரவா பேசற ஒரே ஜீவன் கதிர் மட்டும் தான்.''

''அக்கா உங்களுக்கு ஏன் இன்னும் குழந்தை உண்டாகலைன்னு டாக்டர்கிட்டே போய் பார்த்தீங்களா?'' பேச்சை மாற்றினாள் ஜோதி.

''இல்லேம்மா... எனக்கு அதுக்கு நேரமும் இல்லை. நான்...!''

''அக்கா அவநம்பிக்கையா ஏதும் பேசிவிடாதீங்க என்னோட பிரண்ட் ஒருத்தி இருக்கா. அவகிட்டே பேசிட்டு நாம ஒரு நாள் போய் பார்க்கலாம் கவலைப்படாம இருங்க. உங்களுக்குன்னு தங்கை நான் இருக்கிறேன்.''

சாந்தினி உணர்வின் மிகுதியில் இளையவளைக் கட்டிக் கொண்டாள். ஜோதி ஆதரவாய் அவளின் முதுகை வருடிக் கொடுத்தாள்.

மேற்கொண்டு, சில நாட்கள் கடந்தன. நடுவில் ஒரு முறை தோழி கமலியின் டிஸ்பென்ஸரிக்கு சாந்தினியை அழைத்துச் சென்று வந்தாள். டெஸ்ட் எல்லாம் முடிந்து இன்று தான் ரிசல்ட் வரப் போகிறது. அதற்காகத்தான் கிளம்பிக் கொண்டிருந்தாள் ஜோதி.

## 12

வாரமுதல் நாள் கதிரவன் ஆபிசிற்கு கிளம்பிக் கொண்டிருந்தான். தார்மலாக இருவரும் பேசிக் கொள்வதில்லையே தவிர ஒரு கணவனுக்கு மனைவி செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தும் சரியாய் செய்தாள். அறைக்குள் மட்டும் இருவரும் தனித்தனியாய் பிரித்திருந்தனர்.

எப்போதோ ஒரு முறை நேராய் சந்திக்க நேர்ந்தால் இன்னும் எத்தனை நாள் இந்தத் தண்டனை என்று அவன் கேட்பது போல தோன்றும். அதனால் கூடுமானவரை அவனை தனியே சந்திக்கும் வாய்ப்பினைத் தவிர்த்தாள்.

பகல் முழுக்க அது சாத்தியப்பட்டாலும், இரவு இருவரும் ஒரே அறையில் இருக்க வேண்டிய சூழ்நிலை. கூடுமானவரை அவள்

அறைக்குள் நுழைவதற்குள் இவள் கண்மூடி படுத்துக் கிடப்பாள்.

அதனையும் அவன் கவனித்துவிட்டான். ''ப்ளீஸ் ஜோதி என்னைப்பார்க்க பிடிக்காம எவ்வளவு நேரம்தான் கண்களை மூடிக் கொண்டே இருப்பாய். என் முகம் என்ன அத்தனை மோசமாகவா ருக்கிறது.'' சோகமான பாவனையுடன் அவன் கூறியது அவளுக்கு தன்னையும் மீறி சிரிப்புதான் வந்தது.

''அப்பப்பா இன்றைய தினம் நான் பெரும் பாக்கியம் செய்து விட்டேன் என் இதயராணி சிரித்து விட்டாளே.'' அவன் அடிக்கண்ணில் போதையோடு கூறவும், இவள் அதிலிருந்தது உறங்குவது போல் நடிப்பது இல்லை.

சாக்கிற்கென ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்து கொண்டிருப்பது போல் பாவனையோடு அமர்ந்திருப்பாள்.

ஜோதிக்கு கதிரவன் மேலிருந்த கோபம் சூரியன் கண்ட பனியாய் மறைந்து தான் போயிருந்தது. காதலுக்கு எதையும் மறக்கும், மன்னிக்கும் சக்தியுண்டு என்பது எத்தனை நிஜம். கணவனிடம் மறைத்தாலும், முதற் பார்வையிலேயே அவளை வசீகரித்வன் தான் கதிரவன்.

அவளையும் அறியாமல் நெஞ்சக் கூட்டினில் நுழைந்து சிம்மாசனம் இட்டுக் கொண்டவன் அல்லவா?. இதெல்லாம் போதாதென்று சாந்தினி வேறு கதிரவனின் நற்குணங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்ததும் அவன் மேல் உள்ள கோபம் கரையக் காரணமாய் இருந்தது.

இவையனைத்தைக் காட்டிலும் கதிரவனின் டைரி. வந்த மறுநாள் எதேச்சையாய் பீரோவில் கண்டதும் அதை மறுபடியும் தேடிப் பிடித்து படித்தாள்.

அன்பே!

உன் மவுனமான உதடுகளின் வழியே என் உயிரைக் குடிக்கும் வித்தையைய் எப்படிக் கற்றுக் கொண்டிருக்கிறாய். உன்னை நான் சந்தித்த முதல் நாளில் இருந்து, பிரிக்க முடியாத உணர்வுகளில் மனம் அடையாளம் காண இயலாத படி தவிக்கிறது. காற்றில் மிதந்துவரும் என் சுவாசம் கூட உன்னை அடையாளம் கண்டு விடுகிறது. உன் வாசம் என்னுள் சுவாசிக்க இடம் கேட்கிறதே.

காற்றில் உன் மென்குரல் கவிதையாய், இனிமையாய் அதில் எத்தனை ஆசைகள் பூத்தது அறிவாயா நீ! ஜோதி உன் விழிகளும், முகமும் ஒவ்வொரு நேரமும் எத்தனை உணர்வுகளைச் சித்தரிக்கின்றன.

உன் கண் அசைவிற்காய் நான் ஏங்கியிருந்த சமயம் நீயெனைப் புதிராய் நோக்கியது ஏன்.? விளங்கவில்லையெனக்கு. உதடுகளை விரிக்காமல் மெல்லிய கோடாய் ஒட்டிக் கொண்ட சிரிப்புதான் உன் அடையாளமோ.

வாய் மூடாமல் நான் பேசப்பேச அதை பார்வையில் விழுங்கி அளவோடு கையைக் கட்டிக் கொண்டு ரசித்தாயே அது எத்தனை இன்பம். என் கண்களையேன் உன் இமைகளுக்குள் வைத்துப் பூட்டினாய். சாவியென்னிடம் இருந்தாலும் திறக்கும் மனம் வரவில்லையே எனக்கு!.

அமைதியான ஆழமான அந்த பார்வை என் சிந்தையைக்



கலங்கடிக்கிறது. என் பார்வைகள் நேராய் உன்னைத் தொடத் துடிக்கின்றன. எத்தனை பேரைக் கடந்து அங்கு நீமட்டுமே இருப்பதாய் ஒரு நினைவு.

எப்போதோ ஒரு முறைப்பார்த்தாலும், ஏக்கப்பார்வைகளை மட்டும் வீசுகிறாயே ஏன்? நான் உன்னை நாடுவது போல் உன் மனமும் என்னிடம் பேசத்துடிக்கிறதா? விலகல் கூட நெருக்கத்தை அதிகரிக்க உதவும் என்பது எத்தனை உண்மை.

நீ என்னை விட்டு விலக, விலக உன் அருகாமைக்கு மனம் ஏங்குகிறது. அன்பின் வெளிப்பாடுதானே காதல் அப்படியானால் இதற்கு அதுதான் அர்த்தமா? எவ்வளவு முயன்றாலும் உன் நினைவுகளில் நீந்தாமல் என்னால் இருக்க முடியவில்லையே. காதுக்குள் நாதமாய் ரீங்காரமிடும் உன் குரல் நாடி நரம்புகளில் ஓடி ஒரு வித குளிரைத் தோற்றுவிக்கிறது. அதைப் போக்க வழி தெரியாமல் தவிக்கிறேன் நான்!

நீ இன்னொரு தோட்டத்தில் விதைக்கப்பட போகிறாய் என்று மூளைக்கு உரைத்தாலும், உன் அருகாமைக்கு ஏங்கும் என் மனதிற்கு புரியவில்லையே, நீ என்னை மறந்தாலும் நான் உன்னை என் உயிருள்ளவரை நேசித்துக் கொண்டே இருப்பேன். ஆனால் மனதின் ஒரு மூலையில் என்னவளாகிவிட்ட இந்த ஜோதி நிச்சயம் கதிரவனோடு இணைவாள் என்று! அது மட்டும் உண்மையாகிப் போனால், என்னைவிட அதிர்ஷ்டம் நிறைந்தவன் யாருமே இருக்க முடியாது. ஐ லவ் யூ ஜோதி. என்று முடித்து இருந்தான். அவன் எழுதியிருந்த ஒவ்வொரு எழுத்துக்களும் ஜோதியின் மேல் அவன் கொண்ட உண்மையான காதல் புலப்பட்டது.

இவர் என்மேல் இத்தனை அழுத்தமான காதல் கொண்டிருந்தாரா? வியந்தாள் ஜோதி. திருமணம் நிச்சயமானதுமே, வருங்காலக் கணவன் என்று அதிக உரிமையெடுத்துக் கொண்டு எத்தனை முறை தன் உணர்வுகளுக்கு பதிலளிக்காமல் பேசியிருக்கிறான் மகேஷ். ஆனால், கதிரவனின் மனைவி அவன் படுக்கையறை. என சகலவிதமான உரிமைகள் இருந்தும் என உணர்ச்சிக்கு மதிப்பு தந்த இவன் எங்கே?

எல்லாவற்றையும் தப்பிதமாகவே புரிந்து கொண்டு யார் மனம் என்ன பாடுபடும் என்று கூட உணராமல் செயல்பட்ட மகேஷை விட கதிரவன் எவ்வளவோ மேல்தான்.

எல்லாமும் இனித்தாலும், தந்தையிடம் இருந்து தன்னை பிரித்து விட்டானே என்ற வேதனை மட்டும் அவள் மனதை விட்டு அகலாமலே இருந்தது ஜோதிக்கு!

தனக்கு ஏற்பட இருந்த போராட்டம் மிகுந்த ஒரு வாழ்வில் இருந்து கதிரவன் தன்னைக் காப்பாற்றி விட்டான் என்று மகிழ்வு ஒரு புறம் பிறக்கவே செய்தது ஜோதிக்கு. அதனால் ஓரளவு சகஜநிலைக்குத் திரும்பியிருந்தாள் ஜோதி.

பிரீப் கேஸுடன் கிளம்பிய கணவனை பாலுடன் எதிர் கொண்டாள் ஜோதி.

''கதிர்... பால்...''

பேசாமல் வாங்கிப் பருகியவன் தயங்கும் அவளைக் கண்டதும்,

''என்ன ஜோதி ஏதாவது சொல்லணுமா? தயங்குவது ஏன்?''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் இன்றைக்கு சீக்கிரம் வர இயலுமா?....''

''ம்.. ஆனால் என்ன விஷயம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''காரணம் சொன்னாதான் வருவீர்களா?''

''உடனே கோபமா...'' சிரித்தான்.

''இந்த சிரிப்பு எதற்கு? நான் சீரியஸாகப் பேசுகிறேன்.''

''சரி வருகிறேன். ஏன் ஜோதி நீயேன் ஆசிரமத்திற்குப் போகவே இல்லை. உங்கள் இல்ல ஸ்தாபகர் சாரதா அம்மையாரை நேற்று சந்தித்தேன். நீ திருமணத்திற்குப் பிறகு இங்கு வருவதேயில்லை என்று குறைபட்டுக் கொண்டார். நீ தாராளமாக இல்லத்திற்குப் போகலாம் ஜோதி. மனைவியின் தனித்தன்மையை குறை கூறும் கணவனில்லை நான்.''

''உண்மைதான்.. ஆனால் மனம் எதிலும் லயிக்கவில்லை.'' என்று பெருமூச்சு ஒன்றை வெளியிட்ட மனைவியை வேதனையோடு நோக்கினான் கதிரவன்.

''என்னை மன்னித்துவிடு ஜோதி திருமணம் என்ற பந்தத்தில் நுழைந்து உன்னை ரொம்பவும் நான் துன்புறுத்தி விட்டேன் இல்லையா?''

''நான் கேட்டதற்கு இன்னமும் பதில் சொல்லவேயில்லையே?''

''வருகிறேன்.'' அவன் அரைகுறைப் புன்னகையோடு கிளம்பிப் போனான்.

## 13

''எனக்கு ரொம்ப பயமாயிருக்கு ஜோதி, ரிசல்ட்டில் என்ன வருமோ? டாக்டர் என்ன சொல்வாரோ?''

''அக்கா நல்லதே நினையுங்கள் நல்லதே நடக்கும்''

ஜோதியும், சாந்தினியும், சுகம் மருத்துவமனையின் நாற்காலியில் அமர்ந்தபடி பேசிக்கொண்டு இருந்தார்கள். ஏழு நாட்களுக்கு முன் எடுத்த டெஸ்டின் ரிசல்ட் இன்றுதான் வருவதாய் சொன்னார்கள். அதை பெற்றுக் கொள்ளத்தான் இருவரும் வந்திருந்தார்கள்.

சாந்தினி ஊரில் இருக்கும் அத்தனை கடவுள்களுக்கும் மனு போட்டாள். எனக்கு ரொம்ப டென்ஷனாயிருக்கு, என்றவளின் கையை அழுத்தப்பற்றி ஆறுதல் கூறினாள் ஜோதி.

''டோக்கன் நம்பர் 12, மிஸஸ் சாந்தினி நீங்க போகலாம்,'' இருவரும் உள்ளே நுழைய கமலி சிநேகப் புன்னகையை உதிர்த்தப்படியே ''வா ஜோதி உட்காருங்க'' என்றார்.

''கமலி அக்காவுடைய டெஸ்ட் ரிப்போர்ட் என்னாச்சு?''

''டென்ஷன் ஆகாதே ஜோதி. நத்திங் டு ஒர்ரி. அவங்க ரிப்போர்ட்டை இப்போ தான் பார்த்தேன். சாதாரண பிராப்ளம் தான். அவங்க பையில் விந்தணுக்கள் போகிற இடத்தில் சின்ன அடைப்பு இருக்கு. இது நார்மலா நிறைய பெண்களுக்கு ஏற்பட்ற சின்ன குறைதான்.''



''நான் சில டேப்லட்ஸ் தர்றேன் ஒரு டி அன்ட் சி பண்ணிடலாம். அப்புறம் மாதவிடாய் முடிந்த மூன்றாவது நாள் சேர்ந்தால், கட்டாயம் கருத்தரிக்க வாய்ப்பிருக்கு.''

''ரொம்ப நன்றி டாக்டர்.''

''ஏன் மேடம் இது ஒரு சின்ன தடங்கல். யாராவது நல்ல டாக்டர் ஒருவரிடம் கன்சல்ட் பண்ணியிருந்தால் இந்நேரம் நீங்க குழந்தை பெற்று இருந்திருக்கலாமே?'' இத்தனை நாட்கள் தள்ளிப் போட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லையே.''

''டாக்டரின் கேள்விக்கு ஒரு வறண்ட புன்கையுடன் என்மேல் அக்கறையுள்ள ஜீவனை இப்ப கொஞ்சநாளைக்குத்தானே சந்தித்திருக்கிறேன். சாந்தினியின் கண்கள் நன்றியோடு ஜோதியை ஒருமுறை தழுவி மீண்டன.''

இரவு நேரம்.

சிட்அவுட்டில் நிலாவின் துணையோடு சில கோப்புகளை சரிபார்த்துக் கொண்டிருந்தான் கதிரவன்.

ஜோதி அவனெதிரில் போட்டபட்டு இருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தாள். ''முக்கியமான வேலையில் இருக்கிறீர்களா?''

அவன் நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான். ''என்ன விஷயம் ஜோதி?''

''கதிர் உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''அதைத்தான் காலையிலேயே சொன்னியே? சொல்லு'' ஜோதி.

அவள் சாந்தினியை மருத்துவமனைக்கு கூட்டி சென்றது முதல் டாக்டர் கமலியிடம் பேசியது வரை கூறி முடித்தாள்.

''தேங்க்யூ ஜோதி...'' கதிரவன் உணர்ச்சி வசப்பட்டு, அவள் கையைப் பற்றிக் கொண்டான். ''அண்ணி எத்தனை நல்லவங்க தெரியுமா? தன்னை வெறுக்கிறவங்ககிட்டே கூட பாசம் காட்டுபவர்கள். இத்தனை வேதனைகளையும் கடந்து இந்த குடும்பத்திற்காக ரொம்ப கஷ்டப்பட்டாங்க, நானும் அவங்களுக்கு ஏதாவது நல்லது செய்யணுமின்னு நினைச்சிகிட்டே இருந்தேன். ஆனா இப்போ நீ செய்து இருக்கிற உதவி..''

''இருங்க கதிர் ஏன் இப்படி உணர்ச்சி வசப்படறீங்க. அக்கா ரொம்ப நல்லவங்கன்னு வந்த கொஞ்ச நாளிலேயே நான் புரிஞ்சுகிட்டேன்.



உங்களை வெல்ல யாராலும் முடியாது.

சோதிடரே! எனக்கு கல்யாணம் ஆகி பொண்டாட்டி இருக்கான்னு உங்களுக்கு தெரியாதா.

-கு. அருணாசலம், தென்காசி.

அவங்க வாழ்வு சிறக்க நான் மேற்கொண்டது பாதி முயற்சிகள் தான். இதுக்கு உங்க உதவியும் தேவை அதனால்தான் பேச வந்தேன்.''

''நான் என்ன செய்யணும்?''

''முதலில் உங்க அண்ணன் ஏன் இப்படி இருக்கிறார்? சொந்த மனைவியின் விருப்பு வெறுப்புகளை உணராமல்.. அத்தை பெரியவங்க தான் கண்டிக்க உரிமையிருக்கு, இருந்தாலும் நியாயம் என்று ஒன்றில்லையா? சின்னச் சின்ன தப்புகளுக்கு எல்லம் தீயிடுவது போல் வார்த்தையால் பொசுக்கணுமா?''

''அன்றைக்கு எனக்காக நீங்க அத்தைகிட்டே பேசலையா? நமக்குள் ஆயிரம் இருந்தாலும், பிரத்தியாருக்கு முன் என்னை விட்டுத்தரலையே, அந்த அன்பும், தைரியமும் ஏன் உங்க அண்ணனிடம் இல்லை?.''

''நன்றி ஜோதி...''

அவள் புரியாமல் திடீரென கணவன் நன்றியுரைத்ததற்காகன காரணம் என்னவாயிருக்கும் என்று நோக்கினாள்.

''நான் உன் மேல் அன்பு கொண்டுள்ளேன் என்று புரிந்து கொண்டதற்கு! தவிரவும், கேசவன் சிறுவயது முதலே அம்மாவின் பேச்சைத் தட்டமாட்டான். ஒரு கண்மூடித்தனமான பற்றுதல் அம்மாவிடம் அவனுக்குண்டு. அண்ணியை அவங்க வெறுத்து ஒதுக்க ஆரம்பிச்சாங்க. இவனும் விலகுறானோன்னு நினைச்சேன்.

''அவங்களுக்குன்னு ஒரு குழந்தை பிறந்திட்டா பிரச்சனையிராது இருப்பினும், உன் அந்தரங்கம் எப்படிப்பட்டதுன்னு அண்ணனிடம் கேட்க மனம் முன்வரவில்லை.''

''இரண்டு மனசு சங்கமிக்கும் போது பிறக்கிற உறவுதான் கதிர் பாலமா அமையும். முதல்ல அவங்க மனசை சேர்க்கணும். அதுக்கு உங்க உதவி எனக்குத் தேவை.''

''நான் என்ன செய்யணும் ஜோதி.''

''கணவன், மனைவி உறவின் புனிதம் பற்றி அவருக்கு சொல்லணும்.''

கதிரவன் அமைதியானான்.

''என்னங்க.. இவ்வளவு நேரம் பேசிட்டு இருந்தீங்க இப்போ அமைதியாயிட்டீங்களே?''

''ஜோதி கணவன், மனைவி அன்யோன்யத்தைப் பற்றி சொல்ல எனக்குத் தகுதியிருக்கா? திருமணமாகி ஒரு மாதம் ஆயிடுச்சு. இன்னும் நமக்குள்ளே எந்த விதமான அண்டர்ஸ்டாண்டிங்கும் இல்லை, ஏதோ பேயிங்கெஸ்ட் மாதிரிதானே நீயும் இருக்கே? ஒருத்தருக்கு அறிவுரை சொல்றதுக்கு முன்னாடி நாம ஒழுங்கா நடந்துக்க வேண்டாமா?''

''அவங்க வாழ்க்கை வேற நம்ம வாழ்க்கை வேற? அவங்க முன்னாடி ஒரு காலத்தில் கருத்தொருமித்த தம்பதிகளா வாழ்ந்து இருக்காங்க.''

''வந்த குறுகிய நாட்களிலேயே என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருத்தரைப் பற்றியும் நன்றாகப்புரிந்து வைத்திருக்கிறாய். ஆனால் என்னையும் என் அன்பையும் தவிர!''

''கதிர்...!''

''என் காதலை நீ உணர தான் இன்னும் எத்தனை காலம் காத்திருக்க



வேண்டும் ஜோதி? ஏக்கமாய் ஏறிட்டான் மனைவியை. என் மேல் உள்ள கோபம் இன்னமும் மறையவில்லையா?''

கதிர் அமைதியானாள், ''கதிர் இந்த நிமிஷம் வரை நிஜமா உங்க மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லை. ஆனா நிறைய வருத்தமிருக்கு! நான் யதார்த்தத்தை விரும்பறவ அதனால உங்க அன்பை புரிஞ்சுகிட்டேன்.''

''நிஜமாகவா?'' ஆச்சரியமாய் விழிகளை விரித்தான்.

''பார்க்கப் போனா மகேஷ் கூட அமைய இருந்த ஒரு போராட்டமான வாழ்க்கையில் இருந்து என்னை நீங்க காப்பாத்திட்டீங்க. ஆனா என் பெற்றோரிடம் இருந்து பிரிச்சிட்டீங்களே எனக்கு அந்த கவலை தான். முதல்ல நம்ம கல்யாணத்தை நம் வீட்டுப் பெரியவங்க எல்லோரும் ஒப்புக்கட்டும், அதன் பிறகு உங்களை ஏற்க எனக்கு தடையில்லை.''

தீர்க்கமாக அதே நேரம் வெகு நிர்மானமாகவும் சொல்லிவிட்டு சென்ற மனைவியை வியப்பாய் பார்த்தான் கதிர்.

## 14

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வீட்டில் அத்தனை உறுப்பினரும் குழுமியிருந்தார்கள். வழக்கமாய் லேடீஸ் கிளப், மீட்டிங் என்று வெளியே செல்லும் சகுந்தலா கூட அன்று வீட்டில் அமர்ந்திருந்தாள் சுந்தரமும், அவளும் டி.வி.யைப் பார்த்தபடியே, மெதுபக்கோடாவையும், பதினாசட்னியையும் சுவைத்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்கு நேரெதிர் இருக்கையில் சகோதரர்கள் இருவரும் அலுவலக விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தனர்.

''கதிரவா...''

''ம்...''

''இந்த மாத பேங்க் ஸ்டேட்மெண்ட்டை ரெடி பண்ணிட்டேன். அப்புறம் நம்ம கம்பெனிக்கு ரா மெட்ரீயல்ஸ் சப்ளை செய்ற கம்பெனிக்கு செக் எழுதி வெச்சிருக்கேன். கணக்கை சரிபார்த்து சைன் பண்ணிட்டீன்னா அனுப்பிடலாம்.''

''கதிரவன் அவன் நீட்டிய பைலை சரிபார்த்து கையெழுத்திடவும்,'' கேசவன் மறுபடியும் பேச்சை ஆரம்பித்தான்.

''நாம வாஷர் வாங்கிற பழைய கம்பெனி மேல நிறைய புகார் வந்துகிட்டே இருக்கு. அதனால வேற கம்பெனியில் இருந்து வாஷர் வாங்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்.''

''இந்த பைலில் மூன்று வாஷர் கம்பெனியோட கொட்டேஷன்ஸ் இருக்கு. நான் பார்த்த வரையில் ரோஷன் வாஷர்ஸ் பெஸ்ட் கம்பெனியா தெரியுது. தவிரவும், இப்பத்தான் ரீஸண்டா கம்பெனிக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை வழங்கியிருக்காங்க. மார்க்கெட்லயும் ரோஷனுக்கு நல்ல ஆபர் இருக்கு.''

''கரெக்ட் அண்ணா, ரோஷன் வாஷர்ஸ் இட்ஸ் குட், உங்க கணிப்பு சரிதான். அவங்க கோட் பண்ணியிருக்கிற அமவுண்ட் சரிப்பட்டு வந்தா

அக்ரிமெண்ட் போட்டுக்கலாம்.''

''சரிடா..'' இருவரும் பேசியபடி இருக்க, தேநீரும், பக்கோடாவும் கொண்டு வந்து மேஜை மேல் வைத்தாள் ஜோதி.

அதே நேரம் மேஜையின் மேல் இருந்த போன் ஒலித்தது. கதிரவன் தான் முதலில் எடுத்தான்.

''ஹலோ...யாரு? அகிலாவா. வாட் எ சர்ப்பரைஸ்.''

''கதிரவனா? எப்படிடா இருக்கே?''

''ம்.. நல்லாத்தான் இருக்கேன். நீ...!''

''பரமசுகம். ஆமா யாரோ ஒரு பெண்ணைக் கடத்திட்டு வந்திட்டியாமே..?''

''விஷயம் உன் காதுவரை வந்தாச்சா? நீ எப்படி பஸ்லியா, டிரெயினிலா?''

''பிளைட்டில் அம்மா போன் பண்ணி ஒரே புலம்பல். உனக்கு என்ன அப்படியொரு அவசரம். மத்த எல்லாரும் நலம் தானே! அம்மாகிட்டே கொடேன்.''

''ஏன் நீயும் புலம்பப் போறியா?''

''இண்டல் பண்ணாம போனைக் கொடு.''

''அம்மா, அக்கா பேசுறா? ''அவன் சொல்லி முடிக்கவும், ''யாரு? அகிலாவா'' என்று கேட்டபடியே தாவி வந்து ரீசிவரைப் பிடுங்கினாள் சகுந்தலா.

''அம்மாடி... கண்ணு.. எப்படிடா இருக்கே?''

அகிலா மறுமுனையில் என்ன சொன்னாளோ அம்மாவின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரிந்தது. ''நீ உடம்பைப் பார்த்துக்கோடா, நான் நாளைக்கே வந்திடறேன்.'' போனை வைக்கவும்,

''என்ன சகுந்தலா! அகிலா என்ன சொன்னாள்?'' சுந்தரம் மனைவியைக் கேட்டார்.

''நம்ம அகிலா முழுகாம இருக்காளாம். முதல் ஆபரேஷன்கிறதால இப்போ உடம்புக்கு ரொம்பவும் முடியலையாம். என்னை வரச்சொல்லி கேட்டா நாளைக்கே நாம ஊருக்குப் போறோம். நீங்க உடனே போய் டிக்கெட் புக் பண்ணுங்க சகுந்தலா உற்சாகமானாள்.

''அகிலா நல்லாயிருக்காளா அத்தை? இது எத்தனையாவது மாசமாம்'' என்று சாந்தினி கேட்டதுதான் தாமதம்.

''எதுக்குடீ எம்பொண்ணைப் பத்தி கேட்குறே? கல்யாணமாகி எத்தனை வருஷமாச்சு வயித்துலே ஒரு புழுபூச்சி இல்லை, எம்பொண்ணு மேல எரிச்சல் படறீயா? இதோ பாரு நாளைக்கு நான் ஊருக்கு போகும் வரையில் நீ என் கண்ணிலேயே படக்கூடாது''

''என்ன சகுந்தலா இப்போ அந்தப் பொண்ணு என்ன தப்பா கேட்டுச்சின்னு இப்படி பேசுறே''

''ஓஹோ... அவளுக்கு நீங்க என்ன பினாமியா... முதல்ல போய் டிக்கெட் எடுத்திட்டு வர்ற வழியைப் பாருங்க... அப்புறம் கேசவா, நீயும் எங்க கூடவே வந்திடுடா! இங்க விட்டுட்டுப் போனா உன்னையும் மாத்திடுவாளுங்க'' அம்மா சொல்லவும், என்ன பதில் சொல்வதென



முழித்தான் கேசவன்.

அதுவரை பேசாமல் இருந்த கதிரவன் வாய் திறந்தான். ''அம்மா, அவன் என்ன வேலை வெட்டி இல்லாதவனா? ஊர் சுத்த? ஆபீஸில் முக்கியமான ஆடிட்டிங் வேலையெல்லாம். இருக்கு! நீதான் உன் துணைக்கு அப்பாவை கூட்டிட்டு போறேயில்லே, அப்புறம் கேசவன் வேற எதுக்கு?''

''இருந்தாலும் தாய் மாமன் இல்லையா?''

''குழந்தை பிறக்கட்டும் அதன் பிறகு நாங்க வர்றோம். இப்போ நீயும் அப்பாவும் மட்டும் போங்க நைட் டிக்கெட் ரெடி பண்றேன்''

''ஆமா சகுந்தலா நான் வர்றேன். கேசவன் இங்கே இருந்தால் கதிருக்கு உதவியாய் இருக்குமே!'' சுந்தரம் சொல்லவும்.

''அதான் கொஞ்ச நாளா என் பேச்சுக்கு எல்லாம் எதிர் பேச்சு பேசணுமின்னு எல்லாரும் முடிவு பண்ணிட்டீங்களோ! சகுந்தலா அரை மனதாய் ஒப்புக் கொண்டாள். கிளம்பும் வரையில் புலம்பல் நிற்கவே இல்லை. யாரிடமும் சொல்லிக் கொள்ளவும் இல்லை. சுந்தரம் மட்டும் மருமகளிடம் சொன்னார்.

''அவ சுபாவம்தான் உனக்குத் தெரியுமேம்மா அதையெல்லாம் ஒரு குறையா எடுத்துக்காதே! உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லபடியாத்தான் நடக்கும். நான் போயிட்டு வர்றேன்மா'' ஆறுதலாய் பேசியபடி கிளம்பினார் சுந்தரம்.

★ ★ ★

கதிரவன் தனக்கு முன்னால் குஷன் நாற்காலியில் அமர்ந்திருந்த அந்த டை கட்டிய ஆசாமிகளை யோசனையாய் பார்த்தான்.

''வி ஆர் பிரம் ஆஸ்திரேலியன் பம்ப்ஸ் மோட்டார்ஸ், இன் கொல்கத்தா. லாஸ்ட் டைம் நாங்க ஆர்டர்ஸ் எடுத்த கம்பெனியோட டீலிங்ஸ் எல்லாம் திருப்திகரமாக இல்லை, எங்க கம்பெனி மொத்தமா ஆர்டர்ஸ் எடுத்துகிட்டு வெளிநாடுகளுக்கு சப்ளை செய்கிறோம்.''

''கூல்ட்ரிங்ஸ் வரவும் இடைவெளி எடுத்துக் கொண்டு மீண்டும் பேசினார்கள்.

இப்போ உங்க கம்பெனியோட கான்ட்ராக்ட் போடறது பத்தி



என் தம்பியோட கல்யாணத்துக்கு மூத்த அக்கா பிரிட்ஜ் பிரசன்ட் பண்ணுறா. ரெண்டாவது அக்கா டி.வி. பிரசன்ட் பண்ணுறா நீங்க என்ன பண்ணப் போறீங்க?

உங்கக்காலை என் தலையில கட்டி வச்சேன்னு உன் தம்பி கிட்டேன்னு வேணா பிரச்சனை பண்ணட்டுமா.

-அனுஸ்ரீராம், சாத்தூர்.

ஒப்பீனியன் கேட்டு வந்திருக்கோம்.

''வெல் மிஸ்டர் கதிரவன் நீங்க என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?''

''எங்க கம்பெனியை எப்படி ரூல் பண்ணீங்க?''

''லாஸ்ட் டைம் ஒரு காம்பிரன்ஸ்க்காக நீங்க மும்பை வந்திருந்தீங்க இல்லையா அப்பவே உங்க கூட பேசினது எனக்கு பிடிச்சு இருந்தது. சேம்பர் அசோஷியேசனில் மிஸ்டர் ராம்குமார் உங்களைப் பற்றி சொன்னார். வெப்பில் உங்க சூர்யா பம்ப்ஸ் அண்ட் மோட்டார்ஸ் பத்தின டீடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணினோம். சிட்டியில் உங்க தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கு. ஸோ, எங்க ஆர்டரை உங்களுக்கே தர முடிவு பண்ணியிருக்கோம்''

''தேங்யூ ஜென்டில்மென்''

''எங்களுக்கு மொத்தம் 2 லட்சம் மோட்டார்ஸ் தயார் பண்ணனும். இதை நீங்க மூனு ஷெட்யூலாப் பண்ணலாம். பிராஜெக்ட் ஆரம்பிக்கறதுக்கு முன்னாலேயே நாங்க அட்வான்ஸா பாதித் தொகையை தந்திடுவோம்.

மீதியை ஷெட்யூல் முடியும் தருவாயில் நீங்க வாங்கிக்கலாம். இது தான் டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ். இதற்கு சம்மதம் என்றால் ஹோட்டல் எமரால்டில் ரூம் நெம்பர் 201-ல் தங்கியிருக்கிறோம் இன்பார்ம் பண்ணுங்க''

''தேங்யூ ஸார், பட் யோசிக்க எனக்கு ஒரு திரி டேஸ் டைமிங் வேணும்''

''பிரச்சனையில்லை, நாங்க உங்க பேக்டரியை சுத்திப் பார்க்கலாமா?''.

''தாராளமாக'' இது என் அண்ணன் மிஸ்டர் கேசவன். இவர் உங்களுக்கு அனைத்தையும் காட்டுவார்'' அவர்களை கேசவனுடன் அனுப்பிவிட்டு, மானேஜர் நடேசனிடம் பேசினான்.

''என்ன நடேசன் இந்த புராஜெக்ட்டை ஒப்புக்கலாமா? நல்ல பிராபிட் கிடைக்கும் உங்க ஒப்பீனியன் என்ன?''

''ஸார் இது ஒரு பெரிய புராஜெக்ட் எடுத்தோம் கவுத்தோமின்னு முடிவு பண்றதை விட உங்களை ரெகமண்ட் பண்ணின மிஸ்டர் ரகுராமைப் பார்த்து பேசறது நல்லதா எனக்குப்படுது''

நடேசனின் பேச்சில் உண்மையிருப்பதை புரிந்து கொண்ட கதிரவன், நீங்க சொல்றது கரெக்ட் மிஸ்டர் நடேசன். நாளை மறுநாள் மும்பைக்கு போக ஏற்பாடு செய்யுங்க என்றான்.

அவர் தலையசைப்போடு விடை பெறவும், பியூன் உள்ளே நுழைந்தான். ஸார் சாரதா இல்லத்தில் இருந்து ஒரு அம்மையார் வந்திருக்கார்.

''எங்கே...?''

''வரவேற்பறையில் உட்கார வைத்து இருக்கேன்''

''உள்ளே வரச்சொல்லுங்க'' கதிரவன் சொன்ன பத்தாவது விநாடியின் முடிவில், அந்த அம்மையார் கதிரவனின் எதிரில் நின்றார்.

''வாங்க மேடம் பிளீஸ் உட்காருங்க என்ன சாப்பிடறீங்க?''



''எதுவும் வேண்டாம் கதிரவன் நான் ஒரு முக்கியமான விஷயமா உங்களைப் பார்க்க வந்தேன்''

என்னவென்பது போல் பார்த்தான்''

''ஜோதி எப்படியிருக்கா?''

''ம்... நலம்தான்''

''உங்க கல்யாணத்திலே நடந்த குளறுபடியெல்லாம் கேள்விப்பட்டேன் அன்றைக்கு ஆசிரமத்திலே ஒரு பெரியம்மா தவறிட்டதாலே என்னாலே வர முடியாமப் போச்சு. நேற்று அவங்கப்பா வந்து என்னை சந்தித்தார்.

''ஜோதி மேல நான் எவ்வளவோ நம்பிக்கை வச்சிருந்தேன்.

ஆனா அவ என்னை ஏமாத்திட்டாளு கவலைப்பட்டார். நீங்களே சொல்லுங்க கதிர் ஜோதி செய்தது சரியா? எதுவாயிருந்தாலும், என்கிட்டேயாவது சொல்லியிருக்கலாமே?''

''மேடம் ஜோதி மேல எந்த தப்பும் இல்லை. இன்பேக்ட் கல்யாணத்திலே மகேஷ் அப்படி நடந்துக்குவார்ன்னு யாருமே நினைக்கலை.

நான் ஜோதியை லவ் பண்ணியது நிஜம். அவங்களுக்கு என் மேல் விருப்பம் இருந்தாலும் அவள் அதை வெளிக்காட்டவே இல்லை''

''அன்னைக்கு மண்டபத்திலே அத்தனை பேர் முன்னாடி என் ஜோதியைப் பற்றி மகேஷ் எத்தனை கேவலமாய் பேசினான் தெரியுமா? அத்தனை பேர் முன்னிலையில் நான் நேசித்தவள் துடிக்கிறாள். அதனால்தான் நாங்க காதலர்கள்தான்னு சொன்னேன். மத்தபடி ஜோதி மேல எந்தத் தவறும் இல்லை.

இன்று வரையில் அப்பா தன்னை நம்பவில்லையே என்ற ஏக்கம் மனசில் இருக்கத்தான் செய்கிறது மேடம்''

அந்த அம்மாள் கதிரவனை வியப்பாய் நோக்கினார். ''கதிரவன் இது மட்டும் ஜோதியின் தந்தைக்கு தெரிந்தால் ரொம்பவே சந்தோஷப்படுவார். என் தம்பி நான் ஒன்று சொன்னால் கேட்பீர்களா?''

''சொல்லுங்க மேடம்...''

''நீங்க ஜோதியின் அப்பாவைப் பார்த்து பேசினா இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைக்கும். நல்ல தகப்பனின் மனமும் குளிரும் இல்லையா?''

''உண்மைதான் மேடம்.

நான் கூடிய விரைவில் அவரைச் சந்திக்கிறேன். ஒரு நிமிடம்'' கதிரவன் தன் செக்புக்கை எடுத்து 25000 ரூபாய்க்கு காசோலையை நீட்டினான்.

தப்பா நினைக்க வேண்டாம். இதை நானே நேரடியா உங்ககிட்டே கொண்டு வந்து தந்திருக்கணும் பிளீஸ்''

''நன்றி கதிரவன் பிரியா இருக்கும் போது ஒரு முறை ஜோதியையும் அழைத்துக் கொண்டு இல்லத்திற்கு வாருங்கள்'' என்று கூறிவிட்டு கைகூப்பி விடைபெற்றார் அந்த அம்மையார்.

**15**

**மா**லை மயங்கிய நேரம். சாந்தினி இரவு உணவிற்காக சப்பாத்தி மாவை நன்கு அடித்து பிசைந்து கொண்டிருந்தாள். கேசவன் கூடத்தில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருக்க, அங்கு வந்த ஜோதி அத்தை ஊருக்குப்போயிருக்கும் சமயம் இவர்கள் இருவருக்கும் உள்ள இடைவெளியை சரிசெய்யலாம் என்று பார்த்தாள் இவர்களென்னை ஆளுக்கொரு மூலையில் அமர்ந்து இருக்கிறார்கள். இது சரிப்பட்டு வராது என்று எண்ணியவள் நேராய் சாந்தினியின் முன் சென்றாள்.

"அக்கா என்ன பண்றீங்க?"

"நைட் டிபனுக்கு சப்பாத்தியும் உருளைக்கிழங்கு மசியலும் செய்யப்போறேன்"

"இப்படி பொழுதுக்கும் அடுப்படியிலேயே வேலை பார்த்துகிட்டு இருந்தா அத்தான் மனசு எப்படி மாறும். அத்தான் தனியாத்தான் இருக்கார். இந்த வேலையெல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க போய் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருங்க"

"போ ஜோதி! சும்மா விளையாடிக்கிட்டு, நாங்களென்ன புதுசா கல்யாணம் ஆனவங்களா பேசிகிட்டு இருக்க?"

"அட நீங்க வேற எல்லாம் மனசிலே தான் இருக்கு. அன்னியோன்யமா வாழ்ற தம்பதிகள் கூட ஒரு நாளைக்கு குறைந்தது 15 நிமிஷமாவது மனசுவிட்டுப் பேசணுமாம். அப்பத்தான் வாழ்க்கையிலே பிரிவு ஏற்படாதுன்னு டாக்டர்ஸ் எல்லாரும் சொல்றாங்க. பேச்சிலே சாதிக்க முடியாதது எதுவுமேயில்லைக்கா. எல்லா தம்பதியினரும் தாங்கள் புதுமணமக்கள் என்ற நினைப்பில் இருந்தால் பிரிவே ஏற்படாதாம்"

சாந்தினி இளையவளின் பேச்சை ரசித்தபடியே மாவை பிரித்து உருண்டைகளாக்கினாள்.

"நான் உண்மையைத்தான் சொல்றேன் அக்கா! புருஷன் வேலைக்குப் போயிட்டு அலுத்து வரும்போது எதுக்கு பொண்டாட்டியை அழகா இருக்கச் சொல்றாங்க தெரியுமா?"

"எதுக்கு?" நன்றாக வேகவைத்த உருளைக்கிழங்கின் தோலினை உரித்தவாறே கேட்டாள் சாந்தினி.

"அக்கா நமக்காகவே ஒருத்தி காத்துகிட்டு இருக்காளேங்கிற நினைப்பு அவங்களுக்கு இருக்கணும். மறுநாள் சீக்கிரமே வருவாங்க, எங்கேயுமே நாம எதைக் கொடுக்கிறோமோ அதுதானே திருப்பிக் கிடைக்கிறது"

"உண்மைதான் ஜோதி. அன்பை எப்பவும் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருக்கணும். அது ஒரு பார்வையில் தெரிந்து விடாதா? அவருக்கு என் மீது உண்மையான அன்பு இருக்கே?"!

"இருந்து என்ன புண்ணியம்? அதை செயல்படுத்தணுமே? ஒரு ஆண் வீட்டை விட்டு வெளியேறிட்டா எத்தனையோ விஷயங்களில் மனம் சஞ்சலப்படும். இன்றைய இயந்திரத்தனமான உலகில் எதையும் வெளிப்படையா பேசினாத்தான் பிணக்கில்லாம வாழ முடியும்"



"இப்ப நான் என்ன செய்யணும்"

"அத்தை ஊரில் இல்லை. அதுதான் உங்களுக்கு சான்ஸ். இப்போ அத்தானை உங்க வழிக்கு கொண்டு வந்தாத்தான் உண்டு. என்னை வடிஞ்ச முகத்தைக் கழுவிவிட்டு, நல்ல புடவை கட்டிகிட்டு பளிச்சின்னு அத்தான் முன்னாடி போய் நில்லுங்க" அவள் விரட்ட சாந்தினி வேறு வழியின்றி நகர்ந்தாள்.

கேசவன் புத்தகத்தில் மூழ்கி இருக்க "என்னங்க ஆபிஸிலிருந்து இத்தனை சீக்கிரம் திரும்பிட்டீங்க?" மனைவியின் கேள்விக்கு நிமிர்ந்தவனின் கண்களில் வியப்பு மின்னியது.

"என்னங்க அப்படி பாக்குறீங்க?"

"ஏன் நான் பார்க்கக் கூடாதா சாந்தி"

"கணவனின் பார்வையை விரும்பாத பெண் யாரும் உலகில் இல்லை. இந்தக் கனிவான பார்வைக்காக நான் ரொம்ப நாளா காத்திருக்கிறேன்"

"இன்னைக்கு நீ ரொம்ப அழகா இருக்கே சாந்தி. நீயேன் டெய்லி இப்படி டிரஸ் பண்றதில்லை?"

"நான் இப்படியிருந்தா உங்களுக்குப் பிடிக்குமா?"


"மனைவி அழகாயிருந்தா பிடிக்காம போகுமாயென்ன? இப்படி வந்து உட்காரு சாந்தி நான் உன் கூட பேசணும். சில காலமாகவே எனக்குள் ஒரு கேள்வி எழுந்திருக்கு. நான் உனக்கு நல்ல கணவனா நடந்துக்கலையோன்னு?"

"யார் சொன்னது நீங்க எனக்கு நல்ல கணவர்தான்"

"இல்லே சாந்தி அன்னைக்கு நீ கதிர்கிட்ட நம்ம வீட்டுக்கு உடைஞ்ச ஒரு இதயம் போதும்னு சொன்னே, அப்பவே என் மனசுக்கு ரொம்ப கஷ்டமாப் போச்சு. நான் உன்னை பூ மாதிரி தாங்கணும்னு ஆசைப்பட்டேன். ம்... ஒரு நல்ல கணவன் தன் மனைவிக்கு நடக்கும் மான, அவமானங்களில் பங்கெடுப்பான். ஆனால் அம்மா உன்னை எத்தனையோ திட்டியிருக்காங்க. நான் எதிலும்...?"

"உங்க அன்பு எனக்கு புரியும். இப்போ பழைய பேச்செல்லாம் எதுக்குங்க?"

"இனிமேலாவது உன்னை நல்லா புரிஞ்சுகிட்டு புருஷனாயிருக்கணுமின்னு ஆசைப்படறேன்"



சின்ன கழுதையை ஏன் பெரிய கழுதை கண்டிக்குது

வரவர சின்ன கழுதை மனித மாமியாராகிகிட்டு வருதாம்.

-பாடலி என். சுப்பிரமணியன், திருப்பாதிரிப்புலியூர்.

''அக்கா டிபன் எடுத்து வைச்சிருக்கேன் சாப்பிடலாமா?''

ஜோதியின் குரல் கேட்கவும், இருவரும் வெளியே வந்தனர். அவர்களுக்கு முன்னரே அங்கு கதிரவன் வந்தமர்ந்திருந்தான். ''நீங்க உக்காருங்க, அத்தான் நான் பரிமாறுகிறேன்''

ஜோதி பரிமாற எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்க, கதிரவன் நிமிர்ந்தான். அண்ணா, வீடு, ஆபீஸ்ன்னு ஒரே மிஷின் லைப்பாவே இருக்குவில்லை, ரொம்ப நாளைக்குப் பிறகு நாம எல்லாரும் ஒண்ணாயிருக்கும் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. காரில் ஈஸ்ட் கோஸ்ட் சாலையில் பிஷர்மேன் கேவ் போவோமா? ஒரு மாறுதலா இருக்கும்.

''நல்ல யோசனைங்க இன்னைக்கு பௌர்ணமி வேற போகலாம் அக்கா வாங்க''. ஜோதி அழைக்கவும் சாந்தினி கணவனைப் பார்க்க அவனும் தலையசைக்க அரைமணியில் கிளம்பினார்கள்.

வானில் பௌர்ணமி நிலா சூரியன் விட்டுப் போன மிச்சமாய் ஒளி. அலைகள் தகதகவென ஜொலித்தது. அந்த ரிசார்ட்டில் பொன்னிற மணலில் மிச்சமிருந்த இருட்டையும் விளக்குகள் ஓட ஓட விரட்டின.

தங்கள் காட்டேஜ் முன் அமர்ந்து சிற்றுண்டி அருந்தினார்கள்.

குளிர்ந்த காற்று முகத்தில் மோத, அலைகடலின் அழகை ரசித்தார்கள் அவர்கள்.

இந்த இடம் எனக்க ரொம்ப பிடிச்சிருக்கு சாந்தி! மனசு இலேசான மாதிரியிருக்கு''

''நிஜம்தான் அத்தான்! வாழ்க்கையிலே எத்தனையோ காரணங்களால் நாம சின்னச் சின்ன சந்தோஷங்களைப் புறக்கணிச்சிடறோம். முதல்ல அது நமக்குத் தெரியறதில்லை. ஆனா ஒரு காலகட்டத்திலே அதை உணரும் போது தான் நாம இழந்ததோட மதிப்பு புரியும். நினைச்சாலும் அப்போ அதை அனுபவிக்க முடியாது''

''நீ சொல்றது உண்மைதான் ஜோதி. நானே உன்கிட்டே இதைப் பற்றி பேசணுமின்னு நினைப்பேன். ஆனா அதற்கு சந்தர்ப்பம் அமையலை, அம்மா முக்கியம்தான் அண்ணா, அதுக்காக அண்ணியை ஒதுக்குவது எந்த விதத்தில் நியாயம்''


''கதிர்! புகுந்த வீட்டுலே ஒரு பெண்ணின் வாழ்வு சரியா அமையலைன்னா, அதை நிவர்த்தி செய்ய முயல்கிறார்கள். அதே நேரம் ஆண்களைப் பற்றி யார் நினைக்கிறார்கள், தன் மகனுக்கு திருமணமான மறுநிமிடமே அவனை பெத்தவங்க தன் பிள்ளையாய் நினைப்பதில்லை, இன்னொருத்தியின் கணவனாகத்தான் நினைக்கிறாங்க''

''அந்த எண்ணம் இனம்புரியா வெறுப்பை உண்டாக்குது. வண்டி பாதையை விட்டு விலகினா ஆபத்துதானே! அதுபோலதான் ஆண் நிலைமையும்''

''உயிர் கொடுத்து வளர்த்த தாய்க்கு மதிப்பு தருவதா, இல்லை உடல் பொருள் எல்லாம் தந்த மனைவிக்கு ஆதரவு தருவதா என்ற குழப்பத்தில் மௌனம் தான் சிறந்த ஆறுதல்''

''ஆனா அக்காவோட நிலைமை ரொம்ப மோசமில்லையா? பாவம் அத்தைகிட்டே அத்தனை பேச்சு வாங்கினாலும் யாருக்கும் எந்தக் குறையும் வைக்கலையே?!''





''உண்மைதான் சாந்திக்கு அசாத்திய பொறுமையுண்டு. என் நிலை இருதலைக் கொள்ளி எறும்பெனத் தவிப்பதை அவள் அறிந்திருப்பாள். இதுவரை என்னைக் கடிந்து ஒரு வார்த்தை கூட பேசியது இல்லை''

''இருந்தாலும், இது ரொம்ப அதிகம்தான் அண்ணா''

''சரி அத்தை இருக்கும் போது தான் நீங்க ஆதரவா பேசலை, அவங்க இல்லாத நேரமாவது அக்காவிடம் பேசலாமே''

''எங்கேம்மா? சாந்தியே தனக்குள் வட்டம் அமைத்து ஒதுங்கி விட்டாள். திருமணமான புதிதில் என் வருகைக்காய் ஆவலுடன் காத்திருந்தவள் பின்னர், என் குரல் கேட்டாலே தனியே ஒதுங்க ஆரம்பித்தாள்''

சரி ஒரு முதுகெலும்பில்லாத ஆண்மகனை யார்தான் நேசிப்பார்கள்'' அவன் குரல் இலேசாய் பிசிறியது.

சாந்தினி ஆறுதலாய் அவன் தோளில் கைவைக்க, கேசவன் உடனே மடிந்து அவள் மடியில் படுத்துவிட்டான். சுற்றமும் மறந்த, அவர்கள் இருவருக்கும் தனிமை தேவை என்பதையுணர்ந்த கதிரவனும் ஜோதியும் காட்டேஜின் மறுபக்கம் சென்றார்கள்.

''கடல் எத்தனை அழகு இல்லே ஜோதி''

''ம்...''

''மனசிலே ஆயிரம் கவலைகளைப் புதைத்துக் கொண்டிருந்தாலும் சிறாமல் இருக்கும். உன்னைப்போல இதுவும் இன்று சீற்றம் தணிந்துதான் இருக்கிறது''

''ஏன் அப்படி சொல்றீங்க கதிர்''

''இந்தப் புரிதலும், அன்பும் நமக்கு எப்போ கிடைக்கும் ஜோதி இன்றைக்கு கிடைத்த சந்தர்ப்பம் மீண்டும் அமையுமோ என்னவோ? அதனாலே என் மனசிலே உள்ள எல்லாத்தையும் இப்பவே சொல்லிடறேன். உன்னை முதன் முதலா பார்த்தப்பவே நீ என் மனசிலே நுழைஞ்சிட்டே ஜோதி, உனக்கு கல்யாணம் என்றதும் நான் எப்படி உடைஞ்சு போனேன் தெரியுமா? ஆனா கடவுள் உன்னை என்கிட்டே சேர்த்திட்டார்''

''நான் செய்தது என்ன மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமா? உன்னை என் உயிருக்கும் மேலாக நான் நேசிக்கிறேன். அதை நீ எப்போது புரிந்து கொள்வாய் ஜோதி?'' அவளின் கையைப் பற்றியபடி கேட்ட கதிரவனின் முகத்தைக் கண்டாள் கண்கள் கலங்கியிருந்தது போல் பரபரத்தன.

எத்தனை கம்பீரமான ஆண்மகன் அடிமை போல் மண்டியிட்டு என் அன்பிற்கு ஏங்குகிறானே என்று மனதில் மெல்லியதாய் கர்வத்தோடு வெட்கமும் பிறந்தது. உணர்வுகளில் அவள் உள்ளமும் கொந்தளித்துக் கொண்டு தானிருந்தது.

கணவனின் பிடியில் இருந்து கைகளை மெல்ல விலக்கிக் கொண்டவள் அவன் தலையை தன் கையால் வருடிக் கொடுத்தபடி அவன் முகத்தை தன் மார்பில் அணைத்துக் கொண்டாள்.

''என் கதிர்! உங்களைப் புரியாதவளா நான்? நான் முழுக்க, முழுக்க உங்களுடையவள்!''



அந்த உரிமையை நீயாகத்தான் தரணும் ஜோதி!

''கதிர் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? நமக்குள் இடைவெளி இருக்கிறது உண்மைதான். ஆனால் பிரிவு இல்லை! ஜோதியும் கதிரும் வேறு வேறா? சீக்கிரமே நாம மாறணும்!''

அவன் மறுபேச்சில்லாமல் கட்டிலில் படுத்தான். மூடிய கண்களுக்கு வெளியே ஜோதி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். உறக்கம் தொலைந்தது.

அந்த ரிசார்ட் காட்டேஜில் ஒரு ஜோடி நீண்ட பிரிவுக்குப்பிறகு தாபம் தீர்த்து ஈருடல் ஓருயிர் ஆகிக் கொண்டிருந்தனர். அதே போல் ஜோதியும், கதிரும் பெருமூச்சுகளுடன் இரவை கழித்தனர்.

## 16

சார் உங்களைப் பார்க்க கதிரவன்னு ஒருத்தர் வந்திருக்கார்''

பியூனின் குரலுக்கு செவி சாய்த்து பார்த்துக்கொண்டிருந்த பைலை மூடி வைத்த ராகவன் ரிசப்ஷனுக்கு விரைந்தார்.

சோபாவில் அமர்ந்திருந்த கதிரவன் அவரைக் கண்டதும் எழுந்து நின்று கரம் கூப்பினான் ''வணக்கம்''

''என்ன விஷயம்?''

நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். இங்கே பேசலாமா! இல்லை வெளியே போகலாமா?''

''பேசறதுக்கு என்னப்பா இருக்கு? அதான் எல்லாத்தையும் மொத்தமா அன்னைக்கே பேசிட்டியே?''

''உங்க கோபம் இன்னும் தீரலைன்னு தெரியுது. அன்றைக்கு இருந்த நிலைமை அப்படி. நான் நடந்ததை சொல்லிடறேன். ஜோதி சொன்னது அத்தனையும் உண்மை. அவ என்னை நேசிக்கிறேன்னு இதுவரையில் என்னிடம் சொல்லலை. முதற்பார்வையிலேயே நான் அவளை விரும்பினேன்''

''நான் மனசார நேசித்தவளை அத்தனை பேர் மத்தியில் அவன் அசிங்கப்படுத்தியது எனக்குப் பிடிக்கலை''



பொது இடங்களில் சிறு நீர் கழிக்காதே போலீஸ் வந்து பிடிச்சு கிட்டு போயிடும்.

வீணாகத்தானே போகிறது. புடிச்சுகிட்டுத்தான் போகட்டுமே...

நமக்கு என்ன நஷ்டம்!

-பாடலி என். சுப்பிரமணியன், திருப்பாதிரிப்புலியூர்.

''அவள் கண்ணீர் என்னை கஷ்டப்படுத்தியது. அதனால தான் நான் அப்படி சொன்னேன். ஜோதி மேல எந்தத் தவறும் இல்லை. இனிமேலும் அவளை ஒதுக்காதீங்க ஸார். இன்னிக்கு வரை அவள் உங்கள் அன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாள். அதனால் என்னிடமிருந்தும் விலகியே இருக்கிறாள். உங்கள் அன்பு அவளுக்கு கிடைத்தால் தான் இயல்பான நிலைக்கு அவள் வருவாள்.

தவறு என்னுடையது தான். என்ன கோபம் இருந்தாலும் என்கிட்டே காட்டுங்க. அவளை வெறுக்க வேண்டாம். நான் வர்றேன். அவன் பாடம் ஒப்பிப்பது போல கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட, ராகவன் யோசித்தபடியே வெகுநேரம் நின்றிருந்தார்.

சிறிய சூட்கேஸ் ஒன்றில் சில உடைகளைத் திணித்துக் கொண்டிருந்தான் கதிரவன்.

திடுமென நினைவு வந்தவனாய் நடேசனுக்கு தொடர்பு கொண்டான். ''நடேசன் நான் ஆஸ்திரேலியன் கம்பெனி விஷயமா மும்பை போறேன். திரும்பி வர்ற வரையில் கேசவனை பார்த்துக்க சொல்லுங்க''

''எஸ் ஸார்''

''பெட்டியோடு வாசல் வரை வந்த கணவனிடம் எங்கே கிளம்பிட்டீங்க கதிர்''

''ஆபீஸ் விஷயமாக மும்பை போறேன். நீ வீட்லே இல்லை. சரி அப்புறம் போன் பண்ணலாம்னு?''

கோவிலுக்கு போயிருந்தேன். பிரசாதம் வைக்கவா?''

''ம்... அவன் அகன்ற நெற்றியில் மெல்லிய கீற்றாய் திருநீறைப் பூசினாள். எப்போ வருவீங்க?''

''நாளை மறுநாள்....!''சிரித்தபடியே கிளம்பினான். ஜோதிக்கு வீடே வெறிச்சோடி போனது போலிருந்தது.

கணவனின் பிரிவு தாக்கும் அளவிற்கு நெருக்கமாய் வாழவில்லை தான். இருப்பினும், திருமணமான நாளில் இருந்து அவள் கூடவே இருந்தான் கதிரவன். இப்போது அத்தனை பெரிய அறையில் இவள் மட்டும் தனியாய் மனதை ஏதோ பிசைந்தது.

''நான் வேணுமின்னா துணைக்கு இருக்கட்டுமா,'' என்ற சாந்தினியையும் நீங்களே இப்போ தான் அத்தானோட நிம்மதியா இருக்கிங்க. நீங்க போங்க என்று அவளையும் அனுப்பி விட்டாள்.

இரவின் தனிமை வெகுவாய் வாட்டியது. கதிரவன் தலையணையை எடுத்து இறுக்க அணைத்துக் கொண்டாள்.

மெரூன் கலர் கேட்டைத் திறந்து கதவின் வெளிப்புறம் நின்று! ஜோதி!'' என்ற தயக்கத்துடன் அழைத்தார் ராகவன்.

வெளியே வந்த சாந்தினி புருவம் உயர்த்தி ''நீங்க?'' என்றாள்.

''இது ஜோதியோட வீடு தானேம்மா. நான் அவளுடைய அப்பா.''

''வாங்கப்பா, உள்ளே வாங்க. முகம் மலர வரவேற்ற சாந்தினி அவரை அமர வைத்து பின், நான் போய் ஜோதியை வரச் சொல்றேன்.'' என்று விறுவிறுவென்று மாடிப்படியேறினாள். அடுத்த ஐந்து நிமிடம் முடிவதற்குள் ஜோதியுடன் வந்து நின்றாள்.



உணர்வுகள் நிரம்பிய இடத்தில் பேச்சிற்கு இடமிராது. சில விநாடிகள் ஒருவரையொருவர் ஆழ்ந்து பார்த்த பின், அப்பா என்ற அலறலுடன் ராகவனின் தோளில் தஞ்சம் புகுந்து விம்மினாள்.

மகளை ஆசுவாசப்படுத்திய தந்தையின் கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்தது.

அந்த உணர்வுப் போராட்டத்தை சாந்தினி தான் முடித்தாள். ''முதல்ல காபி சாப்பிடுங்க அப்பா.''

''அப்பா என்னை மன்னிச்சிடுங்க,''

''விடும்மா... நீ எப்படியிருக்கே?''

வாஞ்சையுடன் மகளைத் தலை வருடினார்.

''ஜோதிக்கு உங்க மேல அன்பும், மதிப்பும் அதிகம்பா. எங்க கதிரும் நல்ல பையன் தான். ஏதோ ஆசைப்பட்ட பொண்ணையே கல்யாணம் செய்துக்கணுமின்னு எத்தனையோ... தப்பு பண்ணிட்டான். அதுக்காக நான் உங்ககிட்டே மன்னிப்பு கேட்டுக்கிறேன்.''

''பரவாயில்லைம்மா ஜோதி மேல எனக்கு கோபமில்லை. என் மகள் என்கிட்டே எதையும் மறைக்க மாட்டாங்கிற நம்பிக்கை. அது நொறுங்சப்போ தான் ரொம்பவே தவிச்சுப் போயிட்டேன்மா. அவளுக்கு எல்லா சுதந்திரமும் தந்து தான் வைத்திருந்தேன்.

கல்யாணத்துக்கு ஒரு விநாடி முன் தான் இவரைத்தான் காதலிக்கிறேன்னு சொல்லியிருந்தா கூட நான் சம்மதிச்சிருப்பேன்.''

''ஆனா யாரோ ஒரு மூணாவது மனுஷன், அவன் என் பொண்ணோட அந்தரங்கத்தைப் பற்றி சொல்றான். என்னிடம் இருந்து ஒரு விஷயத்தை மறைச்சதாலே அவ மேல எனக்கு வருத்தம் இருந்தது.''

''சாரிப்பா, இதிலே நான் எந்தத் தப்பும் செய்யலை.''

''இல்லேம்மா! மாப்பிள்ளை என்னைச் சந்திச்சு எல்லா விவரமும் சொன்னார். ஜோதிம்மா! கல்யாணத்திற்கு பின்னாடி ஒரு ஆண் தன் மனைவி மேல் யாராவது பழி சொன்னா கோபப்படுவான்.

ஆனா உன்னை நேசித்த போது மகேஷ் உன் மேல் சொன்ன பழியைத் தாங்க முடியாம கதிரவன் கோபப்பட்டு இருக்கிறார். அப்படீன்னா அவர் உன் மேல எத்தனை அன்பு கொண்டு இருப்பார். அதுவே எனக்கு ரொம்ப பெருமையா இருக்கும்மா.

''கதிரவன் மாதிரி ஒரு மாப்பிள்ளையை என்னால கூட தேர்ந்தெடுக்க முடியாது. அவர் மனம் கோணாம புரிஞ்சு நடந்துக்கோம்மா. உன் சந்தோஷம் தான் எனக்கு நிம்மதி.''

''சரிப்பா! அம்மாவை கூட்டி வரலையாப்பா.''

''நான் இங்கே வந்ததே அவளுக்குத் தெரியாதும்மா. இனி மேல் தான் சொல்லணும். ஒரு நாள் நீயும் அவரும் வீட்டுக்கு வாங்க, செய்முறையெல்லாம் செய்து மனசார வாழ்த்தியனுப்புகிறேன்.

என்னம்மா ஒண்ணும் பேச மாட்டேங்கிறே. அப்பா மேல இன்னும் கோபம் போகலையா?''

''அப்படியெல்லாம் இல்லேப்பா!'' தந்தையின் வாயை தன் விரல்களால் பொத்தினாள். ''நீங்கதாம்பா என்னை மன்னிக்கணும்.''

''சரி விடு ஜோதி! பழசையெல்லாம் பேசி என்னாகப் போகுது. சாப்பாடு ரெடியா இருக்கு. அப்பாவை சாப்பிட வரச்சொல்லு.'' என்றாள் சாந்தினி.

''இல்லேம்மா எனக்கு மனசு நிறைஞ்சு இருக்கு. நீயும் ஜோதியோட வீட்டுக்கு வாம்மா. புது இடத்துல அனுசரிச்சு நடக்கிற மாதிரி ஜோதியை நீதான் பார்த்துக்கணும்.''

''கண்டிப்பா அப்பா! ஜோதி எனக்கு கூடப் பிறந்த தங்கை மாதிரி.''

''நல்லதும்மா; அப்போ நான் கிளம்பறேன் வரேன்மா.

'' அவர் விடை பெற்று கிளம்பவும் ஜோதியின் முகத்தில் பூத்த புன்னகைப்பூக்களை ரசித்தாள் சாந்தினி.

''என்ன ஜோதி? உனக்குன்னு இருந்த ஒரே கவலையும் தீர்ந்திடுச்சி. இனியாவது நிம்மதியா மகிழ்ச்சியுடன் கதிருடன் குடும்பம் நடத்த எந்தத் தடையும் இல்லையே.''

''அக்கா...''

''எனக்கு எல்லாம் தெரியும்டி ஜோதி! கல்யாணமான புதிதில் கணவன்- மனைவி உறவின் சுகங்களை நானும் உணர்ந்தவள் தான். இழந்து போன என் மகிழ்ச்சியை நீ மீட்டுத் தந்தது போல உங்க வாழ்விலும் ஒளி வர வேண்டாமா?''

''உனக்குத் தெரியாதது இல்லை.

கணவன்- மனைவிக்குள்ளே கனை போல நுழையும் சிறு பிரிவு கூட கவனிக்காம விட்டுட்டா ஆலமரமா மாறி பெரிய கல் சுவரையே பிளக்கிற அளவும் வாழ்க்கையை பிளவுபடுத்தி வச்சிடும்.

இதை அனுபவ பூர்வமா நான் உணர்ந்திருக்கேன். நீ நினைச்ச மாதிரியே உன் அப்பாவும், உன்னைப் புரிஞ்சிகிட்டார்.

உன் குடும்ப உறவும் உனக்கு கிடைச்சிருச்சு! இனியும் கதிரவனை பட்டினி போடாதே, தாங்க மாட்டான்.

''சாந்தினி சொல்ல ஜோதி வெட்கத்தோடு தலை கவிழ்ந்தாள்.

பெண்கள் இருவரும் ஒன்றாக பூஜையறையினுள் சென்று இறைவனை வணங்கினார்கள்.

இத்தனை நாட்களாக இல்லாமல் கதிரவனின் நினைவு இன்று ஜோதியை ரொம்பவும் வாட்டி வதைத்தது.

முதன் முதலில் அவன் பேசிய பேச்சு, அந்தக் கண்களின் காதல் பார்வை, அன்று கடற்கரையில் அவள் கைகளைப் பற்றியபடி பேசியது என கணவனைப் பற்றியே நினைவுகள் மலர்ந்து கொண்டிருந்தன மனதில்!

சங்க காலப் பெண்கள் தலைவனை பிரிந்து வாழும் சமயங்களில், என் விரல்களின் மோதிரம் ஒட்டியாணமாய் மாறி விட்டது தடி என்று தோழியிடம் ஏக்கப் பெருமூச்சு விடுவார்களாம்.

அதைப் படித்த போது ஜோதி சிரித்திருக்கிறாள். ஆனால் எதார்த்தத்தை மீறிய உணர்வுகளும் இருக்கின்றன என்ற நினைப்போடு கதிரவனின் புகைப்படத்தை நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

விடியும் பகல் வேதனையைத் தரப் போகிறது என்றறியாமல்



இதழோரம் வெட்கப் புன்னகையைப் படர விட்டபடி உறங்கும் ஜோதியை விதி பார்த்து கை கொட்டி சிரித்தது.

## 17

அதிகாலையிலேயே சுந்தரமும், சகுந்தலாவும் கொல்கத்தாவில் இருந்து வந்து விட்டிருந்தனர். அன்றைய மதியத்திற்கு பிறகு வீடே பரபரத்தது. ''என்னக்கா சமையல் வாசனை ஆளையே தூக்குது. வீட்டுக்கு யாரும் விருந்தாளிங்க வர்றாங்களா?''

''இன்னைக்கு பார்கவி சித்தியும் அவங்க பொண்ணு கனிதாவும் நம்ம வீட்டுக்கு சாப்பிட வர்றாங்களாம்.''

''யார் அவங்க?''

''மாமாவுடைய தங்கை, அதாவது ஒண்ணு விட்ட தங்கை. பெரிய பணக்கார பேமிலி. நீ அவங்களை இன்னும் பார்த்திருக்க நியாயமில்லை!''

''ஆமாக்கா!''

''கனிதாவின் அப்பா தங்கமான மனுஷர். ஆனா பெண்களிருவரும் ரொம்ப அல்டாப் பேர் வழிங்க! எதற்கெடுத்தாலும் ராயல் பேமிலி மாதிரித்தான் பேசுவாங்க. கனிதாவுடன் நான் அதிகம் பேசியதில்லை. நீ எதுவும் துடுக்கா பேசிடாதே கூடுமானவரையில் பொறுமையாகவே இரு.''

''நானா எந்த வம்பிற்கும் போக மாட்டேன். ஆனா தானா வந்தா விட மாட்டேன். அவங்க தலையெழுத்து!'' இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

''இன்னொரு முக்கியமான விஷயம் ஜோதி. கனிதாவைத்தான் கதிருக்கு கல்யாணம் பண்ணனும்னு அத்தை விரும்பி இருந்தாங்க!''

அதே நேரம் ஹாலில் போன் அடித்தது. ''நான் கதிர்... இன்னும் நான்கு மணி நேரத்தில் சென்னை வந்துடுவேன். ஆனா ஆபீஸ் போயிட்டு வீட்டுக்கு வரத் தாமதமாகும்.'' சொல்லி விட்டு போனை வைத்து விட, ஜோதிக்கு மனசுக்குள் குறுகுறுத்தது.

மேலே அறைக்குள் ஓடினாள், ஓரளவிற்கு அறையைச் சுத்தப்படுத்தினாள். மெத்தை விரிப்புகளை சீராக்கி விட்டு, குளித்தாள்.



நம்ம தலைவருக்கு குழந்தை மனசு

அதற்காக மேடையிலே பீடிங் பாட்டிலில்தான் தண்ணீர் குடிக்க வேண்டுமா?

-உமரி.பொ.கணேசன், மும்பை

பின் கதிரவன் அவளிற்கென முதன் முதலில் தந்த சேலையை எடுத்தாள்.

வெளிர் பிங்க் நிறத்தில் கண்ணை உறுத்தாத தங்க நிறத்தில் சரிகை வேலைப்பாடுகள் அடங்கிய புடவையை ஆசையாய் ஒரு முறை வருடி விட்டு, கட்டிக் கொண்டாள். 2-வது அலமாரியில் இருந்த வெண் முத்துக்கள் அடங்கிய மாலையையும், அடுக்கடுக்காய் தொங்கிய கம்மலையும் அணிந்தாள்.

அந்த டைரியின் பக்கத்தில் எழுதினாள். ''வருடிச் செல்லும் தென்றல் கூட சுழற்றும் சூறாவளியாய் மாறி விடுகிறது. நீ அருகில் இல்லாத போது!''

பால்கனியின் சிட் அவுட் முன்பு நின்றாள்.'' எத்தனை இரவுகளை உறக்கம் இல்லாமல் கழித்திருக்கிறீர்கள் கதிரவன். இனி அந்தக் கவலை இல்லை. என் மனம் முழுக்க உங்களை யாரும் அறியாமல் சுமந்து இருக்கிறேன். அதை இன்று உங்களுக்கு தெரியப்படுத்த போகிறேன்!'' நினைப்பே தித்தித்தது.

பின்னால் ஏதோ அரவம் கேட்க, திரும்பிப் பார்த்தாள். தன் அறையில் மார்டன் உடையில் மேஜையில் எதையோ பார்த்துக் கொண்டிருக்கும் அந்த இளம் பெண்ணைக் கண்டாள்.

''யார் நீங்க?'' கேள்வி கேட்டு அவளும் திரும்பினாள். உதடுகளை சுழித்த வண்ணம் கோணலாய் புன்னகைத்தாள். 'ஐ' ம் சுனிதா, நீ தான் ஜோதியா எனக்கு சேர வேண்டிய கதிரவனை தட்டிப் பறித்தது நீதானா?' குரலில் எகத்தாளம்.

ஜோதி விக்கித்தாள். ஒரு பெரிய எதிர்ப்பை மறைமுகமாகத்தான் சமாளிக்க வேண்டியிருக்கும் என்று நினைத்தாள். ஆனால் அது இத்தனை நேரடியாக இருக்கும் என்று நினைக்கவேயில்லை.

''அடுத்தவர்கள் அறைக்குள் வருவதற்கு முன் கதவைத்தட்டி அனுமதி கேட்க வேண்டுமென்று அடிப்படை நாகரீகம் கூடவா உனக்கு இல்லை! என்று இவளும் சற்று சூடாகவே பதிலைத் தந்தாள்.

''அனுமதியா? இது என் அத்தை வீடு, அதுவும் என் கதிரின் அறைக்கு வர எனக்கு யார் அனுமதி தர வேண்டும்?''

''முதலில் அவரை உன் கதிரவன் என்று கூறுவதை நிறுத்து. அவர் என் கணவர்.''

''இதோ பார். இந்த பொண்டாட்டி பதவி ரொம்ப நாளைக்கு நீடிக்காது ஜோதி.



அவர் பிரயாசைப்பட்டு எழுதி வெளியிட்ட நூல்... ஒண்ணு கூட விக்கலியாமே...!''

ஆமாம்.... நொந்து நூலாகிப்போனார்.

– 'இனாம்' ச.ஆ.சேசவன்,
தூத்துக்குடி.



நானும், கதிரும் சின்ன வயதில் இருந்து பழகியிருக்கோம், ஏதோ கொஞ்ச நாள் அவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டேன்.

அதுக்குள்ளே அவரை எப்படி போ நீ மடக்கிட்டே, இப்போதான் நான் வந்திட்டேனே?''

''அதனால...''

''பேசாம கதிரவனை என்கிட்டே கொடுத்திட்டு விலகிடு. அது தான் உனக்கும் நல்லது.''

''இல்லேன்னா?''

''நானா கதிரை எடுத்துக்க வேண்டியிருக்கும்.''

மரியாதையா இந்த ரூமை விட்டு வெளியே போயிடு. இன்னும் கொஞ்ச நேரம் என் கண் முன்னாடி நின்னாலும் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது?''

''இதுக்கு நீ ரொம்பவும் வருத்தப்படத்தான் போறே. குதி கால் செருப்பு'' ஓசையெழுப்ப சுனிதா வெளியேறினாள்.

''ச்சே... இது வேற தொல்லையா? இப்போது தான் அவள் மனம் கதிரவனை முழுமையாய் நாடியுள்ளது. இந்நேரம் இது வேறா? கூந்தலை தளர்வாய் பின்னலிட்டு மதியம் வாங்கி வைத்திருந்த மல்லிகைச் சரத்தை சூடிக் கொண்டாள்.

கதிரவன் வந்தவுடன் அப்பா வந்து பேசிய விஷயத்தை சொல்லி, தன் மன மாற்றத்தையும் கூறி அவனிடம் தன்னை ஒப்படைத்து விட வேண்டும். பிரிவின் கொடுமையை இதுவரையில் போதும் போதென்று இருவரும் அனுபவித்தாகி விட்டது.

என்னென்னவோ சிந்தனைகளோடு படியிறங்கியவள், ஹாலில், கதிரவனோடு மிக நெருக்கமாய் சுனிதா அமர்ந்து பேசிக் கொண்டு இருப்பதும், அதை கதிரவனும் புன்னகையுடன் ரசிப்பதையும் கண்டு உடலெங்கும் அனலாய் சுட்டது.

சுனிதாவோ இவள் வருகையை அறிந்து கொண்டு, கதிரவனின் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு சாய்ந்து கொள்ள, ஜோதி வெறிப்பிடித்தாற் போல் இறங்கியவள் இடியென தன் கையை சுனிதாவின் கன்னத்தில் இறக்கினாள்.

## 18

நடந்து விட்ட நிகழ்வு எல்லாரையுமே வாயடைக்க செய்தது. பருத்த சரீரத்துடன் இருக்கும் பார்கவி தான் முதலில் வாய் திறந்தாள், ''என்ன சகுந்தலா! என் பொண்ணை யாரோ ஒருத்தி கை நீட்டி அடிக்கிறா. நீயும் பார்த்துகிட்டு இருக்கியே?''

''யாரோ ஒருத்தியில்லை. நான் இந்த வீட்டு மருமக?''

''அந்த உரிமையை உனக்கு யாருடி கொடுத்தது? என் மகன் தாலி கட்டிட்டா மட்டும் நீ இந்த வீட்டு மருமக ஆக முடியுமா?''

''அம்மா.... என்ன பேசுறீங்க? அவ என் மனைவி.''

''நல்லாயிருக்குடா. வந்து ஒரு மாசம் கூட ஆகலை, அதுக்குள்ளே பொண்டாட்டி முந்தானையைப் பிடிச்சிகிட்டு பெத்தவளையே எதிர்த்து

பேசற அளவுக்கு மாத்திட்டா இல்லை.?''

''என்னை யாரும் மாத்தலை. எது சரி, தவறுன்னு யோசிக்கிற அளவுக்கு அறிவு எனக்கிருக்கு.''

''அப்போ எனக்கு அறிவில்லைங்கிற அப்படித்தானே? உன்னை என் பிள்ளைன்னு நினைச்சேன்டா.''

''அய்யோ அம்மா இப்ப மட்டுமில்லே, எப்பவுமே நான் உன் பிள்ளைதான்.''

என் பிள்ளை தானே. சரி, அவ செய்த தப்புக்கு கனிதாகிட்டே மன்னிப்பு கேட்கச் சொல்லு.''

''சகுந்தலா அப்படி கூறியதும், கனிதா, ஜோதியை நோக்கி இளக்காரமாய்ப் பார்த்தாள். கதிரவன் செய்வதறியாது திகைத்தான். சில விநாடி தயக்கத்திற்குப்பின் ''ஜோதி! கனிதா கிட்டே மன்னிப்பு கேளு! என்றான்.

''ஜோதிக்கும், சாந்தினிக்கும் தன் காதுகளையே நம்ப இயலவில்லை.''

''என்ன சொல்றீங்க கதிரவன்.''

''புரியலையா? இல்லை காது கேட்கலையா? என்கிட்டே மன்னிப்பு கேட்க சொல்றாரு?'' உதட்டை சுழித்தபடி கனிதா கூறவும்,

''கதிர் என்ன பேசறோமின்னு புரிஞ்சுகிட்டுத்தான் பேசறீங்களா? நானென்ன தப்பு செய்தேன் மன்னிப்பு கேட்க.''

''என் பொண்ணை நானே தொட்டதில்லை, நீ அடிச்சிட்டியே?'' கர்ஜித்தாள் பார்கவி.

''என் புருஷன் மேல உரசிட்டு உட்கார்ந்து இருந்தா, அதான் அடிச்சிட்டேன்.''

''ஏய் இப்பத்தான் கதிர் உன் புருஷன். ஆனா எனக்கு கதிர் மேல் முழு உரிமையிருக்கு.''

''இப்படியே பேசினா திரும்பவும் அடிப்பேன்.''

''ஜோதி பிளீஸ்...''

''ஸாரி கதிரவன். உங்களுக்கும், உங்களை சார்ந்தவங்களுக்கும் வேண்டுமானால் நான் பணிந்து போகலாம்.

ஆனால் முன் பின் தெரியாதவங்களுக்கு எல்லாம் பணிய வேண்டிய அவசியம் இல்லை.'' விறுவிறுவென்று சென்று விட்டாள் ஜோதி.



ஜனநெருக்கடி அதிகமாக உள்ள இடத்தில் எப்படி நீ கொள்ளையடிச்சே

தொழில் ரகசியத்தை கேட்கா தீங்க நீதிபதி அவர்களே...

–பாடலி என்.சுப்பிரமணியன்,
திருப்பாதிரிப்புலியூர்.



''நல்லாயிருக்கு கதிர்! கனிதா உன்னைப் பார்க்கணுமின்னு எத்தனை ஆசையா வந்தா தெரியுமா? வந்தவங்களுக்கு நல்லா மரியாதை செய்யுறேப்பா. நாங்க வர்றோம்.''

''என்ன பார்கவி இது? அவ சொன்னான்னு நீயேன் போகணும்?''

''நீ பேசாதே சகுந்தலா? உன் பேச்சை நம்பி இங்கே வந்தேன் பாரு. என்னைச் சொல்லணும்.

எங்களை என்ன ஒன்னுமில்லாதவங்கன்னு நினைச்சாளா உம் மருமக? ஏதோ உறவு விட்டுப் போகக் கூடாதேன்னு கொஞ்சம் இறங்கி வந்தா என்ன பேச்சு பேசிட்டா.

இப்போ சொல்றேன் கேட்டுக்கோ, இனிமே நானும் இந்த வீட்டு வாசப்படி வர மாட்டேன், நீயும் வந்திடாதே.''

மூச்சிரைக்க பேசி விட்டு மகளோடு இறங்கினாள் பார்கவி.

''ஏண்டா பொண்டாட்டியை அடக்கி வைக்கத் தெரியாத நீயெல்லாம் என்னடா மனுஷன்? ச்சே நீ, இத்தனை கோழையா மாறிப் போவேன்னு நான் நினைக்கலை.''

அம்மா....!''

''பேசாதேடா... பார்த்தியா பார்கவி எப்படி பேசிட்டுப் போறான்னு. இனிமே அவளை எந்த முகத்தை வைச்சிகிட்டுப் போய் பார்ப்பேன்.

''ஏம்மா.... பெத்த பிள்ளைங்களை விட உங்களுக்கு அந்த பார்கவி தான் பெரிசா போயிட்டாங்களா... ஏம்மா கொஞ்சம் யோசி. இந்த பார்கவி அன்னைக்கு காசு பணம் இல்லாம ஓட்டு வீட்டுலே வாழ்ந்தோமே அப்போ எங்கே போனாங்க?''

''என்ன கேசவா நீயும் என்னை எதிர்த்துப் பேசுறியா?''

''எதிர்த்துப் பேசலை சகுந்தலா. இன்னைக்குத்தான் அவன் உண்மையைப் பேசுறான்.

பார்கவி எனக்குத்தான் முதல்ல உறவு. ஆனா என்னை விட நீ தான் அவகிட்டே நெருக்கமாயிருந்தாய். உன் மனசு சங்கடப்படக் கூடாதுன்னு தான் அதை நானும் தடுக்கலை.

ஆனா அவ உன் கூட உண்மையாக பழகலைம்மா.'' சுந்தரமும் மென்மையாய் எடுத்துக் கூறினார்.

''அம்மா நீங்களே யோசிங்க, பார்கவி அத்தையோட பையன் கல்யாணத்திற்கு கூட நமக்கு அழைப்பு தரலை. ஏன்னா அப்போ வாழ்வின் அடிமட்டத்திலே நாம இருந்தோம்.''

''இப்போ ஓரளவிற்கு வசதியா இருப்பதால் தான் உன்கிட்டே அவங்க பேசவே செய்யுறாங்க. ஆனா எதுயிருந்தாலும், இல்லைன்னாலும் நாங்க யாரும் உன்னை விட்டுப் பிரிய மாட்டோம். அதைப் புரிஞ்சிக்கோம்மா.''

''எல்லோரும் சேர்ந்து என்னைத்தானே தப்பு சொல்றீங்க?''

''தப்பு சொல்லலைம்மா.

நிஜத்தை புரிய வைக்க முயற்சிக்கிறோம்.

இதோ இருக்கிறாளே என் மனைவி சாந்தினி.

நீ எத்தனை பேசினாலும் பொறுத்துகிட்டு இருக்காளே. அது தான் உண்மையான அன்பு.

ஆனா ஒரு சின்ன விஷயத்துக்குக் கூட காம்ப்ரமைஸ் பண்ணிக்காதவங்களை நினைச்சு நீ உருகுறது தான் எனக்கு கவலையா இருக்கு.'' மகன்கள் இருவரும் சென்று விட்டனர்.

சகுந்தலா அமைதியாய் இருந்தாள். சுந்தரம் மனைவியின் அருகில் வந்தவர், ''இங்க பாரும்மா, நமக்கு கடவுள் புண்ணியத்திலே நல்ல உறவுகள் கிடைக்க இருக்கு. அதை தக்க வைச்சிக்கிறது நம்ம கையிலே தான் இருக்கு.

நீ யோசி உனக்கே அது புரியும்.

'' அவரும் நகர்ந்து விட, சகுந்தலா மட்டும் தனித்து இருந்தாள்.

''என்ன கதிர் இது இப்பத்தான் ஜோதியின் அப்பா வந்து பேசியதினாலே அவ மனசிலே உன்னைப்பற்றி நல்ல அபிப்ராயம் இருந்தது. அதை நீயே கெடுத்திட்டியே! அடுத்தவங்க முன்னால அவளை விட்டுக் கொடுக்கலாமா?''

''இல்லேண்ணி. ஜோதிக்கும், அம்மாவிற்கும் எந்த பிணக்கும் வந்திடக் கூடாதுன்னு தான் நான் அப்படி பேசினேன்.''

''இப்போ அவ கோபமா இருக்காளே?''

''கதிர் யோசனையாய் தலையை பிடித்துக் கொண்டான். 'என்னடாயிது? இப்பவே தலையைப் பிடிச்சிகிட்டு உட்கார்ந்திட்டா எப்படி? இப்போ புரியுதா என்னோட நிலைமை.''

''சும்மாயிருங்க, நீங்க வேற அவனை குழப்பி விட்டுகிட்டு நீ போய் முதல்ல அவளை சமாதானப்படுத்து'' சாந்தினி கிளம்பவும்

கதிரவன் தன் அறைக்குத் திரும்பினான்.

## 19

**ஜோ**தி கட்டிலில் முதுகு காண்பித்து அமர்ந்திருந்தாள். கதவைத் தாளிட்டு விட்டு கதிரவன் அவளருகில் அமர்ந்தான். தன் ஒற்றை விரல் கொண்டு அவள் முகத்தை நிமிர்த்தினான். ''ஏய்? என்ன கோபமா?''

''கோபப்படாமல் கொஞ்சுவார்களோ, நீங்கள் செய்த காரியத்திற்கு!''

''நான் என்னம்மா செய்தேன்?''

''செய்யறதெல்லாம் செய்திட்டு இப்படி அப்பாவி மாதிரி மூஞ்சை வைச்சிக்க வேண்டியது என்று நெஞ்சிலே குத்தியவள் நான் உங்க பொண்டாட்டி தானே?''

அடக்கடவுளே ஒரு மாதத்திற்கு மேலான பிறகும் என்ன உனக்கு திடீர் சந்தேகம்.''

''அன்றைக்கு என் மனைவி யார் முன்பும் தலை குனிய கூடாதுன்னு வசனம் பேசிட்டு இன்னைக்கு அந்த கனிதாகிட்டே மன்னிப்பு கேட்கச் சொல்றீங்களே?''

''நீ செய்தது தவறில்லையா, ஜோதி அவ நம்ம வீட்டுக்கு விருந்தாளியாக வந்தவ. அவளைப் போய் அடிக்கலாமா?''

''விருந்தாளியாம் விருந்தாளி, என்னிடமே வந்து என் கதிரவனை விட்டுக் கொடு! இல்லேன்னா நானே எடுத்துக்கிடுவேன்னு ஜம்பமா சவால் விட்டு பேசுகிறாள். தோளோடு இணைந்து நின்று உரசி என்னை வெறுப்பேத்துறா! உங்களைத் தொட அவள் யார்?''

''நான் என்ன பலகாரமா? தொட்டால் கெட்டு விடுவேனாயென்ன?''

''நான் ஒரு தப்பு பண்ணிட்டேன். அவளை அடித்ததற்கு பதில் உங்களை நாலு போட்டு இருக்க வேண்டும்.''

''அய்யோ? உண்மையிலே கனிதா ரொம்ப பாவம். ஜோதி நீ அவளை அறைந்ததால் ஒரு காதே போயிருக்கும். யப்பா! என்ன அறை! என்ன சத்தம்! கையைக் கொடு. அவளின் உள்ளங்கையைத் தடவிப் பார்த்தபடி பூ மாதிரி இருக்கே, இதிலேயா அப்படி சப்தம் கேட்டது.''

''நம்பலைன்னா அறையட்டுமா?''

''வேண்டாம் தாயே. என்னை வீழ்த்த உன் விழியே போதும். கை வேறு எதற்கு''?

''உண்மையைச் சொல்லு. கனிதாவை என் அடிச்சே?''

''என் புருஷனைத் தொட யாருக்கும் உரிமையில்லை. இது எனக்கு மட்டும் தான் சொந்தம்.'' மெல்ல அவன் தோளில் சரிந்து கொண்டாள்.

கதிரவன் திகைத்தான். ''ஜோதி என் மேல் உள்ள கோபம் உனக்கு தீர்ந்து விட்டதா?''

''அப்பா வந்தார். அவர் என்னை முழுமையாய் புரிந்து கொண்டார். எனக்கு எத்தனை திருப்தியாய் இருக்கிறது.

''உன் தந்தைக்கு உன் மேல் தீராத பாசம் உண்டும்மா. நான் விவரம் கூறியதும் மகிழ்வோடு கண்களின் ஓரம் நீர் துளிர்த்தது. இங்கு வந்ததும் என்ன சொன்னார்?''

''மருமகனை நன்றாய் கவனிக்கச் சொன்னார்.''

''அப்போ இனியும் என்னை பட்டினி போட மாட்டே'' கதிரவன் ஜோதியை இறுக அணைத்து ஒரு முத்தம் பதித்தான்.

சிறு வெட்கத்துடன் விலகியவள் ''கனிதாவை அடித்த கோபத்தில் இருப்பீர்கள் என்று நினைத்தேன். மாறாக முத்தமிடுகிறீர்களே?''

''அவளை அடிக்கலாம் நம்ம வீட்டில் பிரச்சனை வர காரணமே அவர்கள் தான். அம்மாவின் மனதில் நஞ்சை கலந்ததும் அவர்கள் தான். நானே செய்திருக்கணும். நீயே செய்திட்டே!''

புன்னகையுடன் கணவனின் மார்பில் சாய்ந்தவள், ''கதிரவன் இனி இந்த உடல், உதடுகள், நெஞ்சம் எல்லாமே என் ஒருத்திக்குத்தான் சொந்தம் புரிகிறதா?'' காதோரம் கிசுகிசுப்பாய் கேட்க,

மனைவியை இறுக்கினான்.

''இந்த அணைப்பிற்காக நான் ரொம்பவும் ஏங்கிவிட்டேன் கதிர்'' என்றதும், மூச்சுக்கூட போக முடியாத அளவுக்கு அணைத்தான் கதிரவன்.

அடுத்தடுத்து வந்த நாட்களில் வீடு ஓரளவிற்கு அமைதியாகவே இருந்தது. முன்பை போல சகுந்தலா ஷாப்பிங், கிளப் என்றெல்லாம் போவதில்லை. தவிர்க்க முடியாத முக்கியமான இடங்களுக்கு மட்டும் சென்று வந்தாள்.

அதை விடவும் சாந்தினியை இப்போதெல்லாம் திட்டுவதே

இல்லை. பேசாமல் மவுனம் காத்தாலும், அவளுள் ஏதோ இறுக்கம் இருப்பதை மட்டும் உணர முடிந்தது.

சுந்தரத்தைத் தவிர வேறு யாரிடமும் பேசுவது கூட இல்லை. பால்கனியில் நின்று தோட்டத்தை வெறித்துக் கொண்டு நின்ற சகுந்தலாவைக் காண சகியாமல் ஜோதி அவளருகில் சென்றாள்.

ஒரு வேளை அன்றைய தினம் நடந்த நிகழ்வு அவளைக் காயப்படுத்தி இருக்குமோ? என்ற நினைப்பில், ''அத்தை! நான் எதுவும் தவறா பேசி இருந்தா என்னை மன்னிச்சிடுங்க.''

''உங்களை மதிக்காமலோ, இல்லை உங்க மனசை புண்படுத்தணுமின்னோ நான் அப்படி பேசலை, கதிரோடு இன்னொரு பெண்ணை நெருக்கமா பார்த்ததும், அதுமில்லாது சுனிதா அறைக்கே வந்து நான் கதிரவனை என்னுடையவர் ஆக்கிக் கொள்ளப் போறேன்னு திமிரா பேசினா... அதனால தான்...!''

பேசிவிட்டுப் பெரியவளின் முகம் பார்த்தாள். அப்போதும் தோட்டத்தின் புறம் இருந்து பார்வையைத் திருப்பவில்லை சகுந்தலா.

''உங்களை கம்பீரமா பார்த்தே பழகியதால நீங்க இப்படி சோர்ந்து போய் இருக்கிறது மனதுக்கு கஷ்டமாயிருக்கு. அத்தை! கோயில்ல பூஜைக்கு ஏற்பாடு பண்ணியிருக்கோம். நீங்களும் வந்தா நல்லாயிருக்கும்.''

''நான் வரலை நீங்க போயிட்டு வாங்க நான் தனிமையில் இருக்க விரும்புகிறேன்'' என்று மறுபடியும் பார்வையைத் திருப்பிக் கொள்ள, வேறு வழியின்றி ஜோதியும், சாந்தினியும் மட்டும் சென்று வந்தனர்.

## 20

நாட்கள் நகர்ந்தன. சகுந்தலாவின் நடவடிக்கையில் எந்த மாற்றமும் இல்லை. அவளின் அமைதி ஆழமாய் எதையோ யோசிப்பதை சொல்லியது.

மனைவியின் இந்த நிலை சுந்தரத்தை பிசைய, ஒரு நாள் மாலை திடுமென ''என்னங்க நாம கோயில் வரை போயிட்டு வரலாமா?'' என சகுந்தலாவே கேட்கவும், நல்லது நேரம் தானாகவே வந்து வாய்க்கிறது என்று பூஜை தட்டுடன் கிளம்பி விட்டார்.

கோவிலில் அதிக கூட்டமில்லை. சாமி பேரில் அர்ச்சனையை முடித்து விட்டு கடவுளை வணங்கிய பின் படித்துறையில் அமர்ந்தார்கள்.

''என்ன சகுந்தலா! இப்போயெல்லாம் எதையோ பறி கொடுத்த மாதிரி கவலையோடு இருக்கிறே?

என்னம்மா பிரச்சினை? என்கிட்டே சொல்லு. கணவரின் பரிவான பேச்சில் மனம் ஓரளவு சமாதானப்பட்டாலும் அமைதியாகவே இருந்தாள் சகுந்தலா.''

''நமக்கு நல்ல பிள்ளைகள் கிடைக்க இருக்காங்க. ஆனா நீதான் அவங்களைப் புரிஞ்சிக்க முயற்சி பண்ணலை.''

''நான் எப்பவுமே அவங்களை வெறுத்தது இல்லை.''

''உன் மனசு எனக்குப் புரியாதாம்மா. நல்லா யோசி நீ எத்தனை அன்போடு இருந்தே. இப்போ உன்னையும் வருத்திக்கிட்டு எல்லாரையும் கஷ்



டப்படுத்தறியே? கேசவனோட கல்யாணத்திற்கு பத்திரிகை வைக்க போனப்போ பார்கவி நம்மை உட்காரக்கூட சொல்லலை.''

''ஆனா நமக்கு வசதி வந்தப்போ அண்ணி அண்ணின்னு தாங்கினா பணத்திற்காக வரும் உறவுகள் கிட்டே பாசம் கிடைக்காது சகுந்தலா.''

''பொறுமையே உருவான சாந்தினியை நீ எத்தனை தரம் உதாசீனப்படுத்தியிருக்கே! ஆனா ஒருமுறையேனும் அவ உன்னை எடுத்தெறிஞ்சு பேசியிருக்காளா? குழந்தையில்லாததை காரணம் காட்டி நீ எத்தனை வேதனைப்படுத்தினே? அந்தக்குறையை போக்க, அவளை நல்ல டாக்டர் கிட்டே அழைச்சிட்டு போகணுமின்னு உனக்குத் தோணிச்சா?''

''ஆனா அந்தப்பொண்ணு ஜோதி, அதைச் செய்தா, பெரிய மனுஷியா உனக்கு இருக்க வேண்டிய பக்குவம் இப்போ அவங்களுக்கு இருக்கு. அமைதியா ஒரு மூணாவது மனுஷியா நம்ம குடும்பத்தைப் பாரு. எத்தனை சந்தோஷங்களை நீ தொலைச்சு இருக்கேன்னு உனக்குத் தெரியும்.''

சகுந்தலாவின் முகம் தீவிர யோசனையைக் காட்ட, அடுத்த வீட்டு லெட்சுமி இவர்களை நோக்கி வரவும் அத்தோடு பேச்சை நிறுத்திக் கொண்டார்கள்.

''என்ன சகுந்தலா எப்படி இருக்கே?''

''ம்...''

''உம் மக அகிலா உண்டாகியிருக்காளாமே! எப்படியிருக்கா?''

''உனக்கெப்படித் தெரியும்.'' யோசனையுடன் கேட்டாள் சகுந்தலா.

''உன் மருமக பொண்ணுங்க இரண்டு பேரும் பத்து நாளைக்கு முன்னாடி கோயிலுக்கு வந்து, உம்மக அகிலா பேர்ல அர்ச்சனையும், அன்ன தானமும் செய்தாங்க. அப்போ தான் தெரியும். ஆனாலும் இந்த மாதிரி மருமகளுங்க கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும் சகுந்தலா.''

''இந்தக் காலத்திலே புருஷன் மட்டும் இருந்தாப்போதும் அவனைச் சார்ந்தவங்களையெல்லாம் மனுஷனாக்கூட மதிக்கிறது இல்லை. ஆனா உன் வீட்டுப்பொண்ணுங்க எத்தனை அன்பு கொண்டதுகள் தெரியுமா. ம்... எல்லாத்துக்கும் ஒரு குடுப்பினை வேணும். என்னையே எடுத்துக்கோ, ஒரே பிள்ளைன்னு பெத்து வளர்த்தேன். என்ன புண்ணியம் வந்த மூணாவது மாசமே அவளைக் கூட்டிக்கிட்டு தனிக்குடித்தனம் போயிட்டா.''



ஏங்க! பேய்க்குப் பிடிச்சது முருங்கை மரமா? புளியமரமா?

ஏண்டி உனக்கு எந்த மரம் பிடிக்கும்ன்னு உனக்கே தெரியாதாக்கும்.

-தூரிகை ஸ்ரீராம், சாத்தூர்

''ஒரு வயசுக்கு மேல பிள்ளைங்க தான் நமக்கு எல்லாமேன்னு நினைக்கிறோம். ஆனா அதுங்களுக்கு அப்போ நாம பாரமா போயிட றோம். சரி உன் மருமகள்களை கேட்டதா சொல்லு. அப்போ நான் கிளம் புறேன் சகுந்தலா.''

அவள் கிளம்பவும் சகுந்தலா கல்லாய் அமர்ந்திருந்தாள்.

''பார்த்தியா சகுந்தலா யாரோ ஒருத்தி நம்ம குடும்பத்தைப் பற்றி அழகா சொல்லிட்டா. நீ இன்னும் கொஞ்சம் மனம் மாறணும்மா'' என் றார். அவர் பேச்சிற்குப் பலன் இருக்கத்தான் செய்தது.

வீட்டிற்குப் போனதும், மருமகள்கள் இருவரையும் கூப்பிட்டு தன் கையாலையே விபூதி, குங்குமம் பிரசாதம் நெற்றியிலிட்டாள் சகுந்தலா. சுந்தரம் புன்னகைத்தார். பெண்களிருவரும் அத்தையின் மனமாற்றத் திற்கு காரணம் புரியாமல் திகைத்தார்கள். அவள் காலில் விழுந்து வணங் கினார்கள்.

சாரதா முதியோர் இல்லம் வண்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டு இருந்தது. அன்றைய தினம் ஒரு மாதர் சங்க பெண்கள் வருவதாய் இருந்ததால் பரபரப்பாய் இருந்தார்கள்.

வரிசையாய் பளபளப்பான சேலை, நகையுடன் பெண்கள் வந்திறங் கினார்கள். எல்லாருக்கும் இனிப்பு வழங்கி முதியோர்களை இருட்டில் விடும் இளைய சமூகமே என்று கடுமையாக சாடி விட்டு விழா முடிவில் சமத்துவ உணவு உண்டு அனைவரும் இடத்தைக் காலி செய்ய, சகுந்தலா விற்கு மட்டும் அந்த இடத்தைச் சுற்றிக் காண வேண்டுமென்று தோன்றி யது.

அதனால் மவுனமாய் காலார நடந்து வந்தாள். அங்கிருந்த முதியவர்களின் வேதனையும், கண்ணீரும் மனதைப் பிசைந்தது. ஒரு வயதிற்கு மேல் பெரிய வர்கள் தங்கள் கவுரவம், தனித்தன்மை போன்றவற்றை ஒதுக்கி விட்டுத்தான் வாழ வேண்டும் என்ற உண்மை சுட்டது.

அது பார்வையாளர்கள் நேரம் என்ப தால், சிலர் தங்கள் உறவினர்களை சந் திக்க வந்திருந்தார்கள்.

சிலர் தங்களை சந்திக்க யாருமே வர வில்லையே என்று ஏக்கத்தோடு கண்ணீர் ததும்ப செல்வதைக் கண்டு கவலையாய் இருந்தது. ஒரு கணம் அந்த தாய்மார்க ளின் நிலையில் தன்னை நிறுத்திப் பார்த் தாள். நினைப்போ இறப்பது போல் இருந் தது.

சற்று தூரம் நடந்ததும் ஒரு தாய் மக னிடம் பேசுவது கேட்டது.

''அய்யா... ராஜா நல்லாயிருக்கி



''ராத்திரிக்கு தூக் கமே வரமாட்டேங்குது டாக்டர்''

''அப்ப பகல்லே தூங்க வேண்டியது தானே''

–முன்னிப்பட்டு
சண.சிவகுமார்.



யாய்யா, பிள்ளைங்களை கூப்பிட்டு வரக்கூடாதா.''

''நானே அவளுக்குத் தெரியாமத்தான் வந்தேன். இதுலே, அதுங்களை வேறயெங்கு கூட்டிட்டு வர்றது?''

''தொழில் எப்படிப்பா இருக்கிறது?''

''எங்கேம்மா ரொம்ப நொடிச்சு போயிட்டேன். இப்ப கூட கடன் கேட்கத்தான் போறேன். வரட்டுமா!'' அவன் அவசரமாய் செல்ல அந்த தாயின் மனம் வேதனையில் துடித்தது.

சகுந்தலா அந்த அம்மாவை நெருங்கினாள். ''அது தான் உங்க மகனா''

''ஆமாம்மா, நல்லவன் தான். தொழில்ல நஷ்டமாயிடுச்சு சரி பண் ணினதும் கூப்பிட்டுக்கறேன்னு சொல்லிவிட்டுப்போனான். வருஷம் ரெண்டாச்சு. ஒ ஹோன்னு இருக்கான். ஆனா என்னைத்தான் கூட்டிட்டுப் போக மனம் வரலை. ஆனாலும் பெற்ற கடனுக்கு கூட்டிட்டு போகணுங் கற உறுத்தல் மனசுக்குள்ள இருக்கு போல.'' அந்தத்தாய் செல்லவும் சகுந் தலா அந்த இல்ல நிர்வாகியை சந்திக்கச் சென்றாள்.

## 21

நிர்வாகி என்று எழுதப்பட்டு இருந்த அறைக்குள் அனு மதியோடு நுழைந்தவள் வணக்கம்மா என்றாள்.

''வணக்கம். உட்காருங்க உபசரித்து விட்டு, மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா. நீங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை'' என் றார் அந்த அம்மையார் பணிவுடன்.

''நான் உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறேன். உங்க ளின் சேவை சிறக்க என் வாழ்த்துக்கள். நான் சூர்யா பம்ப்ஸ் அண்ட் மோட்டார்ஸ் நடத்தி வரும் கதிரவனின் தாய். இந்த இல்லத்திற்கு டொனே ஷன் தரலாமின்னு இருக்கிறேன்.'' என்றாள் சகுந்தலா.

''இந்த இல்லம் நல்ல முறையில் இயங்குகிறது என்றால் அதற்கு உங் கள் மகனும் ஒரு காரணம் அம்மா.''

''கதிரவனை உங்களுக்குத் தெரியுமா?''

''அவரை மட்டுமல்ல ஜோதியையும் தெரியும். அவள் இந்த இல்லத் தில் தான் தொண்டு புரிந்தாள்.''

''ஒரு சில காரணங்களால் நான் ஜோதியுடன் இன்னும் சரிவர பேசுவ தில்லை.''

''அவ ரொம்பவும் நல்ல பொண்ணும்மா. என்ன அவங்க கல்யாணம் தான் கொஞ்சம் பிரச்சனையை உண்டு பண்ணிவிட்டது என்று நடந்த அத் தனையையும் விளக்கமாக கூறினார். ஜோதி எனக்கு சொந்த மகள் மாதிரி. இந்த இல்லத்திலே இருக்கிறே ஒவ்வொருத்தரும் இன்னமும் அவளு டைய அன்பிற்காக ஏங்குவது உண்மை.''

''இந்த இல்லத்திற்குத் தேவையான அளவு நிதி உதவி செய்து கொண்டு இருக்கிறார் உங்கள் மகன். அந்த உயர்ந்த குணம் உங்கக்கிட்ட இருந்து தான் வந்திருக்குன்னு இப்போதான் புரிகிறது. என்னம்மா சாப்பி றீங்க?''

''வேண்டாம்மா பசியில்லை. அப்போ நான் கிளம்பறேன். நேரம் கிடைக்கும் போது நான் இங்கே வந்து போகிறேன்.'' கைகூப்பி விடைபெற்றாள்.

வெளியே வந்தவுடனேயே மனதில் தன் பிள்ளைகளைப் பற்றிய எண்ணம் உயர்ந்து கொண்டே போனது. எதை எதையோ எண்ணிக் கொண்டு எத்தனை இன்பங்களைத் துறந்து இருக்கிறேன். மனதிற்குள் தன் அறியாமையை உணர்ந்தவாறே வீட்டுக்கு கிளம்பினாள்.



''உங்க ஜாதகத்தில் தோஷம் இருக்குது!''
''என் பொண்டாட்டி மறந்துட்டு வச்சிருப்பான் ஜோஸ்யரே...''
- வைகை ஆறுமுகம், வழுதூர்.

வீட்டுக்குள் நுழைந்த போது பெரும் வரவேற்பு அவளுக்கு காத்து இருந்தது. பெரிய பலூனை உடைத்து வாசலில் சகுந்தலா வரும்போதே பூக்களை அவள் மேல் தூவினார்கள்.

பின் எல்லோரும் ஒரே மூச்சில் கல்யாண நாள் வாழ்த்து கூறவும் சகுந்தலா திகைத்தாள் எப்படி மறந்து போனேன் என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

காலையில் மாலதி நடேசன், ''என்ன சக்கி இன்று எதும் விருந்து இல்லையா?'' என்று கேட்ட போது, பதில் சொல்ல வாயெடுக்கும் நேரத்தில் பார்கவி வந்துவிட பேச்சை துண்டித்து விட்டு வந்து விட்டாள்.

இத்தனை நாட்களும் அடுத்தவர்களுக்கு விருந்து வைத்து தன் கவுரவத்தை பறை சாற்றும் தினமாகத்தானே அதை கொண்டாடினோம் நினைப்பு தொண்டையில் கசப்பாய் இறங்கியது.

அத்தை இந்தப்புடவையைக் கட்டிக்கிட்டு வாங்களேன் பிளீஸ்,'' ஜோதி தந்த புடவையை மறுக்காமல் வாங்கிக் கொண்டு கட்டிக்கொண்டு வர. அதற்குள் சுந்தரம் பட்டு வேட்டி சட்டையில் இருந்தார்.

''ஹாலில் கேக் ஒன்று முளைத்து மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது.''

''இதெல்லாம் எதுக்குடா?'' சுந்தரம் சிணுங்க,

''இதெல்லாம் எங்க சந்தோஷத்திற்காக அப்பா...''

''கேக்கை கட் பண்ணுங்க'' என்று சொல்லவும், சகுந்தலா அழுதே விட்டார். எல்லோரும் பதறி விட்டார்கள்.

ஒரு இரண்டு நிமிடம் கழித்து சமாதானம் அடைந்தவள், ''இத்தனை அருமையான உறவுகளை நான் எத்தனை வேதனைப்படுத்திட்டேன்'' என்று மருமகள்களை அணைத்துக் கொண்டார்.

''அத்தே பழசெல்லாம் வேணாம்!

நம்ம வீடு இனிமே சந்தோஷத்தை மட்டும் தான் பார்க்க வேண்டும் முதல்ல நீங்க கேக்கை கட் பண்ணுங்க.''

மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன. அதை ஊதி கேக்கை சிறுசிறு துண்டுகளாக வெட்டினார்கள்.



சகுந்தலா ஒரு கேக் துண்டை எடுக்க, கையிலிருந்த ''கேக்கை யாருக்கு முதலில் ஊட்டப்போறீங்க அத்தை?''

அதை சிறு சிறு துண்டுகளாய் பிரித்து அனைவருக்கும் ஊட்டி விட்டாள். சுந்தரத்திற்கு கோல்ட் வாட்சும், சகுந்தலாவிற்கு வெள்ளி குங்குமச் சிமிழும் பரிசாய் தந்தனர்.

''இந்த வருடம் தான் மன நிறைவோடு என் திருமண நாளை கொண்டாடி இருக்கிறேன். யார் யாரையோ மதித்து என் உறவுகளை இழக்க காத்திருந்தேன்.

நல்ல வேளை கடவுள் என் கண்ணைத் திறந்து விட்டார். என் பிள்ளைகளின் அன்பை நான் புரிந்து கொண்டேன். இனி அவர்களுக்கு திகட்டத்திகட்ட அன்பை மட்டும் தரப்போகிறேன்.''

''அத்தே இந்த நல்ல நாளில் இன்னொரு சந்தோஷமான விஷயம் சொல்லவா?'' ஜோதி கேட்கவும் சகுந்தலா முகத்தில் பிரகாசம்.

''என்னம்மா...''

''அக்கா... அம்மாவாகி உங்களை பாட்டியாக்கிட்டாங்க''.

''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க அத்தை.'' சாந்தினி காலில் பணிந்தாள்.

''உன்னை நான் எத்தனை கஷ்டப்படுத்திவிட்டேன். என்னை மன்னித்து விடம்மா! என்னைப் புரிந்து கொண்டு எத்தனை பொறுமையாய் நீ நடந்து கொண்டாய்.''

''என்னை கோபிக்க உங்களுக்கு முழு உரிமையுண்டு அத்தை'' என்றாள் சாந்தினி.

மருமகளை அழைத்து உச்சி முகர்ந்து விட்டு, ''ஜோதி நீ எப்போம்மா நல்ல செய்தி சொல்லப்போறே?''

''கூடிய விரைவிலேயே!'' என்று சாந்தினி சொல்லவும் வெட்கத்துடன் ஓடினாள் ஜோதி. அங்கே சிரிப்பலை பரவியது. கதிரவன் மனைவியின் பின்னே ஓடினான்.

''ஜோதி உன்னைப் பார்த்த பின்பு தான் என் வாழ்வில் சந்தோஷக் காற்று வீசுகிறது.''

''எனக்கும் தான்.''

''சரி இப்போ சொல்லு உனக்கு பெண் குழந்தை வேண்டுமா இல்லை ஆண் குழந்தை வேண்டுமா''

''இரண்டுமே! சொல்லிவிட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு சிரித்தாள். கண்களில் நீர் வரும் வரை!''

''ஏய் என்னயிது!''

''இது என் அருமை காதலரை எனக்குரியவராக்கி வெற்றி கண்டுவிட்டதற்காய் பூத்திருக்கும் ஆனந்தக் கண்ணீர்''.

கதிரவன் வெகு ஆசையாய் அந்த ஜோதியினுள் தன்னைக் கரைத்துக் கொள்ள முயன்றான். இணை பிரியா இரவுகள் ஒவ்வொன்றிலும் அவர்களிடையே இன்பச்சாரல் வீசட்டும்.

முற்றும்